கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(19.03.2017 - 19 பங்குனி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 156, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருஅவை தலைமைப் பதவியில் நான்காம் ஆண்டு நிறைவில் வாழ்த்துகின்றோம் (2013 - 2017)



## கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினம் இவ்வருடம் 04.03.2017 அன்று சனிக்கிழமை தேவத்தை பெசிலிக்காவில் கர்தினால் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது



## பொது அறிவித்தல்

அனைத்து இறைமக்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் கடந்த மாதம் பேருவளை ஆலய திருவிழாவில் இடம்பெற்ற சம்பவத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான துயரகரமான சம்பவங்கள் விசேடமாக திருவிழா நேரங்களில் இடம் பெறக்கூடாது என கண்டிப்பாக தீர்மானித்து திருவிழா ஒழுங்குகளை கலந்தாய்வு செய்யும் குழு ஒன்றை நியமித்துள்ளேன்.

### குழு விபரம்

அருட்பணி. சாம் குயின்டஸ் பெரேரா அடிகள் - நெறிப்படுத்துபவர்
அருட்பணி எறிங்டன் சில்வா அடிகள்
அருட்பணி சமிந்த ரொஷான் அடிகள்
அருட்பணி. சிரான் தசா அடிகள்

இக்குழுவானது இந்நிகழ்வுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி மக்களுடன் கலந்துரையாடி அவ்விதிமுறைகளை எல்லா பங்குகளுக்கும் திட்டமிடப்படுவதன் மூலம் சிறந்த திருவிழா ஊர்வலங்களை இனிவரும் காலங்களில் நடாத்த தீர்மானித்துள்ளது. ஏனைய இடங்களில் இவ்வாறான ஊர்வலங்கள் சிறப்பிக்க வேண்டியிருந்தால் அரசாங்க விதிமுறைகளையும், விழுமியங்களையும் புதிதாக நியமிக்கப்பட்ட குழுவின் விதிமுறைகளையும் பின்பற்றுவதோடு எனது முழு அனுமதியோடு மட்டுமே சிறப்பிக்க வேண்டும் என்று மிகவும் கண்டிப்பாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
பேராயர் - கொழும்பு உயர் மறைமாவட்டம்

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் பங்கு தரிசிப்பு



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் பங்குனி மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் மட்டக்குளி புனித மரியாள் பங்கிற்கு தனது மேய்ப்புப் பணி தரிசிப்பினை மேற்கொண்டிருந்தார். இவ்விரு நாட்களும் பங்கு ஆலோசனை சபை உறுப்பினர்கள், வட்டாரத் தலைவர்கள், ஏனைய சபை கழக உறுப்பினர்கள், பங்கு மக்கள் என அனைவரையும் சந்தித்து பங்கு வளர்ச்சி தொடர்பான விடயங்களை கலந்துரையாடினார். ஞாயிற்றுக்கிழமை திருப்பலி நிறைவேற்றி குறிப்பாக அன்றைய நாள் புதிதாக அன்னைக்கு ஒரு குகையை கட்டுவதற்காக அடிக்கல்லையும் வைத்தார். இந்நிகழ்வுகளை எமது பங்குத்தந்தை அருட்பணி பிரான்சிஸ் லொயிட் (அ.ம.தி) அடிகளார் சிறப்பாக ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது.

## சிலுவையை உற்று நோக்குவோம்



தவக்கால திறந்த வெளி சிலுவைப்பாதை
☛15

## பேராயரின் அதிகாரப் பூர்வமான வேண்டுகோள்

### கொழும்பு உயர் மறைமாவட்ட பங்கு மேய்ப்புப் பணி பேரவையின் புதிய இயல்பு நிலை

ஒரு பங்கின் மேய்ப்புப்பணி சபை சூழ்நிலைகள் தூண்டும் அளவிற்கு மேய்ப்புப்பணி பேரவை ஒன்றை நிறுவ வேண்டும். இவை மேய்ப்புப்பணி சார்ந்த காரியங்களை ஆய்வதும், கவனமாக சீர்த்தூக்கிப் பார்ப்பதும் அவற்றிற்கான நடைமுறை முடிவுகளை முன்வைப்பதும் அதன் பணிகள் ஆகும்.

மேய்ப்புப்பணி பேரவையானது கத்தோலிக்க திருச்சபையுடன் முழுமையான உறவு ஒன்றிப்பில் உள்ள கிறிஸ்தவ விசுவாசிகளைக் கொண்டுள்ளது.

மேய்ப்புப்பணி பேரவை மறைமாவட்ட ஆயரால் நிர்ணயிக்கப்பட்ட (திச. 536) விதிகளால், அது நெறிப்படுத்தப்படுவதோடு, கொழும்பு உயர் மறைமாவட்ட புதிய மேய்ப்புப்பணி திட்டங்களில் கால மாற்றங்களை பங்குகளில் உருவாக்கப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் குருக்களின் ஆலோசனை குழுவும், கல்லூரி ஆலோசகர் குழுவும் இணைந்து செம்மைப்படுத்தும் பொருட்டு புதிய மாற்றங்களை எதிர்வரும் மூன்று மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

கடந்த 2016, புரட்டாதி 1ஆம் திகதி, பங்கு மேய்ப்புப்பணி பேரவையினருக்கு வழங்கப்பட்ட நிபந்தனைகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, இவ்வியல்பின் அடிப்படையில் செயல்படவும், கீழ்வரும் நிபந்தனைகளை பின்பற்றவும் கடமைப்பட்டுள்ளனர்.

1) பங்கு மேய்ப்புப்பணி சபையின் தலைவராக பங்குத்தந்தை இருப்பார். பங்குத்தந்தை பங்கு மக்களின் விசுவாசத்தை பாதுகாக்க வேண்டும்.

2) பங்குத்தந்தையோடு பங்கு மேய்ப்புப்பணி அங்கத்த-வர்களும், அவர்களோடு உதவிபங்குத்தந்தை மற்றும் துறவற சபைப் பொறுப்பாளரும் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

3) முடிந்தளவு ஒரு பகுதி அங்கத்தவர்கள் வாக்கெடுப்பு மூலமும், சிறு கிறிஸ்தவ குழுக்கள் மூலமாகவோ அல்லது வட்டார ரீதியாகவோ, அல்லது ஏனைய அமைப்புகளின் ஊடாக ஒருவரை தெரிவு செய்யலாம்.

4) பங்கின் பல்வேறு தேவைகளைப் பற்றி கலந்தாலோசிக்கவும், கிறிஸ்தவ பாடசாலைகளின் தேவைகளை அறியவும் ஒருவரை தெரிந்தெடுத்தல்.

5) பங்கு மேய்ப்புப்பணி கூட்டம் ஒரு வருடத்திற்கு நான்கு முறையேனும் கூட்டப்பட வேண்டும். இக்கூட்டம் பற்றி முன்கூட்டியே பங்கு மக்களுக்கும், பங்குத்தந்தைக்கும் அறியப்படுத்தப்படவேண்டும். இக்கூட்டம் பங்குதந்தையின் வருகை இல்லாமல் பங்குச்சபை கூட்ட முடியாது.

6) அங்கத்தவர்கள் பங்குத்தந்தைக்கு எவ்வேளை-யிலும், எல்லாப் பிரச்சினைகளிலும் அவரோடு இணைந்து செயல்படவும் தீர்மானம் எடுக்கவும் பங்கின் வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டும்.

7) பங்கு மேய்ப்பணிச் சபையானது தங்கள் திட்டத்தை செயல்முறைப்படுத்த சரியான பொருத்தமான குழுவை உருவாக்குதல் மூலம் ஏனைய பங்குகளுக்கும் உதவுதல்.

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
பேராயர் - கொழும்பு உயர் மறைமாவட்டம்

☛15

சித்திரை மாதம் 02ஆம் திகதி வெளிவரும் ஞான ஒளி பத்திரிகையானது, உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழாக 09.04.2017 அன்று வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்!!!

இறைவா, இதோ உம் திருவுளம் நிறைவேற்ற நான் வருகின்றேன்" திபா 40

# சிறுவர் மரியாயின் சேனையும் தவக்கால தியானமும்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள தேவாலயங்கள், கிறிஸ்தவ பாடசாலைகள் ஆகியவற்றில் இயங்குகின்றதும், தமிழ் சிறுவர் பிரசீடியங்களின் மேற்சபையான திருச்சபையின் மாதா சிறுவர் கியூறியாவுடன் இணைந்துள்ளதுமான சிறுவர் பிரசீடியங்களைச் சார்ந்த சிறுவர்களுக்கான தவக்கால உள்தியானம் எதிர்வரும் 25.03.2017 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை கொழும்பு - 12 புதுக்கடையில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மரியாயின் சேனையின் தேசிய இயக்குனர் அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அவர்களின் தலைமை ஏற்பாட்டில் இத்தியானங்களை அருட்பணி ஜோய் மரியரட்ணம் (சி. எம்.எவ்) அருட்சகோதரி தயாளினி (அப்போஸ்தலிக்க கார்மேல் சபை) அருட்சகோ. பொணிவென்சர் (அதிபர் புனித ஆசீர்வாதப்பர் ஆரம்பக் கல்லூரி) ஆகியோர் ஒன்றிணைந்து இத்தியானத்தை வழிநடாத்துகின்றனர். சேனைக் கைநூல் வழிகாட்டற் குறிப்பிலுள்ள அருட்தந்தை 11ம் பத்திநாதர் குறிப்பானது "சேனை உட்தியான நாட்கள் மிகவும் புனிதமானவை. புனிதம் வாய்ந்த இந்நாட்களில் தான் சேனையாளர்கள் தம் ஆன்மாக்களின் விலை மதிப்பைக் கண்டு பிடிப்பார்கள். இதன் பயனாக அவர்கள் ஆன்மாக்களுக்காக உழைக்க ஆவல் கொள்கின்றனர்" எனக் கூறுகின்றது. இதற்கமைவாக சேனைக் குறிக்கோளான தன்னை புதுப்பிப்பதன் வழியாக ஏனைய ஆன்மாக்களை இறைவனிடம் அணுகச் செய்தல் என்பதை அடையுமாறு சேனையார் செய்யும் சேவைகளுக்குரிய தைரியமும், விடா முயற்சியும், ஊக்கமும் இத்தியானங்களின் பெறுபேறாக கிடைக்கப் பெறுகின்றது. கொழும்பு உயர்மறை மாவட்டத்திலமைந்த பாடசலைகளிலும், பங்குகளிலும் இயங்குகின்ற சுமார் 20 தமிழ்ப் பிரசீடியங்களைச் சேர்ந்த சிறுவர் பிரசீடிய உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். சேனையின் அப்போஸ்தலிக்க சேவையில் உள்ள தொடர்பாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் இவர்கள் உதவியுடன் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குகளிலும் கிறிஸ்தவ பாடசாலைகளிலும் அங்கம்பெறும் தமிழ் சிறுவர்களுக்கான பல பிரசீடியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல முன்னைய காலங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன, இருப்பினும் கடந்தகால இனமுரண்பாட்டுக் கலவரங்கள் காரணமாக இவற்றில் பல இயங்காமல் நிறுத்தப்பட்டிருந்தன. காலத்தின் தேவை கருதி இவை மீண்டும் இயங்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதற்கு மரியன்னையின் ஆண்டை முன்னிட்டு புதிய பாலர் பாலர் பிரசீடியங்களை பங்குகளிலும் பாடசாலைகளிலும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கக் கோரும்படியான கருதினால் அவர்களின் அண்மைய சுற்றறிக்கை மிகவும் துணைபரிந்துள்ளது.

இந்த மீளமைத்தல் விஸ்தரிப்பு செயற்பாடுகளுக்கு மரியாயின் சேனையின் தேசிய ரீதியிலான அதிமேற்சபையாக, அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அவர்களை தேசிய தலைமை ஆன்ம இயக்குனராகக் கொண்டு இயங்கும் இலங்கை செனாத்துஸ் சபையின் கீழ் இயங்கும் மறைமாவட்ட மட்டத்திலான சிறுவர் கியூறியாக்கள் பொறுப்பாக இருந்து செயற்படுகின்றன. கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் திருச்சபையின் மாதா பாலர் கியூறியா தமிழ் சிறுவர் பிரசீடியங்களுக்கு பொறுப்பான மேற்சபையாக இயங்குகின்றது. இக்கியூறியா, கியூறியாக்களின் ஆட்சி மேற்சபையான கொமித்சியத்தின் கீழ் இயங்குகின்றது. கொழும்பு உயர்மறை மாவட்டத்தில் இயங்கும் வளர்ந்தோர் கியூறியாக்களினதும், சிறுவர் கியூறியாக்களினதும் மேற்சபையாக பரிகாரமாதா கொமிசியம் இயங்குகின்றது. இவ்வாறே சிங்கள, ஆங்கில பிரசீடியங்களுக்கும் தனித்தனியாக மேற்சபைகளும் கொமிசியங்களும் அமைந்துள்ளன. இதில் மும்மொழியிலுமமைந்த சிறுவர் கியூறியாக்கள் மூன்றும் ஒன்றிணைந்து தற்போது தத்தம் மொழிமூலமான பிரசீடியங்களை ஆரம்பிக்கவும், பழைய பிரசீடியங்களை மீளமைத்து விஸ்தரிக்கவும் வேண்டிய வேலைகளை காலத்தின் தேவையறிந்து தற்போது முடுக்கி விட்டுள்ளன. இதனடிப்படையில் அவை பங்குகளுக்கும் பாடசாலைகளுக்கும் நேரில் சென்று பொறுப்பு வாய்ந்தவர்களுடன் பேசி அனுமதி பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர். அண்மையில் தமிழ் பாலர் பிரசீடியங்கள் கொழும்பு உயர் மறைமாவட்டம், களுத்துறை மாவட்டம், உள்ளிட்ட அவிசாவளை, நீர்கொழும்பு, மத்துகம, கொரண, புளத்சிங்கள போன்ற பகுதிகளிலும்ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. கொழும்பு மறைமாவட்டத்தில் கொச்சிக்கடை புனித அன்னம்மாள் மகளிர் பாடசாலை, புனித அந்தோனியார் ஆண்கள் பாடசாலை, கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பாடசாலை, கொட்டாஞ்சேனை நல்லாயன்...

➲15 பக்கம்

## 2017ம் ஆண்டிலிருந்து மறையாசிரியர் தேர்வுகளில் பெயர் மாற்றம்

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற மறையாசிரியர் பரீட்சைகளின் பெயர்கள் இவ்வாண்டிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். அதன்படி,

| முன்னைய பெயர் | தற்போதைய பெயர் |
| --- | --- |
| 1. மறையாசிரியர் தேர்வு | 1. மறையாசிரியர் முதல் தேர்வு |
| 2. மறையாசிரியர் சிறப்புத் தேர்வு | 2. மறையாசிரியர் இடைநிலைத் தேர்வு |
| 3. மறையாசிரியர் கௌரவப்பட்டத் தேர்வு | 3. மறையாசிரியர் இறுதித் தேர்வு |

2) மறையாசிரியர் இடைநிலைத்தேர்வுக்குத் தோற்றுவதாயின், ஏற்கனவே நடைமுறையில் இருந்ததைப் போன்று பரீட்சார்த்தி (மறையாசிரியர்) மறைப்பாடசாலையிலே கட்டாயம் கற்பிக்க வேண்டும். இது, மறையாசிரியரின் பயிற்சியை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு தொடர்ந்தும் செயற்படுத்தப்பட வேண்டுமென ஆயர் மன்றம் தீர்மானித்துள்ளது.

3) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2015ம் ஆண்டிலிருந்து நடாத்தப்படும் மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு அதே பெயரில் நடாத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

2017ம் ஆண்டிலிருந்து மறையாசிரியர் தேர்வுகளுக்குத் தற்போதைய பெயர்கள் பயன்படுத்தப்படும்.

## 2017 ஆய்வு கட்டுரைத் தேர்வு

1. 2016ம் ஆண்டில் நடாத்தப்பட்ட மறையாசிரியர் இறுதித் தேர்வில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகளுக்கு, அத் தேர்வின் அடுத்த கட்டமான ஆய்வு கட்டுரை எழுதுவதற்கான தலைப்புகளை ஏற்கனவே அனுப்பிவிட்டோம்.
2. இதுவரை ஆய்வு கட்டுரைத் தலைப்புகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் உடனடியாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
3. பரீட்சார்த்திகள் தமது மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களுக்கு தமது ஆய்வு கட்டுரைகளை கையளிக்க வேண்டிய இறுதி நாள் 2017 ஆடி 15ம் திகதியாகும்.
4. தயவு செய்து உரிய காலத்தில் உங்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பிக்கவும். அவை உங்கள் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் மூலம் எமக்கு (தேசிய மறைக்கல்வி நிலையத்திற்கு) அனுப்பி வைக்கப்படும்.

**எமது தொலைபேசி இலக்கம்**
**011 2685459**

**தகவல் : அருட்சகோதரி ரஞ்சி போல்துரை**
**பரீட்சை ஒழுங்கமைப்பாளர்**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம் கொழும்பு – 08**

## மறையாசிரியர் இறுதித் தேர்வு (கௌரவ பட்டத் தேர்வு) பற்றிய விளக்கம்

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் மறையாசிரியர்களுக்காக வருடந்தோறும் மூன்று தேர்வுகள் நடாத்தப்படுகின்றன.

அவை:-

- மறையாசிரியர் முதல் தேர்வு
- மறையாசிரியர் இடைநிலைத்தேர்வு
- மறையாசிரியர் இறுதித் தேர்வு என்பனவாகும்.

இத்தேர்வுகள் கார்த்திகை மாதம் மூன்றாம் வார இறுதியில் நடாத்தப்படுகின்றன. இவற்றில் மறையாசிரியர் முதல் தேர்வு, மறையாசிரியர் இடைநிலைத் தேர்வு ஆகியவற்றின் விடைத்தாள்கள் அதே ஆண்டிலேயே திருத்தப்பட்டு, பெறுபேறுகளும் நற்சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மறையாசிரியர் இறுதித் தேர்வு மூன்று நிலைகளாக நடாத்தப்படுகின்றன. அவை:

எழுத்துத் தேர்வு

ஆய்வு கட்டுரைத் தேர்வு

செயல்முறைத் தேர்வு ஆகும்.

இந்த மூன்று நிலைத் தேர்வுகளும் இரு வருடங்களாக நடைபெறும். எழுத்துத்தேர்வில் சித்தி பெற்றவர்கள் மட்டுமே தேர்வின் அடுத்த கட்டமான ஆய்வு கட்டுரை எழுதுவதற்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நடைப் பெற்ற ஆண்டைத் தொடர்ந்து வரும் வருடத்தில் பங்குனி மாதத்திலிருந்து ஆடி மாதத்திற்குள்ளான காலம்....

➲15 பக்கம்



வெலிமடை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 2017ம் ஆண்டு முதல் நன்மை பெற்றுக்கொண்ட மாணவர்களும், பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய சுனில் அடிகளாரும், உதவிப் பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய வரதன் குரூஸ் அடிகளாரும், அருட்சகோதரி ரஞ்சினி அவர்களும் மற்றும் மறையாசிரியைகளும் படத்தில் காட்சியளிக்கின்றனர்.

**தகவல் : A. சிமோன், வெலிமடை பங்கு**

## புனித வாரம்

**வாசக பணியாளர்களுக்கு**

முன்னுரை, வாசகங்கள், நம்பிக்கையாளர் மன்றாட்டு

## புனித வாரம்

**அருட்பணியாளர்களுக்கு**

ஐந்து தினத்துக்குறிப்பு, மறை உரை குறிப்புக்கள், வழிபாட்டுக் குறிப்புக்கள், வழிபாட்டு ஆயத்தங்கள், சகல நற்செய்திகள், பொது மன்றாட்டுக்கள், திருமுழுக்கு வழிபாடு

30/03 முதல் பொரளை கத்தோலிக்க புத்தகச்சாலை மற்றும் கொச்சிக்கடை சுகுமார் கடையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தகவல் : அருட்பணி. இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம்.**

## திருநீற்றுப் புதன் என்ன சொல்லுகிறது...?

**மண்ணிலே பிறந்த நீ திரும்பவும் மண்ணுக்கே செல்வாய் – அன்று**

**மனந்திரும்பி நற்செய்தியை விசுவசியுங்கள் – இன்று**



இரத்தினபுரி பேராலய உதவிபங்குத் தந்தை அருட்பணி. சம்பத் அடிகளார் திருநீறு பூசுகின்றார்.

அருட்தந்தை வழமைபோல் இறைமக்களின் நெற்றியிலே திருநீற்றைக் கொண்டு சிலுவை அடையாளம் வரைந்து மேற்கூறிய வார்த்தைபாடுகளில் ஒன்றைக் கூறி மரணம் என்று ஒன்று நம் எல்லோருக்கும் உண்டு என்பதை நினைவு படுத்துவதோடு 2017ம் ஆண்டுக்கான தவக்காலத்தை ஆரம்பித்து வைத்தார். நாமும் எமது தாய் திருச்சபையுடன் இணைந்து திருப்பலியில் பங்குகொண்டு, திரு நீரும் பூசிக்கொண்டு தவக்காலத்தை மிக்க மகிழ்ச்சியோடு ஆரம்பித்துக் கொண்டோம். அந்த நிமிடம் தொடங்கி...

➲15 பக்கம்

## குழந்தை இயேசுவே உம்மைப் போல் எம் குழந்தைகளையும் ஆக்கியருளும்!



கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான அவிசாவளைப் பங்கின் சகோதர ஆலயமான கொல்பின் புதுக்குடியிருப்பு கிராம குழந்தை இயேசு ஆலய வருடாந்த திருவிழா கடந்த 2017.02.17 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 18ந் திகதி மாலை ஆராதனையை அருட்பணி. ரூபன் அடிகளார் (கிளேரிசியன்) தலைமைத் தாங்கினார். திருநாட் திருப்பலியை அவிசாவளை பங்குத் தந்தை அருட்பணி லக்நாத் குரே அடிகளாரும் உதவி அருட்பணி செபஸ்தியன் அடிகளாரும், அருட்பணி. ரூபன் அடிகளாரும் ஒப்புக்கொடுத்தனர். திருப்பலி முடிந்ததும் குழந்தை இயேசுவின் திருச்சுரூபத்தை ஊர்வலமாக இறைமக்கள் தோளில் சுமந்து வருவதையும் படத்தில் காணலாம்.

**தகவல் : மேரி இருதயநாதன், இரத்தினபுரி**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
19, பங்குனி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## உள்ளார்ந்த நேர்மையான மனமாற்றம் கடவுளின் மனத்தையே மாற்றிச் செயற்பட வைக்கும்

தேன்கூட்டில் இருக்கும் தேன் இனிமையானது. இதுபோன்று நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் எப்போதும் பிறருக்கு மகிழ்ச்சியையும் மனமாற்றத்தையும் தரவேண்டும். தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். தவக்காலத்தின் சிறப்பே மனமாற்றமாகும். மனந்திரும்பாவிடில் அழிவீர்கள் என்று எச்சரிக்கும் இயேசு மனந்திரும்ப இறைவன் மீண்டுமாக தரும் சந்தர்ப்பமே தவக்காலம் ஆகும். இதை நாம் காய்க்காத அத்திமரம் கதையினூடாக பார்க்கின்றோம். இறைவன் மனிதனின் அழிவை விரும்பாதவர். அவன் வாழ்வு பெற வேண்டும் என்று எண்ணுபவர். ஆனாலும் மனிதன் தவறுகளும் பிழைகளும் புரிந்திடும்போதெல்லாம் உடனடியாக தண்டிக்க மாட்டார். காலந்தாழ்த்துபவர். பொறுமை காப்பவர். இதற்காக பல வழிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தந்து நாம் மனமாறும்வரையில் ஆசையோடு காத்திருப்பவர். உள்ளார்ந்த நேர்மையான மனமாற்றம் கடவுளின் மனத்தையே மாற்றிச் செயற்பட வைக்கும் என்பதை திருவிவிலியத்தில் நினிவே நகர மனமாற்றம்இ இறைவாக்கினர் எரேமியாவிற்கு அளிக்கப்பட்ட இறைவாக்கு மற்றும் சிலை வழிபாட்டில் இன்பம் கண்ட இஸ்ரயேலருக்கு பரிந்துரை செய்த மோசேயின் வேண்டுதல் என பல நிகழ்வுகளைக் காண்கின்றோம். ஆக நல்ல மனிதர்களாக, மனிதத்துவம் நிறைந்தவர்களாக வாழ்வதற்கு இத்தவக்காலத்தைப் பயன்படுத்தி மனமாற்றம் பெறுவது அவசியமானதாகும்.

இம்மாதம் 19ம் திகதி விசேடமாக தூய யோசேப்பை திருச்சபையானது நினைவுகூர்கின்றது. இவர் மனித நேயம் கலந்த நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்த நேர்மையாளர். இவரது நம்பிக்கையானது எல்லைக் கடந்த சோதனைக்கு ஆளானது. நம்பிக்கைக்கு எதிராக நம்பியவர். தூயவர்கள் என்போர் சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்லர். மாறாக அவர்களும் சிக்கல்களை, பிரச்சினைகளை, சோதனைகள் இவைகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்தவர்கள். இவரது வாழ்க்கை என்றும் மலர்ப் படுக்கையாக இருந்த-தில்லை. மரியா கருவுற்ற செய்தி கேட்டு எவ்வளவுப் பெரிய அதிர்ச்சிக்கும் மனக்குழப்பத்திற்கும் ஆளானவர். இறைத்திட்டத்தை நிறைவேற்றுவது அல்ல மாறாக இறை விருப்பத்தைவிட மேலானது இவ்வுலகில் வேறொன்றில்லை என உணர்ந்தவர்.

பரிசுத்த திருச்சபையானது இம்மாதம் 25ம் திகதி கபிரியேல் வானதூதர் மரியன்னைக்கு மங்கள வார்த்தை கூறியதை நினைவுகூர்கின்றது. “அருள் மிகப் பெற்றவரே வாழ்க” வானதூதர் வழியாக மரியன்னைக்கு சொல்லப்பட்ட முதல் வார்த்தை இதுதான். மரியாவின் சிறப்புமிக்க செயற்பாடுகள் அனைத்திற்கும் மூலக்காரணம் கடவுளின் அன்பும் பரிவிரக்கமும் என்பதை இவ்வாழ்த்து எடுத்துக் கூறுகின்றது. இறைமகனுக்கு தாயாகும் பேற்றினைப் மரியா பெற்றது தனது தகுதி மற்றும் உரிமையினாலோ அல்ல. மாறாக இறைவனின் பேரன்பினால் ஆகும். நமது வாழ்விலும்கூட நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஏதோ ஒரு விதத்தில் இறைவனின் அன்பையும் ஆற்றலையும் சுமந்து வருகின்றது என்பதை நாம் உணர வேண்டும். இறைவனின் உடனிருப்பு எப்போதும் எம்மோடு கூடவே இருக்கின்றது என்பதை நாம் முழுமையாக நம்புவோம். இத்தவக்காலத்தை நல்லதொரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி முழுமையாக எம்மை இறைவனுக்கு கொடுப்போம். நாம் இடமளிக்காத வரையில் மனமாற்றமும் நிகழாது. தவக்காலமும் பொருள் தராது.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**



# மனமாற்றமே மீட்பின் பாதை

“நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்!”

தான்தே (Dandte) என்ற ஆங்கிலக் கவிஞர் தனக்கு வந்த இறைவெளிப்பாடுகளையெல்லாம் மிக அழகாகக் கவிதை வடிவிலும், காட்சி வடிவிலும் எழுதினார். அவரின் படைப்புக்கள் முழுமையும் அநேக மறையுண்மைகளை வெளிப்படுத்து-வதாகவே இருக்கின்றன.

ஒருநாள், தன் கனவில் இவ்வாறு கண்டார் :
உன்னத விண்ணகம் மலையில் இருக்கிறது. அம்மலையின் உயரத்திலுள்ள விண்ணகத்தின் நுழைவாயிலுக்கு மூன்று பெரிய பாதைகள் இருக்கின்றன.

*முதல் பாதை*, கண்ணாடி போன்று மிகவும் பளபளப்பாக, நடப்பவர்களின் முகங்களைப் பிரதிபலிக்கும் அழகுத் தோற்றத்தில் அமைந்-திருந்தது. *இரண்டாம் பாதை*, சற்று கரடுமுரடான கற்களால் அமைக்கப்பட்ட கடுமையான பாதையாய் இருக்கிறது. *மூன்றாவது பாதையோ*, செந்நிறத்தில் இரக்கத்தின் சுவடுகளைக் கொண்ட பாதையாய் இருந்தது.

முடிவில் வானதூதர் நுழைவாயிலைத் திறக்கும் 4 சாவிகளையும் புனித பேதுருவிடமிருந்து பெற்று வைத்திருக்கிறார்.

முதல் பாதையோ, இறைவன் இயேசு மீதுகொண்ட மிகுயான அன்பினால், பாவத்தை ஒப்புரவு அருளடையாளத்தில் வெளியிட்டு, கண்ணீர் வடித்து, மன்னிப்படைந்து புனித நிலை நோக்கிச் செல்லும் ஆன்மாவைக் குறிக்கிறது.
இரண்டாம் பாதையோ, ஒப்புரவு அருள-டையாளத்தில் குருவானவரின் அறிவுரையைக் கேட்டு தன் பாவத்திற்காக மனம் வருந்தி அழும் ஆன்மாக்களைக் குறிக்கிறது. மூன்றாம் பாதையோ, கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பால் இரத்தம் சிந்தி மரிக்கும் அளவுக்கு தன்னையே புனித வாழ்வுக்கு ஒப்புக்கொடுக்கும் ஆன்மாக்களைக் குறிக்கிறது!

இவ்வாறு தான்தே தன் நூலில் விண்ணகத்தின் மூன்று வழிகளைக் குறிப்பிடுகின்றார். திருவிவிலி-யத்தின் மிக அழகான வசனம் இது :
*‘நான் புறப்பட்டு என் தந்தையிடம் போவேன்’ (லூக் 15:17)*
காணாமல் போன இளைய மகன் உவமையில், தன் தந்தையின் அன்பையும், உரிமைகளையும் இழந்து பாவ வாழ்வின் இன்பம் பெரிதெனச் செல்லும் மகன் தீமையின் வாழ்வை உணர்ந்து கண்ணீர் வடிக்கின்றான்.
*‘உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்’ (லூக் 15:18)*
எனக்கூறி அழுது மன்னிப்புக் கேட்கும் மனப்பான்மையுடன், *‘எழுந்து என் தந்தையிடம் போவேன்!’* என்கிறான்.

அவ்வாறு செல்லும் பாவியான மகனை எதிர்பார்த்து ஏற்றுக்கொண்டு, அரவணைத்து ஆசீர்வதித்து அனைத்துக் கொடைகளாலும் நிரப்பும் தந்தையைக் காண்கிறோம்.
இதில் இறைவனின் மனதுருக்கமான அன்பு வெளிப்படுத்துவதைத்தான் முதலாம் பாதை குறிக்கிறது.
இரண்டாம் பாதை மனவேதனைகளில் தன் பாவத்திற்காய்க் கண்ணீர் வடிக்கும் பாவியின் நிலையைக் காட்டுகிறது.


புனித பேதுரு, இயேசு கிறிஸ்துவை அவரின் துன்பம் தொடங்கும்பொழுதே விட்டுவிட்டு ஓடிப் போகிறார். *‘இயேசுகிறிஸ்துஎன்றஆளைஎனக்குத்தெரியாது’* என்ற மறுதலிக்கிறார். இயேசு முன்னறிவித்தபடியே கோழி கூவுமுன் மும்முறை மறுதலிக்கிறார். தன் பாவத்திற்காய்க் கண்ணீர் வடிக்கிறார். குறிப்பாக, இரவு முழுவதும் இயேசு தலைமைக் குருக்களாலும் மூப்பர்களாலும் சித்ரவதைகள் செய்யப்பட்டு, செந்நீர் வடிக்கும் நிலையை நேரில் கண்டு, பேதுரு வாழ்நாட்கள் முழுவதும் கண்ணீர் வடிக்கிறார்.

மூன்றாம் பாதையோ கல்வாரி மலையில் இயேசுவுடன் சிலுவையில் தொங்கும் நல்ல கள்வனைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து கள்வர்களில் ஒருவராய் எண்ணப்பட்டு பாடுகளைச் சிலுவையில் அனுபவிக்கிறார். மனிதனைவிட கீழான கொடியநிலைக்கும் தள்ளப்பட்ட பரிதாபக் காட்சியைக் கண்டாலும், அந்தக் கள்வர், இயேசுவைப் பாவிகளை இரட்சிக்கும் மீட்பர் என்றே விசுவசிக்கிறார். தன் பாவத்தை ஏற்று மனம் வருந்தி, *‘நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவில் கொள்ளும்’* என்கிறார். சிலுவையில் கொடிய வேதனையை அனுபவித்தவாறே இயேசு, *‘நீ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்!’* என்று அவருக்குக் கூறுகிறார். இதுவே மூன்றாம் பாதையைக் குறிக்கிறது.

ஆண்டவர் இயேசுவின் மனதுருக்கத்தை உணர்ந்து மனந்திரும்பும் உள்ளத்துடன் இயேசுவின் மீட்பின் வழியில் செல்வோம்

**செபம் : அன்பின் இயேசுவே நாங்கள் விண்ணக மகிமையில் பங்கு பெறுவதற்காக, நீர் காட்டிய சிலுவை வழியில் நடக்கும் ஆற்றலைத் தாரும்!**

## உண்மை உறைக்கும் கமிலஸ்






## விவிலியத்தை புரட்டிப் பார்க்கும்பொழுது

- நோவாவின் நாட்களில் 40 இரவும் 40 பகலும் மழை பெய்தது ஏன்? *தீயவர்களின் அழிவின் பின் நல்லவர்களை கடவுள் சந்திக்க.*
- இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் 40 வருடங்கள் பயணம் செய்தார்கள் : *புதிய வானமும், புதிய பூமியைக் காண*
- மோயீசன் சீனாய் மலையில் 40 பகலும் 40 இரவும் செலவிட்டார் : *படைத்தவரைப் பார்க்க, அவருடன் பேச*
- எலியாஸ் ஆண்டவரின் அப்பத்தை உண்டு 40 பகலும் 40 இரவும் பயணம் செய்தார், *அழைத்த இறைவனை சந்திக்க*
- நினிவே மக்களும், மன்னனும் 40 நாட்கள் உண்ணா நோன்பு இருந்தனர், *இறைவனிடம் மன்னிப்பு கேட்க*
- இயேசு பாலைவனத்தில் 40 பகலும் 40 இரவும் செலவழித்தார் : *மீட்பை விடுதலையை பெற்றுத்தர*

**விவிலியத்தில் இருந்த 40 நாட்கள்**

- புனித நாட்கள், பல புனித நோக்கங்களை அடைய பயன்படுத்தம் நாட்கள். இது ஒரு புனித காலம், அருளின் காலம் நம் வாழ்வில் இக்காலத்தில் பல மாற்றங்களை மேற்கொள் கின்றோம். அடிப்படையில் தேவையானது - மனமாற்றம் யோவேல் இறைவாக்கினர் *'உங்கள் உடைகளை அல்ல உள்ளங்களை கிழித்துக் கொள்ளுங்கள்'* என்றார்.

அதற்கான வழி?

***இறைவார்த்தையைக் கேட்போம்***
***வார்த்தை வழி வாழ வரம் கேட்போம்***
***செபத்துடன்நோன்பிருப்போம் ஏனெனில்***
***செபமும் நோன்பும் அருளுக்கு இரு கண்கள்.***

## நோன்பிருப்பதற்கு இருபது காரணங்கள்



1. உடலையும் உயிரையும் ஆன்மாவையும் சுத்தப்படுத்தித் தூய்மையாக்க.
2. இறைவனது வழிகாட்டுதலையும் வெளிப்பாட்டையும் பெற்றுக்கொள்ள.
3. இறைவனது திருமுகத்தை நாடி அவரோடு இன்னும் நெருங்கிய உறவு கொள்ளும்படியாக.
4. இறைவனது குரலை நன்கு செவிமடுத்து அவரது திருவுளத்தை இன்னும் நன்றாக அறிந்து கொள்ளும்படியாக.
5. இறைவனின் வல்லமை உங்கள் ஊடாக ஆற்றலுடன் பாய்ந்து செல்ல வேண்டும் படியாக.
6. ஆன்மீக வலிமையும் மேலாட்சியுமுடைய நிலையை ஏற்படுத்துவதற்காக.
7. உங்களுக்குள் இருக்கும் எந்த அடிமைத்தனத்தையும் தகர்ப்பதற்காக.
8. மனத் தெளிவைப் பெறுவதற்காக.
9. தீங்கான அல்லது தளர்ச்சி தரும் எண்ணங்களிலிருந்து விடுபடுவதற்காக.
10. மனச்சோர்வை மேற்கொள்வதற்காக.
11. உங்கள் வாழ்வில் அலகையின் வலிமையைக் குன்றச் செய்வதற்காக.
12. வாழ்வு கைம்மீறிச் செல்வதுபோல் தோன்றும் போது சமநிலையை ஏற்படுத்துவதற்காக
13. உடலிலும் ஆன்மாவிலும் வலுப்பெறுவதற்காக
14. எதன்மீதும் உடல் கொள்ளும் இச்சையை முறியடிப்பதற்காக.
15. உங்களுக்கு இறைவன் தந்த கொடைகளைக் கண்டுபிடிப்பதற்காக.
16. பாரச்சுமைகளிலிருந்து விடுபடுவதற்காக.
17. தூய்மையானதோர் உள்ளத்தையும் மனப்பான்மையையும் அடைந்து கொள்ளும்படியாக.
18. மாறுபாடான உணர்ச்சிகளிலிருந்து விடுபடும் படியாக.
19. குணம் அடையும்படியாக
20. உங்களால் செய்ய இயலாதவற்றைச் செய்வதற்கு வலுப்பெறும் படியாக.

**தொகுப்பு**
**அருட்பணி. ரெஜிஸ் ராஜநாயகம் அடிகள்**

## "காலத்தின் தேவை"



**ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு (ச.உ 3:1)**

பாவம் நிறைந்த இவ்வுலகில் நம்மை நாமே ஆராய்ந்து ஒரு புதிய ஆரம்பித்திற்குள் வரும் காலமே தவக்காலம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் சான்று பகர்வதற்கும் தன்னை ஆயத்தப்படுத்துவதற்கும் தெரிந்து கொள்வதற்கும் கிடைக்கப் பெற்ற பொற்காலமும் இதுவே.

ஆண்டுதோறும் வந்து செல்லும் இக்காலம் நம் ஆன்மீகத்தைப் பதப்படுத்தி சொல், செயல், எண்ணங்களால் இறைவனோடு கொண்ட மிக நெருங்கிய உறவைப் பலப்படுத்துகின்றது.

திருநீற்றுப் புதனன்று ஆரம்பமாகிய இக்காலம் நமக்குள் ஏதோ ஒரு வகையான சோக உணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த யாதார்த்த நிலையே எம் பாவங்களை நினைக்கவும், வருந்தவும், மனமாறவும் வேண்டுமென்ற நிலைக்கு இட்டுச் செல்கின்றது. தவக்காலத்தின் காலமானது மனமாற்றத்தின் காலம் என்ற அடிப்படையில், தான தர்மம், தியானம், சிலுவை வழிபாடு, சமூகப் பணி, திருயாத்திரை என 40 நாட்களில் ஆன்மீகத்தை வளமாக்கிக் கொள்ள ஆர்வமுடன் பங்கேற்கின்றோம். அதிலும் மேலாக தன்னார்வ செயல்பாடுகளான மாமிச உணவு புசியாதிருப்பது, தொலைக்காட்சி, சினிமா, களியாட்டம் போன்றவற்றை தவிர்ப்பது, புகைப்பிடித்தல், மதுபானம் என்பவற்றை இடைநிறுத்திக்கொள்வது போன்ற ஒறுத்தல்களினாலும் அர்ப்பணிக்கின்றோம். இவற்றிலும் சில செயல்கள் காலத்துடன் மறைகின்றன.

ஆயினும் இக்காலத்தின் நாற்பதுகளில் மனமாற்ற த்தையும், ஆன்மீக வளர்ச்சியையும் பெற்றுக்கொண்டோம் என்பதை உறுதி செய்ய எம்மால் முடிவதில்லை. காலத்தை கடந்து வந்த நாம் வாழ்வில் குடும்பம், அயலவர், ஆலயப்பங்கு, பாடசாலை தொழிலகம் என பல இடங்களில் பல குணாதிசயங்கள் கொண்டவர்கள் மத்தியில் தான் எமது வாழ்வு தொடர்ந்து வருகின்றது. இதில் சந்தர்ப்பம், சூழ்நிலைகள் மீண்டும் பாதையை தடுமாற வைத்துவிடும். இருந்தாலும் அச் சமூகத்தை விட்டு அகன்று போக முடியாத நிலையில் எமது சாட்சி பகர எத்தகைய தாக இருக்க வேண்டுமென்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. சாட்சிபகர்தல் என்பது நம்மை நாமே ஆராய்ந்து தன்னையறிதலை சாத்தியமாக்குகின்றது. அதுவே நமது மாற்றத்திற்கும் ஆன்மீக வாழ்விற்கும் ஓர் பிரதிபலிப்பை ஏற்படுத்துகின்றது. இவ்வாறாக எம் மனநிலை இருந்திருப்பின் சென்ற நாற்பதிலிருந்து இந்நாற்பதில் ஆரம்பம் வரை நிச்சயம் ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒன்று எம் ஆன்மீகத்தை தொட்டிருக்க வேண்டும்.


வாழ்வில் வசதி வாய்ப்புகள் ஏற்பட்டதும், டாம்பீக வாழ்வுக்கு எம்மை மாற்றிக் கொள்கிறோம். சரி., பிழை உணர முடியாத அளவுக்கு மனநிலை மோசமாகி விடுகின்றது. இச் சுகபோகத்துடன் பாவமும் கலந்து விட்டதை யார் கூறினும் ஏற்க மனம் இடம் கொடுப்பதாகவும் இல்லை.

இன்பமும் துன்பமும் மாறிவரும் வாழ்வில் தீய சக்திகளின் ஆதிக்கம் நம்மை ஆட்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. சூனியம், மந்திரம், சுயநலம் கபடம், வெளிவேடம், பண மோசடி, கோபங்களினால் அசுத்த வார்த்தை, குடும்பங்களுக்கிடையில் குரோதம், அயலவருடன் சண்டை சச்சரவு, பங்குத்தந்தையுடன் கருத்து வேறுபாடு, சேவையாளர்களுடன் முரண்பாடு தொழில் போட்டி பொறாமை இத்தனைக்குள்ளும் நான் யார்? காலம் தரப்போகும் மாற்றந்தானென்ன? நடை, உடை, பாவனைகளில் மட்டும் அல்ல, எண்ணங்களிலும் உணர்வுகளிலும் கூட மாற்றம் தேவையாகின்றது. "இயேசு எமது பாவங்களுக்காக சிலுவையில் பலியானார் என்று கூறும் நீங்கள் மீண்டும் மீண்டும் பாவம் செய்கின்றீர்கள் இதன் அர்த்தம் என்னவென்று" ஒரு பிறமத சகோதரி கேட்கின்றார். இதற்கு எம்மால் கூறக்கூடிய பதிலென்ன.

அச்சகோதரி எம் வாழ்வில் கிறிஸ்துவின் சாயலை காணவில்லை என்பதுதானே உண்மை. சீராக் 5:5-6 "பாவ மன்னிப்புப் பற்றி அச்சம் இல்லாமல் இராதே. ஆண்டவரின் பரிவு எல்லையற்றது. எண்ணற்ற என் பாவங்களை அவர் மன்னித்து விடுவார் என உரைக்காதே. அவரிடம் இரக்கமும் சினமும் உள்ளன. அவரது சீற்றம் பாவிகளைத் தாக்கும்" என கடவுளின் வார்த்தை கூறுகின்றது. நம் ஆன்மாவுக்கு நாம் தானே பொறுப்பாளிகள். விண்ணக பாதைக்கு அடையாள காரியங்கள் ஒவ்வொன்றிலும் நாம் மாற ஆசைப்படுவோம். தன்னுயிர் தியாகம் செய்த இயேசுவுக்காக இக்காலத்தை பயனாக்கிக் கொள்வோம். கிறிஸ்துவின் சாட்சிகளாகிடுவோம்.

**ஆக்கம்**
**திருமதி செல்வராணி ஜோர்ஜ்**
**கொட்டாஞ்சேனை**


**செபத்தினால் உலகைப் புரட்டிப் போடலாம். முடியாது என்பதை சாதித்துக் காட்டலாம். இறைவனின் மனத்தையே மாற்றிக் காட்டலாம்**



**ஒருவருடைய சொல்லில் செயலில், சிந்தனையில் நல்லதே இருந்தால் அவருக்கு அனைத்தும் நன்மையாகவே நிகழும்**



**வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் நன்மையும், தீமையும், சுகமும், துக்கமும், எழுச்சியும், வீழ்ச்சியும் நாம் அவற்றை நோக்கும்**



# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

## பணியின் தொடக்கத்திற்கு உதவிய “நிர்மல் ஹிருதய்” விடுதி

11

அங்கேயும் இடம் பற்றாமற் போகவே நான் காவல்துறை ஆணையரிடமும் மாநகராட்சி சுகாதார அதிகாரியிடமும் முறையிட்டேன். சுகாதார அதிகாரி டாக்டர் அகமது என்பவர் என்னையும் அழைத்துக் கொண்டு காளி கோவிலுக்கு வந்தார். கோவில் பக்கத்தில் காலியாக இருந்த இரண்டு தர்மசாலைகளை எனக்குக் காண்பித்தார். அவை இரண்டும் குப்பை நிறைந்து காணப்பட்டன. ஆனால், மின்வசதி இருந்தமையால் நான் உடனே அவ்விரு மண்டபங்களையும் ஏற்றுக்கொண்டேன். என் சகோதரிகள் வந்து அவற்றைச் சுத்தம் செய்யத் தொடங்கினர். 24 மணி நேரத்துக்குள் மோட்டி ஜீல் குடிசையில் கிடந்த அத்தனைபேரையும் அங்கே கூட்டிக்கொண்டு வந்து படுக்க வைத்தேன்”.

“முதல் மண்டபத்தில் ஆண்களையும், இரண்டாவது மண்டபத்தில் பெண்களையும் தங்கவைத்தேன். சமையலுக்கு ஓர் அறையும் கிடைத்தது. இதுதான் “நிர்மல் ஹிருதய்” விடுதியின் வரலாறு. இவர்கள் இங்கே குடியேறியது 1952 ஆவணி 22ம் நாள்” என்றார் அன்னை தெரேசா.

“இது காளி கோவிலின் பக்கத்தில் இருப்பதனால் கோவில் அதிகாரிகள் எதிர்ப்பு ஒன்றும் தெரிவிக்கவில்லையா?” “தொடக்கத்தில் நிறைய எதிர்ப்புக்கள் எழத்தான் செய்தன. காளிகோவில் பக்கத்தில் கிறிஸ்தவ நிறுவனம் ஒன்று தொடங்குவது கோவில் அதிகாரிகளுக்குப் பிடிக்கவேயில்லை. கோஷ ங்களை எழுப்பினார்கள். கற்களை அள்ளி எறிந்தார்கள். என்னைக் கொல்லப் போவதாக மிரட்டினார்கள். எப்படியும் இவர்களை இங்கிருந்து விரட்டியே தீருவோம் எனக் கூச்சல் போட்டனர். அப்போது நான் வெளியில் வந்து அவர்களைப் பார்த்து “என்னைக் கொல்ல வேண்டுமென்றால் கொல்லுங்கள். ஆனால் இவர்களை அமைதியாகச் சாகவிடுங்கள்” என்றேன். அவர்கள் அத்தனைபேரும் போய்விட்டனர்”.

“சில நாட்களுக்குப் பின் மற்றொரு கும்பல் எங்களைத் தாக்க வந்தது. அவர்கள் கல்லூ ரி மாணவர்கள். “இக்கன்னியர்கள் கிறிஸ்தவர்கள். மதமாற்றம் செய்யத்தான் வந்திருக்கின்றனர். இவர்களை உடனே ஒழித்துக்கட்ட வேண்டும்” என்று காவல்துறை ஆணையரிடம் முறையிட்டனர். ஆணையரும் அவர்களைக் கூட்டிக்கொண்டு காளிக்காட்டுக்கு வந்தார். என்னை வெளியே தள்ளவேண்டும் என எண்ணிக்கொண்டு தர்மசாலைக்குள் நுழைந்தார். அங்கே எங்கள் சகோதரிகள் ஆதரவற்று எலும்பும் தோலுமாக நலிந்துகிடக்கும் நோயாளிகளின் புண்களைக் கழுவித் துடைப்பதைச் சற்று நேரம் கவனித்துக் கொண்டே நின்றார். பின் வெளியே வந்து அங்கே குழுமியிருந்த கூட்டத்தை நோக்கி “உங்களுடைய தாய்மார்களையும், தங்கை, தமக்கைகளையும் அழைத்து வந்து தெராசாவும் அவருடைய சகோதரிகளும் செய்துவரும் வேலையை செய்யவைத்தால் நான் இவர்களை இங்கிருந்து இப்போதே விரட்டுகிறேன்” என்றார். வந்தவர்கள் அத்தனை பேரும் பதில் பேசாமல் போய்விட்டனர்.

“சில நாட்களுக்குப் பின் காளிகோவில் பூசாரி ஒருவர் காசநோய் பிடித்து சாகக்கிடந்தார். பல இடங்களுக்கும் அவரைத் தூக்கிச் சென்றனர். ஆனால், எந்த மருத்துவமனையும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. காசநோய் மிகவும் முற்றிப் போயிருந்தது. இறுதியில் இங்கே கொண்டுவந்தனர். அவரை நாங்கள் உடனே ஏற்றுக்கொண்டோம். எங்கள் சகோதரிகள் அவரை நன்குக் கவனித்து வந்தனர். முதலில் அவர் எங்களிடம் கடுங்கோபமாகத்தான் இருந்தார். ஆனால் எம் சகோதரிகள் அன்போடு பழகுவதைக் கவனித்த அவர் கோபம் தணிந்துச் சாந்தமானார். இறுதியில் எங்கள் கரங்களில் அவர் நல்லதொரு மரணம் அடைந்தார். இதைக் கவனித்த கோவில் அதிகாரிகள் எங்களுடைய நண்பர்கள்



ஆகிவிட்டார்கள்”

நிர்மல் ஹிருதய் விடுதி தொடங்கப் பெற்றது. 1952ல் தான். வெகுவிரைவில் கல்கத்தா மாநகர் முழுவதும் இவ்விடத்தைப் பற்றிய செய்தி பரவியது. மாநகாரட்சி அலுவலர்களும், காவல்துறை அதிகாரிகளும், சாலை ஓரங்களிலும், சாக்கடைகளிலும் சாகக் கிடந்தவர்களை நிர்மல் ஹிருதய் விடுதிக்கு அனுப்பி வைத்தனர். குறிப்பாக தலித் மக்களை அங்கேதான் அனுப்பி வைத்தனர்.மகாத்மா காந்தி அடிகளின் தீவிர முயற்சியின் பயனாக 1936ல் இந்துக் கோவில்கள் தலித் மக்களுக்குத் திறந்து விடப்பட்டன. அதன் விளைவாக காளிகாட்டில் தலித் மக்கள் கணிசமான அளவில் குடியேறினார்கள். ஆனால் அவர்கட்குத் தங்குவதற்குப் போதுமான வசதிகளோ வீடுகளோ இல்லாத காரணத்தால் சாலை ஓரங்களையே தங்களது இல்லிடங்களாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

தொமினிக் லெப்பியோர் என்னும் பிரஞ்சு ஆசிரியர் “ஆனந்த நகர்” என்னும் தனது நூலில் கல்கத்தாவின் சாலை ஓரங்களிலும், ரயில் நிலையம், பேரூந்து நிலையம் போன்ற பொது இடங்களிலும் குடிசை கட்டி வாழ்ந்து வந்த இம்மக்களைப் பற்றி நன்கு வருணித்திருக்கிறார். குடிசை என்றவுடன் ஓலை வேய்ந்த குடிசைதான் நம் கண்முன் தோன்றும். ஆனால், இம்மக்கள் வாழ்ந்து வந்த குடிசைகள் மிக மட்டரகமானவை. இரண்டு குச்சி, மேலே ஒரு போர்வை, இதுதான் ஒரு குடிசை. உடைந்து பாழாய் போன ஆனால், ஓர் ஆள் உள்ளே நுழையக்கூடிய, தண்ணீர் குழாய் கிடந்தால் அ.்.து ஒரு வீடு. பழுதுபட்டு ஓட்டமுடியாமல் கிடக்கும் ரிக்ஷா வண்டி ஒரு குடிசை. உடைந்து கிடக்கும் மாட்டுவண்டியை இரண்டு கற்கள் மேல் தூக்கிவைத்து அதிலேயும் குடித்தனம் பண்ணிக்கொண்டு வாழ்ந்து வந்தனர் இம்மக்கள்.

இந்து ஆசாரப்படி பிறப்பைப்போலவே இறப்பிலும் சுத்தம் அனுசரிக்கப்பட வேண்டும். இறந்தவனுடைய பிணத்தைத் தொட்டால் தீட்டு, வாடகை வீட்டில் குடியிருக்கும் ஒருவன் அவ்வீட்டிலேயே இறந்துவிட்டால் அவ்வீடு அசுத்தமாய்ப் போய்விடுகிறது. பிறகு அவ்வீட்டை எவரும் வாடகைக்கு எடுக்கமாட்டார்கள். சில சமயங்களில் ஒருவன் இறப்பதற்கு முன்னமே அவன் வாடகை வீட்டிலிருந்து துரத்தப்படுவான். அப்படிப்பட்டவர்களுக்கு புகலிடம் ஏது? அவர்கள் எங்கே போவார்கள்? சாலை ஓரத்தில்தானே சாக வேண்டியிருக்கிறது. இப்படி இறப்பவர்களுக்கு உதவிடவும் எவரும் முன்வரமாட்டார்கள். இவ்வாறு உதவியின்றி விடப்படுபவர்களைத் தான் தெரேசா தூக்கி வந்து நிர்மல் ஹிருதய் விடுதியில் படுக்க வைத்திருந்தார்.

அந்த விடுதிக்குள்ளே புதிதாக வரும் பார்வையாளர்கட்குத் தொழுநோய் போன்ற வியாதிகள் தொற்றிக்கொள்ளுமே என்ற பயம் இருக்கலாம். ஆனால், இங்கே தொழுநோயாளர் எவருமே இல்லை. அவர்களை இங்கே கொண்டுவரக்கூடாது என்பது தெரேசாவின் கண்டிப்பான கட்டளை. உள்ளே போய் பார்த்தால், மூன்று வரிசையாக நோயாளிகள் படுத்திருக்கின்றார்கள்.


இதோ, ஒரு நோயாளி. அவளது படுக்கைக்கு மேல் சுவரில் ஓர் அட்டை தொங்குகிறது. அதில் “சாருபாலா, கைம்பெண், வயது 58” என எழுதப்பட்டிருக்கிறது. சாருபாலா வங்காளப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்று அவளின் பெயரை வைத்துக்கொண்டு யூகிக்கின்றோம். குழந்தைப் பருவத்திலேயே கைம்பெண்ணான ஒரு நிர்ப்பாக்கியவதி அவள். தலை மொட்டையடிக்கப்பட்டிருக்கிறது. பத்து வயது நிரம்புவதற்குள் அவளுடைய பெற்றோர் அவளுக்குத் திருமணம் முடித்து வைத்தனர். திருமணமாகி ஒரு மாதத்திற்குள் கணவன் இறந்துவிட்டான். சாருபால கைம்பெண் ஆனாள். அவளது கதி அதோகதியாகிவிட்டது. கடந்த கால வாழ்வின் கர்மம் நிகழ்கால வாழ்வை எவ்வாறு பாதித்துவிட்டது. பாருங்கள்! நிழல்போல் அவளைத் தொடர்ந்து கொண்டே வந்திருக்கிறது. எனவே. அவள் மறுமணம் செய்ய மறுத்துவிட்டாள். கூலி வேலை செய்து நாட்களை ஓட்டி வந்தாள். இந்த வாழ்க்கை மிகவும் கசப்பானதாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

ஓர் இரவில் ஒருவரிடமும் சொல்லாமல் சாருபாலா சொந்த ஊராகிய மால்டாவைவிட்டு வெளியேறினாள். கல்கத்தாவுக்குப் போனால் நல்ல வேலை கிடைக்கும் என்னும் நம்பிக்கை அவளுக்கு. அங்கேயும் அவளுக்குக் கிடைத்தது கூலிவேலைதான். ஆனால் பக்கவாத நோய் வந்ததால் கூலிவேலையையும் அவளால் செய்ய முடியாமல் போயிற்று. இந்நிலையில் எல்லோரும் அவளைக் கைவிட்டனர். அவள் தெருவுக்குத் தள்ளப்பட்டாள். காளிகாட்டில் அவள் அன்னை தெரேசாவைச் சந்தித்தாள். இப்போது நிர்மல் ஹிருதய் விடுதியில் படுத்திருக்கின்றாள்.

**தொடரும்**

தொகுப்பு

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**




- தூங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னால் வேலை செய்வதை விட்டுவிட்டு அமைதியாக ஓய்வு எடுங்கள்.
- வேலைப்பளு நிறைய இருந்தாலும், ஒரு மணிக்கு ஒரு தடவை, சில நிமிடங்கள் ஓய்வு எடுத்தால், நிறைய சாதிக்கலாம்.
- நேரமே இல்லை என்று எண்ணும் பொழுதுதான் ஓய்வு எடுக்கத் தகுந்த தருணம்.
- “மனதிற்கு ஓய்வு கொடுப்பதும், தேவையற்ற கவலைகளை விலக்கிவிடுவதும் தான் சிறந்த மனிதர்களுக்குச் சக்தி கொடுக்கிறது”
- “அமைதியற்ற தன்மைக்கு அமைதிதான் மருந்து.

### ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்க...!

**தினந்தோறும் அல்லது முடிந்த போதெல்லாம் அருகில் உள்ள ஆசிரமம், முதியோர் இல்லங்களுக்குச் சென்று அங்கிருப்பவர்களிடம் பேசிவிட்டு வரலாம். அவர்கள் ஏங்கும் ஒரே விசயம் உறவுகள் தான்.அதையும் நீங்கள் செய்த மாதிரி இருக்கும். உங்களுக்கும் ஒரு ஆத்ம திருப்தி கிடைக்கும்.**

## தவக்கால சிந்தனைக்கு...!

**மரணம் :** ஏ மனிதா, நீ கிளம்புவதற்கான நேரம் வந்துவிட்டது.

**மனிதன் :** இவ்வளவு சீக்கரமா? என் திட்டங்கள் எல்லாம் இன்னும் முடிக்கப்படவில்லை. அவை என்ன ஆவது?

**மரணம் :** இது தான் உனக்கு விதிக்கப்பட்டுள்ள சரியான நேரம்.

**மனிதன் :** ஐயோ நான் இரவு பகலாக உழைத்து சேர்த்த என் பொருள், பணம், சொத்து, எல்லாவற்றையும்.... ?

**மரணம் :** அவை உன்னுடையவை அல்ல, அவை நீ உலகில் வாழ்வதற்கு கொடுக்கப்பட்டவை.

**மனிதன் :** அப்படியானால் என் பல்வேறுபட்ட திறமைகள், அறிவாற்றல், என் மேதைத்தனம்?

**மரணம் :** அவைகள் நீ வாழ்ந்த சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்டவை. அவற்றால் இனி ஒரு பயனும் இல்லை.

**மனிதன் :** என் அன்பு மனைவி, பிரியமான மகள், மகன், சொந்த பந்தங்கள், நண்பர்கள்.

**மரணம் :** அவர்கள் நீ வாழும்போது உன் இதயத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள். மறுமையில் தேவையற்றவர்கள்.

**மனிதன் :** நான் அருமை பெருமையாய் பாதுகாத்து அழகு செய்து வளர்த்த என் உடல்?

**மரணம் :** அது அழிவிற்குரியது. உன்னை புதைத்தால் மண்ணிற்குரியதாகும். எரித்தால் சாம்பலாகிவிடும்.

**மனிதன் :** அப்படியானால் என்னுடையது என்று எதுவுமே இல்லையா? நான் ஒன்றுக்கும் உதவாதவனா?

**மரணம் :** இருக்கிறது நீ உயிர் வாழ்ந்த ஒவ்வொரு நொடியும் அப்போது நீ செய்த தான தருமங்கள், நன்மைகள், பிறரன்புச் செயல்கள், உனது நல்ல எண்ணங்கள், பிறர் துன்புறும் போது நீ நீட்டிய உதவிக் கரங்கள், அதேபோன்று நீ செய்த பாவச் செயல்கள், செய்த தீமைகள் இவைகளே உன்னுடையவைகள். இவைகள் மட்டுமே உன்னுடன் இறுதிவரை வரக்கூடியவைகள். மற்ற எதையும் நீ இறுதியில் எடுத்துச் செல்ல முடியாது.

### நமது சொத்து என்ன?

### சிந்தனைக்கு...




## மனிதன்?



**‘பணம் இல்லாதபோது ஓட்டலில் வேலை செய்தாலும், வீட்டுக்கு வந்து உணவு சாப்பிடுகிறான். பணம் வந்துவிட்ட பின்போ வீட்டில் உணவு இருந்தாலும் ஓட்டலுக்குச் செல்கிறான் சாப்பிடுவதற்கு!’**



**‘பணம் இல்லாதபோது வயிற்றை நிரப்ப சைக்கிள் மிதிக்கின்றான், பணம் வந்த பின்பு வயிற்றைக் குறைக்க சைக்கிள் மிதிக்கின்றான்’.**



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

134

**இறைவனுக்கு நான்கு இலட்சணங்கள் உண்டு.**

எபிரேய மொழியில் ஹெசெத், எமெத், செதெக், விஸ்பாம் என்று கூறுவர்.

1. **ஹெசெத்** என்பது அன்பு தயவு மன்னிப்பின் சுபாவம் வைராக்கியம் வைக்காமை பழிவாங்காமை என்ற குணங்களைக் குறிக்கும்.
2. **எமெத்** என்பது விசுவாசமாக இருப்பவர். நம்பக்கூடியவர். பிரமாணிக்கமாக இருப்பவர் என்பதாகும்.
3. **செதெக்** என்பது நீதி நேர்மை சமத்துவம் பேணுவது.
4. **விஸ்பாம்** என்பது மேற்கூறப்பட்டவைகளைச் செயலில் காட்டுவது. தீர்க்கதரிசிகள் மூலம் அல்லது எதிரிகள் மூலமாவது இதைச் செயற்படுத்துவது.

இப்படிப்பட்ட இறைவன் உடன்படிக்கை செய்து கொண்டார். யாருடன் உடன்படிக்கை செய்தார்? மக்களுடன் உடன்படிக்கை செய்தார். அதுமட்டுமல்ல மக்களின் வரலாற்று நிகழ்ச்சிகளினூடாகவே இவற்றை இறைவன் நிறைவேற்றுவார். யூத இனத்தின் வரலாற்றை வேதாகமத்தில் நாம் வாசித்தால் எமது வரலாற்றில் இறை செயற்பாட்டை விளங்கிக் கொள்ளலாம். இதற்கு விடைகொடுப்பதே எமது மதமாகும். பொதுவாக எமது பிரச்சினைகளுக்கு வேதாகமத்தில் விடைதேடுவதல்ல. வேதாகமத்துக்கு ஆராதனை செய்வதுமல்ல. வேதாகமத்தில் உள்ள இறைவனுக்கே வழிபாடு செய்தல் வேண்டும். ஏழை எளியவர் துன்புறுவோருக்குச் சேவை செய்வதே இறைவனுக்குச் செய்யும் சிறந்த வழிபாடு என்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு நாம் வாழவில்லையேல் மேலே கூறப்பட்ட நான்கு இலட்சணங்களும் எமக்குத் தெரியாது போய்விடும். சமுதாயத்திலும் இவைகள் இல்லாது போய்விடும்.



# இறைவனது இலட்சணங்களை எம்மில் உருவாக்க உதவுவதே மதம் ஆகும்.

**செப்பனியா 2:3 3:12-13**

கி.மு. 7ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இருந்த அரசியல் சமுதாயப் பின்னணியை அறிந்தாலே இதை விளங்கிக் கொள்ளலாம். யூதநாடு அயலிலுள்ள பணக்கார நாடுகளின் பிடியில் அகப்பட்டு இருந்தது. ஒருபக்கம் அசீரியா மறுபக்கம் பபிலோனியா. இவ்விரு நாடுகளும் மற்றவர்களைச் சுரண்டி பணக்கார நாடாகினர். வல்லமையுள்ள நாடாகினர். இப்படிப்பட்ட சூழலிலேயே செப்பனியா இறைவாக்கு உரைத்தார். உண்மையான இறைவனுக்கே வழிபாடு செய்யவேண்டும் என்றார். இறைவன் செப்பனியாவின் மூலம் பேசினார். பொதுவாக அநியாயமான சமுதாய சூழலில் ஒடுக்கப்பட்ட துன்பப்படும் மக்கள் உருவாகுவர். நான் வல்லமையுள்ளவர்களோடு உடன்படிக்கை செய்யவில்லை. மாறாக பீடனை துன்பப்படுவோருடனேயே உடன்படிக்கை செய்துள்ளேன் என்கிறார். பொதுவாக தீர்க்கதரிசி வல்லமையுள்ளோரின் பக்கம் செயற்படுவதில்லை. துன்பத்துக்குள்ளாகிய பீடனை அனுபவிக்கும் மக்களின் பக்கமிருந்தே செயற்படவேண்டும். அப்படிப்பட்ட மக்களின் மூலமாகவே மீட்பை இறைவன் கொண்டு வருவார். ஒன்றாகுங்கள் வடக்கும் தெற்கும் ஒன்றாகுங்கள். மேலும்

1. ஆண்டவரைத் தேடுங்கள்.
2. நேர்மையை நாடுங்கள்.
3. மனத்தாழ்மையைத் தேடுங்கள்

என்கிறார். ஆண்டவரைத் தேடுவோரில் மேற்குறிப்பிடப்பட்ட குணங்கள் உருவாகும். ஆகவே எஞ்சிய மக்கள் விசுவாசத்துடன் வாழுங்கள். மகிழ்ச்சியுடன் வாழுங்கள். அதுவே நாம் இறைவனோடு வாழ்கிறோம் என்பதன் அடையாளம்.

எமது குடும்பங்களில் மேற்கூறப்பட்ட குணங்கள் உருவாகவேண்டும். உண்மைத் தேவனுக்கே வழிபாடு செய்யவேண்டும். நாம் சோர்ந்துபோகக் கூடாது.

1. இது இறைவனுக்குத் தெரியும்.
2. இதற்கு இடமளித்துவிட்டார்.
3. இதை நன்மையாக மாற்றுவார்.
4. அவரது நேரம் வரும்வரை பொறுத்திருப்போம்.
5. அதுவரை நன்றி கூறுவோம்.

ஆகவே “மகிழ்ச்சியால் ஆர்ப்பரிப்போம்” இறைவன் எம் மூலம் எமது குடும்பம் சங்கம் பங்குநாடு உலகுக்கு மீட்பைத் தருவார் என்று எதிர்பார்த்திருப்போம்.

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவார்த்தை வழிபாடு

WLX

- பேதுரு -

## தவக்காலத்தில் மூன்றாம் ஞாயிறு (19.03.2017)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் 3வது ஞாயிறு தினத்தில் இறைவாஞ்சையுடனும், தாகத்தோடும் இறை இல்லத்தில் ஒன்று கூடிவந்துள்ள இறை அன்பர்களே! இயற்கையான தாகம், உறவின் தாகம், ஆன்மீக தாகம் என மூவகை தாகம் கொண்டு வாழும் எமக்கு இன்றைய நற்செய்தியின் ஊடாக இயேசு நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கும் எவருக்கு என்றுமே தாகம் எடுக்காது நான் கொடுக்கும் தண்ணீர், அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி, நிலைவாழ்வு அளிக்கும் என்கிறார். இதை உணராமல் பல்வேறு தெய்வங்களையும் நாடித் தேடி ஓடிக்கொண்டிருக்கும் நாம் இறைவனின் பராமரிப்பையும் வழிநடத்தலையும் உணர்ந்து கொள்ள தவறிவிடுகின்றோம். இதற்குக் காரணம் நமது பாவங்களையும் தகுதியின்மையையும் நாம் உணர்ந்து கொள்வதில்லை சமாரியப் பெண்ணிடமிருந்த பயம், கவலை, குற்றப்பழியுணர்வு, தாழ்வு மனப்பான்மை, யாவும் மறைந்து கடவுளைத் தேடும் மனப்பான்மை உருவானது. இதனால் அவள் மகிழ்வடைந்தார். எனவே நாமும் தவக்காலத்தில் முழுமையான மனமாற்றம் பெற்று ஆன்மீக தாகம் கொண்டவர்களாக மாற இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : வி.ப 17:3-7**
குடிக்க எங்களுக்குத் தண்ணீர் கொடும்

**பதிலுரைப் பாடல் :** உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர். ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்

**இரண்டாம் வாசகம் : உரோ 5:1-2,5-8**
தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
ஆண்டவரே நீர் உண்மையிலே உலகின் மீட்பர் நான் தாகம் கொள்ளாதபடி வாழ்வு தரும் தண்ணீரை எனக்கு அளித்தருளும்.

**நற்செய்தி வாசகம் : யோவா 4:5-42**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைமக்களின் ஆன்மீக தாகத்தை தீர்ப்பதற்காக அயராது உழைத்து நிற்கும் திருச்சபைக்காகவும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அகிய அனைவரும் இத்தவக்காலத்தில் மக்களின் மனமாற்றத்திற்காக அதிகமாய் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

சமாரியப் பெண் தனது தவறான உறவுகளை உணர்ந்து உண்மையான இறை உறவைத் தேடியதுபோல் நாமும் எமது மனங்களில் உள்ள பயம் கவலை குற்றப்பழியுணர்வு தாழ்வு மனப்பான்மை போன்றவற்றைக் களைந்து ஆன்மீகத் தாகம் கொண்டு வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ள மக்களாகிய நாமனைவரும் இயேசுவை நோயில் குணப்படுத்துபவராக, துன்பத்தில் தேற்றுபவராக, தனிமையில் தோழனாக, வறுமையில் வழங்குபவராக, இதயத்தின் வேந்தனாக ஏற்றுக்கொண்டு சமாரியப் பெண்ணைப் போல் இயேசுபைப் பறைசாற்றி வாழ்ந்திட வேண்டிய மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று....

## தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு (26.03.2017)

**வாசக விளக்கம்:** மனமாற்றத்தின் காலமான தவக்காலத்தின் நான்காவது ஞாயிறு தின வழிபாட்டின் பங்காளிகளாக இணைய வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! இன்றைய நாளின் வாசகங்கள் இயேசுவே எமது வாழ்வின் ஒளி என்ற நம்பிக்கையோடு வாழ அழைத்து நிற்கின்றன. இயேசு பிறவிக் குருடனைப் பார்வை பெறச் செய்கின்றார். இயேசுவின் இந்த அருள் அடையாளம் அவரை உலகிற்கு வந்த ஒளியாகக் காட்டுகிறது. கடவுளுடைய பார்வை அந்தப் பிறவிக் குருடன் மேல் விழுந்தது. இருளின் ஆட்சியிலே வாழ்ந்த நாம் இப்பொழுது ஆண்டவரோடு ஒளியின் மக்களாக வாழ்கிறோம் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் கூறுகின்றது. நாம் அனைவரும் ஒளியின் மக்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நாம் ஒளியின் மக்களாக வாழ இருளின் செயல்களாகிய பாவங்கள் தடையாக உள்ளன. இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் தாமே மனிதர்களுக்கு ஒளி கொடுக்க வந்தவர் என்பதை நிரூபிக்கின்றார். பிறவிக் குருடனுக்கு இயேசு புறப்பார்வை அளிப்பதன் வழியாக அவனுக்கு விசுவாசப் பார்வையும் கொடுக்கின்றார். நாமும் அகப்பார்வை பெற்றவர்களாக வாழ்ந்திட இறையருள் வேண்டுவோம்.

**முதல் வாசகம் : 1 சாமு 16:1, 6-7,10-13**
இஸ்ராயேல் மீது அரசனாக தாவீது திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே என் ஆயன் எனக்கேதும் குறையில்லை

**இரண்டாம் வாசகம் : எபே 5:8-14**
இறந்தவனே உயிர்பெற்றெழு கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார்

**நற்செய்திக்கு முன் வசனம் :**
உலகின் ஒளி நானே என்னைப் பின் தொடர்பவர் வாழ்விற்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்கிறார் ஆண்டவர்

**நற்செய்தி வாசகம் : யோவான் 9:1-41**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

"நானே உலகின் ஒளி" என்று கூறிய இயேசுவைத் தலைவராகக் கொண்டு இயங்கும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல உலகமக்கள் அனைவருக்கும் ஒளியாகத் துலங்கிட வரமருள வேண்டுமென்று...

மனிதனின் பார்வையைப் பொறுத்தே அவனுடைய எண்ணங்களும் செயல்களும், முடிவெடுக்கும் தன்மையும் அமைந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு நாம் எமது அகக்கண்களைத் திறந்து பார்வை பெறவும், உள்ளத்தை உய்த்துணரும் ஆண்டவரைப் போல் மனித உள்ளங்களைப் புரிந்து கொண்டு வாழவும் தேவையான அருள் வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்துவை விசுவசிக்கும் நாம் கிறிஸ்துவின் பார்வை பெற்றவர்களாக அனைவரையும் சகோதர சகோதரிகளாக அன்பு செய்யவும், எம்மிடம் உள்ள பணம் செல்வம் அனைத்தையும் கடவுளின் சித்தத்திற்கேற்ப பயன்படுத்தவும் தான தர்மங்களால் பிறரின் துன்பங்களில் பங்கெடுக்கவும் வேண்டிய நல் மனதை தந்தருள வேண்டுமென்று...

# பெண்ணே ஒரு நிமிடம்

### ஏனெனில் நானே உன் கடவுளாகிய ஆண்டவர் உன் வலக்கையைப் பற்றிப் பிடித்து, "அஞ்சாதே, உனக்குத் துணையாய் இருப்பேன்" என்று உன்னிடம் சொல்பவரும் நானே.



புரட்சிப் பெண்களே, அன்பு சகோதரிகளே, தவக்காலத்தில் பயனித்துக் கொண்டிருக்கும் நமக்கு நமதாண்டவர் தரும் செய்தி, சமீபத்தில் பத்திரிகைகளில் அதிகமாகப் படிக்கும் செய்தி, சகோதரியே, உன்னுடைய உயிரையே மாய்த்துக்கொள்ள உனக்கு உரிமை இல்லாதபோது அந்தச் சிறிய உயிரையும் கொல்ல உனக்கு என்ன உரிமை இருக்கிறது? கருவில் இருக்கும் முகம் தெரியாத குழந்தையை அழிக்க உரிமையில்லாதபோது? பார்த்துப் பார்த்து வளர்த்த குழந்தையை கொல்ல உனக்கு எப்படி மனம் வருகிறது?

யாருக்கு இல்லை கஷ்டம்? யாருக்கு இல்லை துன்பம்? அதற்கு கோழைத்தனம் தான் முடிவா? உன் வலக்கையைப் பற்றிப் பிடித்து "அஞ்சாதே உனக்குத் துணை நான்தான்" என்று சொல்லும் இறைவன் உன்னை கைவிடுவாரா? நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் நம்முடன் இன்றும் என்றும் இருக்கிறார்.

சகோதரியே, ஒரு வாசல் மூடினால் மறுவாசல் திறக்கும் என்னும் நம்பிக்கைதான் நம் வாழ்வின் அஸ்திவாரம். அஸ்திவாரமே ஆட்டம் கண்டால் என்ன நடக்கும்?

பெண்களாகிய நம்மை மென்மையானவர்கள், எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் என்பார்கள், ஆனால் அதைவிட நாம் மனதளவில் சக்தி படைத்தவர்கள். வலிமை படைத்தவர்கள். எதையும் சாதிக்க தயங்காதவர்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே.

சகோதரியே, நம் அன்னையின் வாழ்க்கையில் எத்தனை... எத்தனை துன்பங்கள்... அவற்றையெல்லாம் அன்னை தாங்கிக்கொண்டபோதுதான் அவர் உயர்த்தப்பட்டார் வேதனையிலும் ஒரு நன்மை இருக்கும். எனவே, அந்த அன்னையை இறுகப் பற்றிக் கொள்வோம். உறுதியுடன் செபிப்போம்.

# மன்னிக்கும் உள்ளம் மாபரன் வாழும் இல்லம்



மனித இயல்புக்கும், மனித உளவியலுக்கும், மிகப் பெரிய சவாலாக அமைவது மன்னிப்பும், பகைவருக்கு அன்பு செலுத்துவதும். இயேசு நமக்கொரு வழியைக் காட்டித் தருகிறார். அதுதான் இறை வேண்டல். உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் என்பதே. யாரை அன்பு செய்ய முடிவதில்லையோ அவர்களை இறைவனின் திருமுன் கொண்டுவந்து அவர் நலமுடன் வாழ அவருக்காக சிறியதொரு மன்றாட்டை முன்வைத்தால் அன்பு, மன்னிப்பு, மன்றாட்டு என ஒரே கல்லில் மூன்று கனிகளை வீழ்த்திவிடலாம். தவக்காலத்தில் முயற்சிப்போமா?

ஆண்டவராகிய இயேசுவே யாரையெல்லாம் என்னால் மன்னிக்க இயலவில்லையோ அவர்களை எல்லாம் ஆசீர்வதியும் அருளால் நிரப்பும்.

## சிந்தனை

'அன்பு' விற்பனை பொருள் அல்ல, அதற்கு விலை அன்புதான்

'அமைதியில்' தான் உயர்வும், உணர்வும் உள்ளது. பகையில் அல்ல.



நீ கடமையைச் செய்யும்போதே உங்கள் தகுதி தெரிந்து விடும்.



அன்பு ஒருபோதும் கேட்பதில்லை எப்போதும் கொடுக்கும்

நொண்டியை விட பொய்யன் சீக்கிரம் வீழ்வான்

செயலே புகழ் பரப்பும் வாய் அல்ல



உண்மை என்பது புனிதமான சாதனை

கடவுள் நமக்கு நாக்கை கொடுத்திருப்பது இனிமையான சொற்களை கூறுவதற்காகவே




# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்

## திரு அவையின் தலைமைப் பதவியின் 4ஆம் ஆண்டு நிறைவு.







கடந்த நான்காண்டுகளாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சொன்னவை, செய்தவை பலவும் அவர் ஒரு மனிதப்பிறவி என்பதை, நம் மனதில் ஆணித்தரமாகப் பதித்துள்ளன.

- ✶ அவர் வாழ்ந்துவரும் சாந்தா மார்த்தா இல்ல குழுமத்தில், தன் உணவை தானே பரிமாறிக்கொண்டு, மற்றவருடன் உண்பது....
- ✶ எதிர்பாராத வகையில் தொலைபேசியில் பலரை அழைத்து, ஆனந்த அதிர்ச்சி அளித்துவருவது...
- ✶ பங்குத்தளங்களிலும், புனித பேதுரு பசிலிக்கா வளாகத்திலும், மக்களைச் சந்திக்கும்போது, குழந்தைகளையும், நோயுற்றோரையும் பரிவோடு அணைத்து முத்தமிடுவது...
- ✶ பாதுகாப்பைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் மக்களைச் சென்று சந்திப்பது...
- ✶ தானும் ஒரு சாதாரண மனிதன், ஒரு பாவி என்றும், தன்னையும் தனிமை, வெறுமை, ஐயங்கள் ஆகியவை வாட்டுகின்றன என்றும் ஊடகங்களுக்கு வழங்கும் நேர்காணல்களில் கூறுவது....

என்று நீண்டு செல்லும் இப்பட்டியலில், நாம் மீண்டும் மீண்டும் காண்பது ஒரே ஒரு மாற்றம்தான்... திருத்தந்தை என்பவர் வெகு, எளிதாக தொட்டுவிடக்கூடிய ஒரு சாதாரண மனிதர் என்பதை நிலைநாட்டும் அர்த்தமுள்ள ஒரு மாற்றம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தலைமைப் பணியில் நீடிக்கும் காலத்தில், பெரும் சாதனைகள் எதையும் ஆற்றாமல் போனாலும் கவலையில்லை. திருஅவையின் தலைவர், ஏனைய மனிதர்களைப் போல், ஒரு சாதாரண மனிதர் என்பதை நிலைநாட்டும் அர்த்தமுள்ள ஒரு மாற்றம்.

திருத்தந்தையே ஒரு சாதாரண மனிதர்தான் என்பதை, இவ்வுலக மக்கள், குறிப்பாக, கத்தோலிக்க மக்கள் புரிந்துகொண்டால், திருஅவையில் ஆரோக்கியமான மாற்றங்கள் உருவாகும். அருள்பணியாளர், ஆயர், பேராயர், கர்தினால், திருத்தந்தை என்று, பணி நிலைகள் உயர உயர அந்நிலைகளை அடைவோரைச் சுற்றி சுவர்களை எழுப்பி, அவர்களை எட்டாத உயரத்தில் பீடமேற்றும் பழக்கங்கள் மாறும்போது, அச்சுவர்கள் வீழும்போது,
திருஅவை, இன்னும் நலமுள்ள ஓர் இயக்கமாக மாறும். இதைத்தான் போர்களத்தில் பணியாற்றும் மருத்துவமனை போன்று உருவகங்களால் திருத்தந்தை பேசி வருகின்றார்.

உலகக் கவனத்தை ஈர்க்க, இயேசு தன் தோற்றத்தை மாற்றவேண்டும் என்று அலகை தூண்டியதை சென்றவாரம் சிந்தித்தோம். அலகையின் யோசனையைப் பின்பற்றி, இயேசு எருசலேம் கோவிலிலிருந்து குதித்திருந்தால், யூதர்கள் மத்தியில் உரோமையர்கள் மத்தியில் பரபரப்பான மாற்றங்களை உருவாக்கியிருப்பார். அத்தகைய மாற்றங்களை விரும்பாத இயேசு, தன் மூன்று சீடர்களுக்கு முன் உருமாற்றம் பெறுகிறார் என்று, கடந்த வார நற்செய்தி சொல்கிறது. இந்த மாற்றம் சீடர்களின் உள்ளங்களில் நலமிக்க மாற்றங்களைக் கொணரும் என்ற நம்பிக்கையில், இயேசு, உருமாற்றம் என்ற அருளை, சீடர்களுக்கு வழங்குகிறார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது நான்கு ஆண்டுகள் பணிவாழ்வில், ஊடகங்களின் கவனத்தைக் கவர்ந்த பல மாற்றங்கள், வெளிப்படையாக உருவாகியுள்ளன. அதேநேரம், விளம்பரங்கள் ஏதுமில்லாத மாற்றங்கள் பலவற்றிற்கும் அவர் காரணமாக இருந்தார். இவற்றை, முக்கியமான மாற்றங்களாக நாம் எண்ணிப்பார்க்கலாம். பல ஆண்டுகளாகக் கோவில் பக்கமே செல்லாத கிறிஸ்தவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமைப் பணியை ஏற்ற ஒரு சில வாரங்களில், கோவிலுக்குத் திரும்பியுள்ளனர் என்பது அதிகம் விளம்பரம் ஆகாத ஓர் உண்மை.

திருத்தந்தை அவர்களின் எளிமையான பணிவாழ்வால், திருஅவைத் தலைவர்களைப் பற்றி, மக்களின் பார்வை, தெளிவு பெற்றுள்ளது என்பது, வரவேற்கத்தக்க ஒரு மாற்றம். தலைவர்கள் என்று தங்களையே எண்ணிவந்தவர்கள், இன்று தங்களை திருஅவையின் பணியாளர்கள் என்று சிந்திக்க முயற்சி செய்து வருகின்றனர்.

திருஅவைப் பணியாளர்களின் உறைவிடங்கள், உடைகள், பயன்படுத்தும் வாகனங்கள, சாதனங்கள், மாற்றம் பெறவேண்டும் என்ற எண்ணங்கள், மக்கள் மத்தியில் வலுவடைந்து வருகின்றன. ஒரு சில நாடுகளில் ஆயர்கள், தங்கள் இல்லங்களை அழகுபடுத்த செய்த செலவைப்பற்றி, மக்கள் கேள்விகள் எழுப்பியுள்ளனர். இவை யாவும், வரவேற்கத்தக்க
மாற்றங்கள் மக்கள் மத்தியில்
உருவாகிவரும் இந்த மாற்றங்கள் தொடரும் என்று நம்பிக்கை கொள்வோம்.

வத்திக்கான் என்ற நீர்நிலையில் திருத்தந்தை பிரான்சிஸ் வடிவத்தில் விழுந்த ஒரு கல், அலைகளை உருவாக்கி வருகின்றது என்பது ஆனந்தம் தரும் நற்செய்தி. அலைகள் ஒரு நேர்கோடாகச் செல்வதில்லை. வளைவுகளாய், மேலும், கீழுமாய் நகர்கின்றன. மேலிருக்கும் புள்ளி கீழாகவும், கீழிருக்கும் புள்ளி மேலாகவும் நகர்வது, அலைகளின் அழகு. ஓரிடத்தில் நின்றுவிடாமலும், பின்னோக்கிச் செல்லுமானாலும், தொடர்ந்து முன்னேறுவதும் அலைகளின் மற்றோர் அழகு. “திருத்தந்தை பிரான்சிஸ் அலை” இன்னும் பல ஆண்டுகள் நலமிக்க மாற்றங்களை, திருஅவையிலும், இவ்வுலகிலும், உருவாக்க வேண்டும் என்று, இறைவனை இறைஞ்சுவோம்.

தன் உருமாற்றத்திற்குப் பிறகு, இயேசு தன் சீடர்களுக்கு விடுத்த அழைப்பு, “எழுந்திருங்கள். அஞ்சாதீர்கள்” தாங்கள் கண்ட அதிசயக் காட்சியிலிருந்து அவர்கள் எழுந்து, மலையைவிட்டு இறங்கினர். அடுத்தநாள் பிரச்சினைகளைச் சந்திக்கத் துணிந்தனர். இயேசுவும் மகிமையின் உச்சத்தில், உருமாற்றம் பெற்ற மலையைவிட்டு இறங்கி, கல்வாரி என்ற மற்றொரு மலை மீது ஏறத் துணிந்தார். அந்த மலை மீது அவர் மீண்டும் தன்னையே உருகுலைதத்தால், நாம் உருமாற்றம் பெறுவதற்கு வழி வகுத்தார்.

நம் தனிப்பட்ட வாழ்விலும், கத்தோலிக்க திருஅவையிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும், மனித சமுதாயத்திலும் மாற்றங்களை உருவாக்க, முதலில் நம்மிடம் மாற்றங்களை உருவாக்குவோம். இந்த மாற்றங்களுக்கு அடித்தளமாக நாம் ஏறி நிற்கும் மமதை மலையிலிருந்து இறங்குவோம். நம்முன் மலைபோல் குவிந்திருக்கும் பிரச்சினைகளைக் கண்டு மலைத்துவிடாமல் நம்பிக்கையோடு, நலமிக்க மாற்றங்களைத் தொடக்குவோம்.

**அருட்பணி. லூயிஸ்.**






# கொழும்பு உயர் மறைமாவட்ட 70வது சிறுவர் தினம் – 2017



கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் தலைமையிலும், துணை ஆயர்கள் மேதகு. கலாநிதி இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மேதகு. மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர்கள், அருட்பணி. லெஸ்டர் நொனிஸ் அடிகளார், அருட்பணி. அன்சலம் சிரான் அடிகளார் (ஆங்கிலம்), அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகளார் (தமிழ்), மற்றும் ஏனைய பங்குக் குருக்களும் இணைந்து 70வது சிறுவர் தினத்தை இம்மாதம் 4ம் திகதி 2017 அன்று தேவத்தை பசிலிக்கா இலங்கை மாதா ஆலயத்தில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்து சிறப்பித்தனர்.

இத்திருப்பலியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மறையாசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர். பேராயர் அவர்கள் தமது மறையுரையில் “எமது நாட்டில் ஒல்லாந்தர் கால ஆட்சியில் கிறிஸ்தவர்கள் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்த போதிலும் அவர்களுடைய விசுவாசம் சவாலாக காணப்பட்டது. இக்காலக்கட்டத்திலே தான் புனித யோசேவ்வாஸ் மக்களை கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர தன்மையாக செயல்பட்டு இறைவனுக்காக தன்னை முழுமையாக கையளித்தார்” என கூறினார்.

திருப்பலியின் பின்னர் மாணவர்களினால் புனித யோசேவ்வாஸின் வாழ்க்கை நிகழ்வுகளை நாடகமாக சித்தரித்ததோடு கண்காட்சியும் இடம்பெற்றது. விஷேடமாக புனிதருடைய ஆடை காட்சிக்காக வைக்கப்பட்டிருந்ததை அனைவரும் கண்டுகளித்தனர்.


படங்கள் : கல்தேர








**கடவுள் நம்மிடம் அதிக அன்பாக இருக்கின்றார். இதனை ஒரு கதை மூலமாக அறிந்து கொள்வோமாக. லூக் 15ம் அதிகாரத்தை வாசித்து படத்திற்கு ஏற்ற வாக்கியங்களை எழுதி அனுப்புங்கள்.**




# தேவைக்கேற்ப ஆசைப்படு



அந்த வியாபாரி தொட்ட காரியம் எல்லாம் துலங்காமலே இருந்தது. மனம் சோர்வடைந்த அவர் ஒரு நாள், ஒரு கப்பல் நிறைய பனைவெல்லத்தை நிரப்பிக்கொண்டு ஒரு தீவுக்குச் சென்றார். அங்கும் அவரது வியாபாரம் எடுபடவில்லை. சில நாள்கள் சென்று அத்தீவின் அரசர் அந்த வியாபாரி பற்றிக் கேள்விப்பட்டு அவரை அரண்மனைக்கு அழைத்தார். அரண்மனை மருத்துவர் பனைவெல்லத்தின் மருத்துவப் பயனை அரசருக்கு விவரித்தார். இதில் மகிழ்ந்துபோன அரசர் அந்த வியாபாரி கொண்டு வந்திருந்த ஐயாயிரம் மூட்டை பனைவெல்லத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு விலையாக ஐம்பது மூட்டை பொன்னைக் கொடுத்தார். அதோடு தனது அரண்மனையில் ஓரிரு நாள்கள் விருந்தினராக தங்கிச் செல்லும்படியாகவும் கூறினார். வெற்றியுடன் ஊர் திரும்பிய அந்த வியாபாரியிடம் நடந்ததைக் கேட்டறிந்த மற்றொரு வியாபாரி ஒரு கப்பலில் சில்லுக் கருப்பட்டியை ஏற்றிக்கொண்டு அந்த அரசரிடம் சென்றார். சில்லுக் கருப்பட்டியை சுவைத்து மகிழ்ந்த அரசர், அவரிடம் உங்களுக்கு என்ன வேண்டும் என்றார். அதற்கு அந்த வியாபாரி அரசே, இந்த அரண்மனையில் நீங்கள் எதை அதிகம் மதிக்கிறீர்களோ அதையே கொடுங்கள் என்றார். சிறிதுநேரம் சிந்தித்த அரசர், அவருக்கு ஐம்பது மூட்டை பனைவெல்லத்தைக் கொடுத்து வழியனுப்பி வைத்தார். ஆசைப்படுவதற்கும் ஓர் அளவு உள்ளது.

# சிந்தனைக்காக சில துளிகள்

- ✖ வாழும் வரை வாழ்வில் வருவது எல்லாம் கடந்துபோம். ஆனால் கடந்து போகாதது நானும் கடவுளும்தான்.
- ✖ தோல்வியடைவது அவமானத்துக்குரியது அல்ல, ஆனால் தோல்விக்குப் பின் முயற்சி செய்யாது இருப்பதே அவமானம்.
- ✖ திறமையையும் மிஞ்சி விடக்கூடிய ஆற்றல் விடா முயற்சியுடன் செய்யப்படும் பயிற்சிக்கு உண்டு.
- ✖ பழிவாங்கத் துடிப்பவன், பிறரால் ஏற்பட்டப் புண்ணை ஆறவிடுவதில்லை.
- ✖ பசி என்னும் பட்டறையில் உருவாக்கப்படும் இலக்கியங்கள் மகத்தானவை. உண்மையானவை. எனவே அவை புகழின் உச்சியை சென்றடைகின்றன.
- ✖ முடவனும் கொம்புத் தேன் குடிக்கலாம். மனதில் தன்னம்பிக்கை இருந்தால்.
- ✖ பசி, உழைப்பு வியர்வை இம்மூன்றும் தான் நமது நல்வாழ்வுக்கான சிறந்த மூலிகைகளாகும்.
- ✖ உங்களை அதிகமாக சிந்திக்க வைக்கும் நூல்கள் தான் உங்களுக்குப் பயன்படப்போகும் நூல்களாகும்.

# வர்ணம் தீட்டுக.




**புனித யோசேவ்வாஸ் ஆண்டையொட்டி மட்டக்குளி, புனித மரியாள் மறைப்பாடசாலை மாணவர்களின் சித்திரங்கள்**



ஆக்கம் : D. வேரோணி, தரம் - 2



ஆக்கம் : J பிராங்கிலின், தரம் 10



ஆக்கம் : A. ஆன் எட்றினா, தரம் 10

மாணவர்களே! உங்களது ஆக்கங்களையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு - 08.



# இயேசுவின் மரணம்

விண்ணுக்கும் மண்ணுக்கும் சொந்தமில்லாமல், ஆடைக்கும், உயிருக்கும் உரிமையில்லாமல், தாகம் கூடத் தீர்க்கப்படாமல் புரிந்து கொள்வார் யாருமின்றி, புழுதி வாரித் தூற்றுபவர்களின் மத்தியில் மரங்கள் மட்டும் மனித நேயத்தோடு இயேசுவை அரவணைக்கக் கைகளை விரிக்க அவர் அதன் கரங்களிலே தன்னைக் கையளிக்கின்றார்.

இறப்பு எல்லோருக்கும் வரும். பிறந்தால் இறக்கத்தான் வேண்டும். இது நியதி. இறப்பு ஆதாமுக்கு வந்தது, ஆபிரகாமுக்கு வந்தது, மோசேக்கு வந்தது, இராயப்பருக்கு வந்தது. நமது முன்னோரும் இறந்தனர், நாமும் இறப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இதில் இயேசுவின் இறப்பில் மட்டும் என்ன விசேஷம். ஏன் இயேசுபட்ட பாடுகளையும், அவரின் மரணத்தையும் நினைத்து துக்கமடைகின்றோம். நோன்பு இருக்கின்றோம். அழுது புலம்புகின்றோம். காரணங்கள் பல.

- இயேசு கோதுமை மணியாக மண்ணில் வீழ்ந்தார். (வீழ்ந்தவர், விதையாக வீழ்ந்தார்.)
- நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு இல்லை (யோவா 15:13) எண்பிப்பதற்காக இறந்தார்.
- இறப்பைத் துணிவுடன் எதிர்கொண்டு இறந்தார்.
- எல்லாவற்றிற்கும் மேலாக இறைமகனாக இருந்து இறந்தார். இவைகள் தான் இயேசுவின் இறப்பை முக்கியப்படுத்துகின்றன.


## மாணவர் ஒளி

# என்னிடம் என்ன இருக்கிறது?

எதுவுமே இல்லாதவர்களாக கடவுள் இவ்வுலகில் யாரையும் படைப்பதில்லை. நன்கு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கே இந்த உண்மை புரியும். இவ்வுலகில் பலவித மனிதர்களில் பலவித திறமைகள், வேறுபட்ட மன வலிமைகள், எண்ணற்ற ஆற்றல்கள் எனக் குவிந்துக் கிடப்பதை நாம் காண முடியும். ஆனால் எல்லாத் திறமைகளையும், செல்வங்களையும், வளங்களையும் கடவுள் ஒருவருக்கு அல்லது சிலருக்கு மட்டுமே கொடுத்துவிடுவதில்லை.

எப்படி விண்ணும் வெளிச்சமும், நிலமும் நீரும், செடிகளும், கொடிகளும், காற்றும் கனிமங்களும் ஒன்றுபோல் இல்லையோ அப்படியே மனிதர்களும் அவர்களுள் மறைந்திருக்கும் வளங்களும், ஆற்றல்களும் வேறுபாடுகள் உடையவை. வளங்களை இயற்கை வளம், செயற்கை வளம், மனித வளம் என வகைப்படுத்தலாம். இன்னும் பிரித்து வீட்டு வளம், காட்டு வளம், சமூக வளம், தனியார் வளம் எனவும் இனம் காணலாம். எந்த வளமாக இருந்தாலும் கண்ணுக்குப் புலப்படும் வளங்கள் அனைத்துமே பற்றாக்குறை உடையவை.

வளங்கள் இயற்கையோ, செயற்கையோ ஒவ்வொன்றும் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட பண்புகளையும், பயன்பாடுகளையும்



உடையவை. ஆனால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏதேனுமொரு பயன்பாட்டுக்கு மட்டுமே ஒரு வளத்தை நாம் பயன்படுத்த முடியும். இது வளங்களின் தனிப்பட்ட இயல்பு. தனது தேவைக்கு மிகவும் குறைவாகப் பற்றாக்குறையாக இருக்கும் காலங்களில் கிடைப்பதைக் கொண்டு முடிந்த அளவு தாக்குப்பிடிக்கும் தாவரங்கள் உபரியாகக் கிடைக்கும்போது தேவையான அளவு வளங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன. தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தி வீணாக்குவதில்லை.

மகாத்மா காந்திஜி ஒருமுறை நாட்டு அரசியல் பற்றிய முக்கியமான செய்தி ஒன்றை நேருஜியுடன் பேசியபடியே தனது கரங்களைக் கழுவிக் கொண்டிருந்தார். பேச்சில் கவனம் இருந்ததால் குவளையில் இருந்தத் தண்ணீர் முழுவதையும் காலி செய்துவிட்டார். அதற்காக வருந்திய காந்தியிடம் "இதற்குப்போய் ஏன் இவ்வளவு வருந்துகிறீர்கள்? தண்ணீருக்கா பஞ்சம்? வீட்டுக்கு அருகில் வற்றாத நதியே ஓடிக்கொண்டிருக்கின்றது" என்றாராம் நேரு. அதற்கு "ஆற்றில் எவ்வளவுதான் தண்ணீர் ஓடினாலும் எனக்குரியது இவ்வளவுதான்" என்றாராம் காந்தி (ஒரு குவளை தண்ணீரில் முகம் கழுவி, வாய் சுத்தப்படுத்தி கைகளையும் கழுவுவது அவரது வழக்கம்).

வளங்களைப் பயன்படுத்துவதில் நமது செயல்பாடுகளும் இப்படியே இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்! யார் யாருக்கோ பயன்பட வேண்டிய நாட்டு வளத்தை நாம் திருடமாட்டோம். படிக்கும் வயதில் நேர்மையாக வளர தேவையான வளங்களை நியாயமாக திக்கெட்டிலுமிருந்தும் பெற்றுக்கொள்ள மாணவர்களுக்குத் தகுதி உண்டு. படிக்கும் ஒரு மாணவனைப் பார்த்து "நீ ஏன் படிக்க வேண்டும்?" எனக் கேட்க யாருக்கும் உரிமையில்லை.

வளரும் குழந்தைகள் ஊட்டச்சத்தோடு வளரவேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் எடுக்கின்றார்கள். அவர்களுக்கு தேவையானவற்றை கஷ்டத்தின் மத்தியிலும் செய்கிறார்கள். எல்லாவற்றையும் நேர்மையாகப் பயன்படுத்துவது மாணவர்கள் கைகளில் தான் இருக்கின்றது. எந்த வளத்தையும் வளரும் காலத்தில் நேர்மையாகப் பயன்படுத்த நமக்கு கடமை உண்டு. வீணாக்க நமக்கு உரிமை இல்லை. உணவில் மட்டுமே அக்கறை செலுத்துபவர்களும், உணவில் அக்கறை செலுத்தாதவர்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் நாட்டு வளங்களை வீணடிக்கின்றார்கள்.

வளங்களின் தேவை - அளிப்பைப் பொறுத்தே பற்றாக்குறை தீர்மானிக்கப்படுகிறது. பயன்பாடுகள் கூடக்கூட அனைத்து வளங்களும் அதிகப் பணம் செலுத்தியே பெற்றுக்கொள்ள வேண்டி வரும். பணம் கொடுத்து தண்ணீர் வாங்க வேண்டிய சூழல் உருவாகும் என நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லியிருந்தால் கேலி செய்திருப்பீர்கள். பஞ்ச பூதங்களும், இயற்கையின் கொடைகள் அனைத்தும் நமது பயன்பாட்டுக்கு எனக் கொடுக்கப்பட்டவையாயினும், பயன்படுத்த நமக்கு உரிமை இருப்பதைப் போன்று அடுத்தத் தலைமுறையினருக்கு விட்டுச் செல்லவும் கடமை உண்டு.

நமது உரிமைகளும், கடமைகளும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போலப் பிரிக்க முடியாதவை. உபரிப் பொருளாக இருந்த தண்ணீர் இன்று எல்லா இடங்களிலும் பணம் செலுத்தி வாங்க வேண்டிய பற்றாக்குறை செல்வமாக மாறிவிட்டது. தேவையானவற்றில் சிக்கனத்தைக் கையாள்வதோடு சுற்றுப்புறத்தைத் தூய்மையாகவும், மாசு அடையாமல் காற்றை பாதுகாக்கவும் நமக்குக் கடமை உண்டு.

**யாரோ போட்ட சாலைகளில் பயணம் செய்கிறோம்.**

**யாரோ நட்ட மரங்களின் கனிகளை சுவைக்கின்றோம்.**

**யாரோ எழுதிய புத்தகங்களை படிக்கின்றோம்**

**யாரோ கண்டுபிடித்த தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றோம்!**

இவற்றில் தவறு ஒன்றுமில்லை. இவையெல்லாம் நமது பயன்பாடுகளுக்குத்தான். ஆனால் பெற்றுக்கொள்வதைப்போல் கொடுக்கவும் கடமை உண்டு. ஊட்டச்சத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து வகைத் தாவரங்களும் காயாக, கனியாக, சுத்த காற்றாக, நிழலாக, உரமாக திரும்பக் கொடுக்கின்றன. நாலாவித நன்மைகளையும் அனுபவிக்கும் நாமும் திரும்பக் கொடுக்க வேண்டும்.

நமது முன்னோர்களின் உழைப்பில், வியர்வையில், ஆற்றலில், அறிவில், கஷ்ட நஷ்டங்களில், வேதனை கண்ணீரில், துன்பத் துயரங்களில் உருவானவற்றை நாம் மகிழ்ச்சியாகப் பயன்படுத்துவதைப்போல் அடுத்தத் தலைமுறையினருக்காக இருப்பதைப் பாதுகாத்து கொடுக்கவும், விட்டுச்செல்லவும், நமது அறிவையும், ஆற்றலையும், தனித்தன்மையையும் பயன்படுத்தி புதியன உருவாக்கவும் வேண்டும்.

பயன்படுத்துவதைப் போலக் கொடுக்கவும் கடமை உண்டு. பெறுவதும் கொடுப்பதும் இயற்கையின் மாறாத விதி. கொடுக்காமல் பெற்றுக்கொண்டே இருப்பது பயன்பாடு அல்ல, கடன்பாடு. நாம் கடனாளியாக மாற வேண்டாம். மாணவப் பருவம் சிந்திக்க வேண்டிய பருவம். நமது முன்னோர்கள் நல்லனவற்றைச் செய்யாமல் சென்றிருந்தால் நாம் இப்படி வாழ முடியுமா? மாணவப் பருவத்திலேயே சிறு சிறு செயல்களாக திரும்பச் செய்ய முயற்சிக்கலாம். பிறந்த நாளின்போது ஒரு புத்தகத்தை வாங்கி பாடசாலை அல்லது கல்லூரி நூலகத்துக்குப் பரிசளிக்கலாம். நண்பர்களோடு இணைந்து சுற்றுப்புறங்களில் மரக் கன்றுகள் நட்டு பராமரிக்கலாம். பாடசாலை, கல்லூரிகளில் செயல்படும் அமைப்புகளில் இணைந்து பணியாற்றலாம். நாட்டு வளத்தின் இருப்பையும், பயன்பாட்டையும் எண்ணிப் பார்க்கும் நாம் நமது மனித வளத்தை மறந்துவிடக்கூடாது.

**நமக்கு வெளியே இருப்பது நாட்டு வளம்!**

**நமக்கு உள்ளே இருப்பது மனித வளம்!**

வெளியே உள்ள நாட்டு வளம் கணக்குக்கு உட்பட்டது. அளந்து பார்க்க முடிந்தவை. நமக்குள் புதைந்துக் கிடக்கும் வளங்கள் கணக்கிட முடியாதவை, முடிவில்லாதவை. கண்ணுக்குத் தெரியாதவை. ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா! பயன்படுத்தும்போதுதான் திறமைகள் வெளிப்படும். ஒரு சிறிய விதைக்குள் ஒரு காடே மறைந்திருக்கின்றது என்பதை நம்ப முடிகின்றதா? இதைப்போல்தான் மனித ஆற்றலுக்கும் எல்லை இல்லை. தன்னில் இருக்கின்றது உலகை வியக்க வைக்கும் சக்தி என்பதை உணர வேண்டிய பருவமும் மாணவப் பருவமே. ஆனால் துரதிஷ்டவசமாக பலரும் மாணவப் பருவத்தில் அதைக் கண்டுபிடிக்க நேரம் ஒதுக்குவதில்லை. திறமைகள் ஒளிந்திருக்கின்றன என்பதையும் நம்புவதில்லை. பிறர் உதவலாம் நாம்தான் வெளிப்படுத்தவேண்டும்.

**பாடங்களைப் பயிற்றுவிப்பார்கள், ஆனால் நாம்தான் தேர்வுகளைச் சந்திக்க வேண்டும்!**

**விளையாடப் பயிற்சி தருவார்கள், ஆனால் நாம்தான் களத்தில் விளையாட வேண்டும்!**

**நீச்சல் கற்றுத் தருவார்கள், ஆனால் நாம்தான் நீரில் நீந்த வேண்டும்.**

**விதிமுறைகளை உணர்த்துவார்கள், ஆனால் நாம்தான் அதன்படி வாழ வேண்டும்!**

சிறகு முளைத்து பறக்கத் துடிக்கும் பறவைக் குஞ்சு சிறகடித்துப் பறக்க ஆகாயவெளியில் கோடு போட்டோ, எல்லை விதித்தோ அதைக் கட்டுப் படுத்த முடியுமா? பூமியின் கனத்தை சுவரை முட்டி மோதி வெளிவரும் விதையின் இளம் குருத்துக்கு சூரிய வெளிச்சத்துக்கும், சுவாசிக்கும் காற்றுக்கும் தடை உண்டா? உயர்ந்த நோக்கத்தோடு தன்னை உருவாக்கும் ஒரு மாணவனுக்கும் முன்னேறுவதற்குக் கட்டுப்பாடும் இராது. தேவையாக வளங்களைப் பெறுவதில் தட்டுப்பாடும் எழாது. தன் வீட்டில் இல்லாவிட்டாலும் வேறு யார் மூலமாவது நேர்மையான தேவைகள் சந்திக்கப்படும். ஆனால் பறவைக் குஞ்சு சிறகடித்துப் பறக்கும் போதுதான் பறப்பதற்கு ஆகாய வெளியில் தடையில்லை என்பது அதற்குத் தெரிய வருகிறது. மண்ணை முட்டும் இளம் குருத்து மண்ணுக்கு மேலே முகம் காட்டும் போதுதான் சூரிய வெளிச்சத்துக்கும் சுவாசிக்கும் காற்றுக்கும் உத்தரவாதம் கிடைக்கிறது. மூச்சுக்காற்றுக்காக ஒரு விதை எத்தனை முறை மண்ணை முட்டியிருக்கும்! அதே முயற்சி மாணவர் பருவத்தில் நமக்கும் வேண்டும். சிறகடித்துப் பறக்க ஓர் இளம் குஞ்சு எவ்வளவு முயற்சி எடுக்கின்றதோ அவ்வளவு முயற்சி நமக்கும் வேண்டும். சிறகு முளைத்திருப்பது பறப்பதற்கென அது இளம் குஞ்சாக இருக்கும்போதே தெரிந்து கொள்கிறது.

**மந்திர சக்தியால் மாங்காய் காய்ப்பதில்லை!**

**தந்திரத் தன்மையால் தேங்காய் தொங்குவதில்லை!**

**இயந்திர இயக்கத்தால் நாமும் இயங்குவதில்லை!**

**தனித் தன்மையால் செயல்பட மேலோர் தயங்குவதில்லை.**



# “உண்மையான நோன்பு பிறருக்கு உதவுவதாகும்” – திருத்தந்தை




உண்மையான நோன்பு என்பது பிறருக்கு உதவுவதாகும், அதேநேரம், போலியான நோன்பு என்பது, மத உணர்வை, அழுக்கான செயல்களோடு கலப்பதாகும் மற்றும், இது, தற்பெருமையை பறைசாற்றுவதாகும், என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பங்குனி 02, வியாழன் காலை தன் மறையுரையில் கூறினார். இந்நாளைய திருப்பலி வாசகங்கள், உண்ணா நோன்பு பற்றி, அதாவது, இத்தவக்காலத்தில், நம் ஆண்டவரிடம் நெருங்கிச் செல்வதற்கு அழைப்பு விடுக்கும் தவத்தைப் பற்றிப் பேசுகின்றன என்றுரைத்த திருத்தந்தை, தான் பாவி என்று உணர்ந்து, மனம் வருந்தும் உள்ளம் குறித்து இறைவன் மகிழ்கின்றார் என்ற திருப்பா வசனத்தையும் குறிப்பிட்டார். தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றியத் திருப்பலியில், போலியான மத உணர்வில் கடைப்பிடிக்கப்படும் நோன்பு பற்றி, முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா சொல்வதையும் விளக்கினார் திருத்தந்தை.

வெளிவேட நோன்பு பற்றியும் விளக்கிய திருத்தந்தை, இயேசு வெளிவேடம் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார் என்றும், நோன்பிருந்துகொண்டு, அதேநேரம், வீட்டில் வேலைசெய்பவருக்கு உரிய கூலியைக் கொடுக்காமல் இருந்தால், வெளிவேடம் என்றும் கூறினார்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த சமயம் அது, இயேசு சபை அருள்பணியாளர் பேதுரோ அருப்பே அவர்கள், ஜப்பானில் மறைப்பணியாற்றியபோது, ஒரு பணக்கார தொழிலதிபர் அவரிடம் வந்து, நற்செய்திப் பணிகளுக்காக நன்கொடை வழங்கினார், அப்போது அவர் தன்னுடன், ஒரு புகைப்படக்காரரையும், ஒரு செய்தியாளரையும் உடன் அழைத்துச் சென்றிருந்தார், இவ்வளவுக்கும் அவர் கொடுத்த நன்கொடை பத்து டாலரே எனவும் கூறினார், திருத்தந்தை.

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும், பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு என, உண்மையான நோன்பு பற்றிச் சொல்லும், இறைவாக்கினர் எசாயா நூல் பகுதியையும் மறையுரையில் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை.

இந்த வார்த்தைகளை நம் இதயத்தில் பதித்து, நாம் எவ்வாறு நோன்பு இருக்கிறோம் எனச் சிந்திப்போம் எனவும், 200 யூரோக்கள் பணத்திற்கு உணவு அருந்திச் செல்லும் மனிதர் ஒருவர், வீடு திரும்பும் வழியில், பசியால் வருந்தும் ஒருவரைக் கண்டும் காணாதது போல் நடந்து செல்வது எப்படி இருக்கும்? என்ற கேள்வியுடன் மறையுரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

# வரலாற்றில் வீசும் நச்சுக் காற்றால் மூச்சடைத்துப் போகிறோம்



“உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்” என்று, இறைவாக்கினர் யோவேல் வழியாக, இறைவன் விடுக்கும் அழைப்பை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருநீற்றுப் புதன் மாலையில் கொண்டாடிய திருப்பலியில், தன் மறையுரையின் மையப் பொருளாக்கினார். புதன் மாலை, உரோம் நகரில் அமைந்துள்ள புனித சபீனா பசிலிக்காவில் தவக்காலத்தின் முதல்நாள் திருப்பலியை நிறைவேற்றியத் திருத்தந்தை, இறைவனின் கருணையைக் காண்பதற்கு வழங்கப்பட்டுள்ள சிறந்த காலம், தவக்காலம் என்று தன் மறையுரையில் எடுத்துரைத்தார்.

மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனிதர்கள், மீண்டும் மண்ணாகப் போவது இயற்கை என்றாலும், இந்த மண்ணின் மீது, இறைவனின் கருணை மிகுந்த மூச்சுக் காற்று பட்டதால் நாம் வாழ்வு பெற்றோம் என்பது, நமக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் கொடை என்று திருத்தந்தை கூறினார். மனித வரலாற்றில் வீசும் நச்சுக் காற்றால் நாம் மூச்சடைக்கப்பட்டாலும், இறைவனின் வாழ்வு வழங்கும் மூச்சு, தொடர்ந்து நம்மீது பட்டுக்கொண்டே இருக்கிறது என்று, தன் மறையுரையில் குறிப்பிட்டார், திருத்தந்தை.

வாழ்வை ஒரு பொருட்டாக மதிக்க மறுப்பது, அக்கறையற்ற நிலை, போன்ற நச்சுக் காற்றுகள் வீசுவதால், நமது உலகச் சூழல் அதிக மாசடைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய மாசடைந்த சூழலுக்கு மறுப்புத் தெரிவிக்க, தவக்காலம் நம்மை அழைக்கிறது என்று கூறினார். நம்மை மட்டுமே மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் செபம், நோன்பு, தர்மம் என்ற செயல்பாடுகளிலும், நாம் மூச்சடைத்துப் போக வாய்ப்புக்கள் உண்டு என்று குறிப்பிட்டத் திருத்தந்தை, காயப்பட்டிருக்கும் நம் உடன்பிறந்தோரை மையப்படுத்தி, நம் தவக்கால முயற்சிகள் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யாரையும், எந்த அடிப்படையிலும் ஒதுக்கி வைக்காமல், அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு தவக்காலம் தகுந்ததொரு தருணம் என்பதை திருத்தந்தை, திருநீற்றுப் புதன் மறையுரையில் வலியுறுத்தினார். இப்புதன் மாலை 4.30 மணிக்கு, புனித ஆன்செல்ம் கோவிலிலிருந்து புறப்பட்ட தவப் பயணத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன், திருப்பீட அதிகாரிகள், அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கலந்துகொண்டனர். தவப்பயணத்தின் இறுதியில், புனித சபீனா பசிலிக்காவில் நடைபெற்ற திருப்பலியில், திருத்தந்தை சாம்பலை அர்ச்சித்து, அனைவருக்கும் வழங்கினார்.

# பங்கு அருள்பணியாளர்களுக்கு திருத்தந்தையின் தவக்கால தியானம்

பங்குனி 02, வியாழன் காலை, புனித ஜான் இலாத்தரன் பசிலிக்கா பேராலயத்தில், உரோம் மறைமாவட்ட பங்கு அருள்பணியாளர்களைச் சந்தித்த திருத்தந்தை, அவர்களுக்கு வழங்கிய தவக்காலத் தியான உரையில் நம்பிக்கையை மிகுதியாக்கும் என்ற வேண்டுதல், மனமாற்றத்தின் தொடக்கமாக, நம்மிடமிருந்து எழவேண்டும் என்று, கூறினார். உடன்பிறந்தோர் குற்றம் புரிந்தபின் அவர்கள் மன்னிப்பு வேண்டி வந்தால், அவர்களை ஏழுமுறை, எழுபது முறை மன்னிக்கவேண்டும் என்று இயேசு கூறிய சொற்களைத் தொடர்ந்து, அவருடைய சீடர்கள், “எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்” (லூக்கா 17:5) என்று வேண்டிக்கொண்டதை தன் தியான உரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டத் திருத்தந்தை, நினைவாற்றல், நம்பிக்கை, தேர்ந்து தெளிதல் என்ற மூன்று கருத்துக்களின் அடிப்படையில் தன் உரையை வழங்கினார்.

நமது நம்பிக்கை வளர்வதற்கு, நினைவாற்றல் மிக உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டத் திருத்தந்தை, நம்பிக்கை கொண்டவர்கள், இறைவன் வழங்கக்கூடிய ஆச்சரியமான விடயங்களையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் பெற்றிருப்பர் என்று எடுத்துரைத்தார். நம்பிக்கையுடன் நடந்து செல்லும் பாதையில் ஒவ்வொரு தருணத்திலும் ஏற்படும் திருப்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, தேர்ந்து தெளியும் உள்ளத்தை அருள்பணியாளர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று, தன் தியான உரையில் வலியுறுத்திக் கூறினார், திருத்தந்தை.

நினைவாற்றல் குறித்து விளக்கமாகப் பேசியத் திருத்தந்தை, “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று, சொன்ன இயேசுவின் பலியை, ஒவ்வொருநாளும் கொண்டாடும் பாக்கியம் பெற்றோர், அருள்பணியாளர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியபின், “திருப்பலி என் வாழ்வு, மற்றும், என் வாழ்வு தொடர்ந்து நிகழும் ஒரு திருப்பலி” என்று புனித அல்பெர்த்தோ ஹூர்த்தாதோ (Alberto Hurtado) கூறியதை நினைவுகூர்ந்தார்.

“சீமோனே, சீமோனே, ... நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்” (லூக்கா 22:31-32) என்று இயேசு கூறிய சொற்களை எடுத்துரைத்தத் திருத்தந்தை, தன் வாழ்நாள் முழுவதும் சோதனைகளோடு போராடிய பேதுரு, நமக்கொரு சிறந்த எடுத்துக்காட்டு என்று சுட்டிக்காட்டினார். அருள்பணியாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் உருவாகும் சோதனைகளையும்,....

➲15 பக்கம்




வெறும் கருத்தளவில் இருக்கும் கடவுளை நம்புவதிலிருந்து மனமாற்றம் பெற்று, கிறிஸ்துவின் வழியே இவ்வுலகிலும், நம் வாழ்விலும் நுழைந்த கடவுளை நம்புவதற்கு தவக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பங்குனி 02 வியாழன் காலை தன் மறையுரையில் கூறினார்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் திருப்பலியாற்றிய திருத்தந்தை, துன்பப்படவும், உதறித் தள்ளப்படவும், கொலை செய்யப்படவும் இவ்வுலகிற்கு தான் வந்ததாக இயேசு கூறும் வார்த்தைகளை மையப்படுத்தி, தன் மறையுரையை வழங்கினார். துன்புறும் கடவுள் என்ற எண்ணம் நம்மில் பலருக்கு சங்கடங்களை தருவதால், அத்தகைய கடவுளை விட்டு விலகி, நமது கருத்துக்களுக்கு ஏற்றதுபோல் ஒரு கடவுளை உருவாக்கிக் கொள்கிறோம் என்று திருத்தந்தை தன் மறையுரையில் எச்சரிக்கை விடுத்தார்.

பிறருக்காக தன்னை முழுவதுமாக இழந்த இயேசு, நம்மையும் அத்தகைய தியாக வாழ்வுக்கு அழைக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, இந்த அழைப்பை ஏற்பதற்கு, தவக்காலம் தகுந்ததொரு தருணம் என்று எடுத்துரைத்தார்.

# இயேசுவின் உருமாற்றமும் நம் வாழ்வும்

பங்குனி 12



இயேசுவின் உருமாற்றம் ஒரு வியப்புக்குரிய செயல். உருமாற்றத்தின்போது அவரது மனிதத் தன்மையை ஊடுருவி அவரது இறைத்தன்மையின் ஒளி வீசிற்று. உருமாறிய கிறிஸ்துவின் ஒளிக் கதிர்கள் உலகம் முழுவதையும் ஆட்கொள்வதாய் அமைந்தது. கிறிஸ்துவின் உருமாற்றத்தின் போது "மூவுலகணிகளின் ஆண்டவரே! உமது உறைவிடம் எத்தனை இனிமையானது" என்ற திருப்பாடல் வாக்கைப் பேதுரு உணர்ந்தவர் போல், "ஆண்டவரே! நாம் இங்கிருப்பது எத்துணை நன்று. உமக்கொன்றும், மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாய்க் கூடாரம் மூன்று அமைப்போம். என்றார்.

"இவரே என் அன்பார்ந்த மைந்தர். இவரில் நான் பூரிப்படைகின்றேன். இவருக்குச் செவிசாயுங்கள்" என்ற குரலொலி அன்று தாபோர் மலையில் இயேசுவுடன் இருந்த மூன்று சீடர்களுக்கும் கேட்டது. இதே நற்செய்தி இயேசுவின் உருமாற்ற விழா அன்று வாசிக்கப்படும் பொழுது கிறிஸ்துவின் மகிமைக்கு நாமும் சாட்சிகளாகிறோம். உருமாற்ற நிகழ்ச்சியானது திருத்தூதர்களுக்கு ஒரு பயிற்சித் தளமாக அமைகிறது. கிறிஸ்துவின் பாடுகள் மரணத்திலும்கூட அவரது இறைத்தன்மையை நம்பும்படி அவர்களை அழைக்கிறது. சீடரின் உள்ளத்திலிருந்து சிலுவையைப் பற்றிய இடறலை அகற்றியது (திருப்பலித் தொடக்கவுரை). இயேசுவின் தெய்வீகத் தன்மையில் உறுதியையும் இவருக்கு என்றும் உண்மையுள்ளவராய் இருக்கக்கூடிய மனப்பக்குவத்தையும் அளிக்கிறது.

அதுபோலவே நமக்கும் இவ்வுருமாற்றமானது இயேசுவின் இறைத் தன்மைக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது. கிறிஸ்துவின் எல்லா அருங்குறிகளும் அவரது இறைமாட்சிமையை வெளிப்படுத்தும் கருவிகளாய் இருந்தன என்பது உண்மையே. எனினும் உருமாற்றத்தின் போது மனிதத் தன்மையின் இருண்ட திரையை முற்றும் களைந்தெறிந்து விட்டு இறையாட்சியின் முழுமையை வெளிப்படுத்தினார் இயேசு. மாட்சி பெற்று விளங்கும் அவரை உற்றுப் பார்த்து நாம் முழங்க வேண்டியது. நம்புகின்றேன் ஆண்டவரே, நீரே உயிருள்ள இறைவனின் திருமகன்"

## நற்கருணையும் உருமாற்றமும்

அன்று உருமாறிய அதே கிறிஸ்து இன்றும் சிறப்பான முறையில் நற்கருணை அருள்சாதனமாக உருமாற்றம் பெறுகிறார் எனலாம். திருப்பலியில் நாம் இவ்வானக உணவை உட்கொள்ளும் போது மகிமைப் பெற்ற கிறிஸ்துவில் பங்கு பெறுகிறோம்.

இன்று இவ்வழிபாட்டின் வழியாக இறைவனுடைய இல்லத்து மகிமையைக் கண்டு அவரைப் புகழ்கிறோம். "இங்கே இருப்பது எத்துணை நன்று" என்று கூறாமல் கூறுகிறோம். திருப்பலி நேரத்தில் நாம் புதியதோர் தாபோர் மலையில் இருக்கிறோம் எனலாம். இவ்வாறு நற்கருணை மகிமையின் ஊற்றாக இருப்பதால் அது உருமாற்றத்தின் அருள்சாதனமாய் இருக்கிறது. இதில் பங்கேற்போர் அனைவரும் இயேசுவின் சாயலாக உருமாற்றம் அடைவதே குறிக்கோளாகும். ஏற்கனவே திருமுழுக்கு வழியாய்க் கிறிஸ்துவில் நாம் உருமாற்றம் பெறத் தொடங்கிவிட்டோம் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

## திருமுழுக்கில் கிறிஸ்துவின் உருமாற்றம்

தொடக்கக்காலத் திருச்சபையில் (உ+ம்) 4ஆம் நூற்றாண்டு பாஸ்காத் திருவிழிப்பன்று திருமுழுக்கு நடைபெற்றது. தவக்காலம் அதற்குத் தயாரிப்புக் காலமாக அமைந்திருந்தது. திருமுழுக்குப் பெறவேண்டிய ஆள்கள் பெயர்பதிவு செய்துவிட்டுத் தவக்காலத் தொடக்கத்தில் ஆயர் முன் வந்து நிற்பர். விருப்ப நிலையிலுள்ளோருடைய தகுதி பற்றி "சோதனை" நடைபெறும். தவக்காலத்தில் வெளி ஆடையின்றியும் வெற்றுக் காலுடனும், மயிர்ச்சட்டையுடனும் நிற்பதுண்டு. (இது பாவம் செய்த ஆதாமின் உடை தொ.நூ 3:21) பாவம் மனிதரை இந்நிலைக்கு கொண்டு வந்துவிட்டது. எனவே அலகையுடன் போரிட்டு வெற்றிபெற வேண்டும் என்பதையே இது உணர்த்தி நிற்கின்றது. திருத்தந்தையர் சிலர் மேற்குறித்த சடங்குகளை இயேசுவின் சோதனையுடனும் அதில் அவர் பெற்ற வெற்றியுடனும் ஒப்பிடுகின்றனர். எனவேதான் இன்று தவக்கால முதல் ஞாயிறன்று இயேசுவின் சோதனை" நற்செய்தியாக வாசிக்கப்படுகின்றது (மாற் 1:12-15).

தவக்காலம் திருமுழுக்கிற்கான தயாரிப்பின் காலம் என்கிறோம். திருமுழுக்கின் வழியாய்ப் பழைய மனிதனைக் களைந்து புதிய மனிதனை அணிந்து கொள்கிறோம். இதை உணர்த்தவே வெண்ணாடை போர்த்தப்படுகிறது. ஏனெனில் திருமுழுக்குப் பெற்றவர் உருமாற்றம் அடைந்தவர் என்று கூறிவிடலாமில்லையா? தவக்காலம் இரண்டாம் ஞாயிறு. வாசிக்கப்படும் நற்செய்தியும் உருமாற்றம் பற்றியதே (மாற் 9:1-9).

## கிறிஸ்தவ வாழ்வும் உருமாற்றமும்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது திருமுழுக்கில் தொடங்கி நற்கருணை வழியாய்ச் செயல்படும் உருமாற்றத்தின் தொடர்ச்சியே. புனித பவுல் கூறுவதுபோல இயேசுவின் முகவொளி நம் உள்ளங்களில் சுடர்விடுகிறது ( 2 கொரி 4:6) மேலும் "இப்போது நாம் அனைவரும்....

15

# கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு

பங்குனி 25



திருமண ஒப்பந்தம் ஆகியிருந்தும், கணவரோடு கூடி வாழாதிருந்த மரியாவிடம் கபிரியேல் தூதர் சென்று "நீ கருவுற்று ஓர் மகனைப் பெறுவாய்" என அறிவித்தார். "இது எப்படி நிகழும்" என்று கேட்ட கேள்விக்கு, "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்ற தெளிவினைப் பெற்று, இறைவனுக்கு முழுமையாக தன்னையே அர்ப்பணிக்கின்றார் மரியாள். இதனால் இறைவனின் தாயானாள். இந்நிகழ்வில் அன்னை மரியாவிடம் விளங்கிய மூன்று பண்புகளை நாம் கற்றுக்கொள்கின்றோம்.

**முதலாவது :** கேள்வி கேட்டல், தூதர் கூறிய செய்தியைக் கேட்டு கலங்கினாலும், இறைச் செய்தியை கேட்டவுடன் தெளிவினைப் பெறுகிறாள். இறைச் சித்தத்தை ஏற்கிறாள்

**இரண்டாவது :** சுய முடிவெடுத்தல் மரியா திருமணத்திற்கு முன்பே கடவுளின் தாயாகப் போகிற செய்தியைக் கேட்டாலும் ஆம் கடவுளின் அடிமை உமது விருப்பத்தின் படியே ஆகட்டும் என்று தன் வாழ்க்கையில் முடிவெடுக்கிறாள்.

**மூன்றாவது :** இறுதிவரை நிலைத்திருத்தல், இறைத்திட்டத்திற்கு ஒத்துழைக்க முடிவெடுத்த பின்னர் ஆம் என்று பதில் மொழி அளித்து சிலுவை வரை நிலைத்திருந்து மனுக்குலத்தின் தாயானாள்.

# வாழ்வின் சாட்சி

"இந்தச் செபமாலையை கொண்டு போய் ரூபி சகோதரிக்குக் கொடுங்கள்"

மெஜகோரி புனித நாட்டுப் பயணத்தில் ஓர் அருட்சகோதரியின் சாட்சி




தன் குடும்பத்தினரோடு மெஜகோரி புனித பயணம் மேற்கொண்ட கருணையுள்ள ரூபி சகோதரியுடன், புனித பயணம் செல்ல எனக்கும் அழைப்பு கிடைத்தது. நானும் இவ்வழைப்பை ஏற்று 06.10.2016 அன்று அப்பயணத்தில் கலந்து கொண்டேன். இந்தப் புனித பயணத்தின் போது 08.10.2016 அன்று அன்னை மரி காட்சி கொடுத்த மலையுச்சிக்கு சென்றேன். அந்த மலையுச்சியில் அன்னை மரியின் உருவச் சிலையும், இயேசு கிறிஸ்துவின் திருச்சிலுவையும் இருந்தது. அன்னை மரியின் முன்னால் சென்று, செபம் செய்த பின்னர், அங்கிருந்த திருச்சிலுவையின் முன்னால் சென்று, செபம் செய்யுமாறு என்னிடம் கேட்டுக் கொண்டவர்களுக்காக, கண்களை மூடிச் செபம் செய்ய ஆரம்பித்தேன். இந்தப் புனித பயணத்தின் போது ரூபி சகோதரியின் செபமாலை காணாமற் போனதால், அச்சகோதரிக்காகவும் விசேஷமாக, என் செபமாலையைக் கையிலெடுத்து, திருச்சிலுவையில் வைத்து செபம் செய்தேன்.

நான் இவ்விதமாக செபம் செய்து கொண்டிருக்கும்போது, என் கையிலிருந்த செபமாலையுடன் வேறொரு பொருளும் என் உள்ளங்கையில் இருப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. கண்களை திறக்கும்போது என் பின்னாலிருந்து "இந்தச் செபமாலையை கொண்டு போய் ரூபி சகோதரிக்குக் கொடுங்கள்" என்று ஒரு குரல் கேட்டது. அதிர்ச்சியுடன் கூடிய சந்தோஷத்துடன் கண்களைத் திறந்து, என் கையை சிலுவையினின்று எடுத்து, விரித்து உள்ளங்கையைப் பார்த்தேன். கையிலே ரோஸ், வெள்ளை நிற முத்துக்களிலான செபமாலையொன்று என் கையிலிருப்பதைக் கண்டேன். ஒவ்வொரு பத்து மணிகளுக்கும் இடையில் ரோஸ் நிறத்தில் ரோஜா மலர் விரிந்திரிப்பதைப் போன்ற பெரிய ரோஜா மலர் மணிகள் காணப்பட்டன. செபமாலையிலிருந்த சிலுவையில் அன்னை மரி இயேசுவை அணைத்துக் கொண்டிருப்பதைப் போன்ற காட்சி காணப்பட்டது. நான் மிகவும் சந்தோஷத்துடன் எனக்குத் தந்த இந்தப் பரிசுக்காக அன்னை மரிக்கு நன்றி செலுத்தினேன். இந்தப் புனிதப் பயணத்தில் அன்னை மரியின் கரிசனையினால் இறைமகன் எனக்குக் கொடுத்த இந்தப் புதுமையான சாட்சிக்காக அவருக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் நிறைவடையாது. அன்னை மரியை எங்களுக்கு அர்ப்பணித்த இயேசுவுக்கு நன்றி செலுத்துவதோடு, இந்த சாட்சியை வாசிக்கும் வாசகர்களுக்கும் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

தனியாகவோ, குடும்பத்துடனோ, கூட்டத்தினரோடோ தங்களது இதயப்பூர்வமாக தினமும் செபமாலை சொல்லி, அன்னை மரியினூடாக கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்று கொள்ள வேண்டும் என்பதே அந்த வேண்டுகோள். அன்னை மரியுடன் சேர்ந்து எங்கள் குடும்பங்கள், சபைகள், மற்றும் முழு உலகத்துக்காகவும் நாம் செபிப்போம்,

## "தினமும் செபமாலை சொல்லுங்கள்"

**என்ற மரியன்னையின் வேண்டுகோளுக்கு செவிமடுத்து கடவுளிடம் விசுவாசம் நம்பிக்கை, அன்பு எனும் புண்ணியங்களை கடைப்பிடித்து எங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடருவோம்.**

# கொழும்பு உயர் மறைமாவட்ட தவக்கால நிதி

**கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குத்தந்தையர்கள், கத்தோலிக்க பாடசாலை அதிபர்கள், மற்றும் கத்தோலிக்க நிறுவனங்களின் இயக்குனர்களுக்கு,**

"இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்"
( 2 கொரிந்தியர் 6:2)

இறைவனின் மேலான இரக்கத்தினால், மீண்டும் ஒரு முறை அவரது உன்னதமான அன்பினை அனுபவிக்க கிறிஸ்தவர்களாகிய எமக்கு ஏற்ற காலம் வந்துள்ளது. முழு மனித உலகினதும் விடுதலைக்காக, நம்மிடம் உள்ள கிறிஸ்தவ அழைப்பும், அதனை உறுதிப்படுத்திக் -கொள்ளவும், நாம் பெற்ற அவ்வழைப்பினை மீண்டும் ஒரு முறை ஆராயவும் இது எமக்கு சிறந்ததோர் வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவே இந்த தவக்காலத்தில் இறைவனோடும் எமது அயலவர்களோடு ஆழமாக உறவினை வளர்த்துக்கொள்ள எம்மை அழைக்கின்றது. அதனால் இத்தகுந்த காலத்தில், எமது சமுதாயத்தில் உள்ள எளியவர்கள், துன்பங்களில் சிக்குண்டு துன்பங்கள் துயரங்களுக்கு உட்பட்டுள்ளோரை மனதில் கொண்டு அவர்களை அதில் இருந்து தூக்கிவிடுவதற்கு செபம், தபம், தியாகத்தினால் எம்மால் செய்ய கூடிய விடயங்களை நாம் செய்ய வேண்டும்.

**2017 ஆண்டு தவக்காலத்தில் எமது கருப்பொருள்**

**"ஆண்டவரிடம் மகத்தானவற்றை வேண்டிக்கொள்வோம். நாம் பெற்றுக்கொண்டவற்றிற்கு இறைவனை மகிமைப்படுத்துவோம்"** என்பதற்கினங்க உங்களினது பங்கு, அலுவலகம், மற்றும் பாடசாலைகளில் நன்கொடைகள் வழங்க விசேடமாக அச்சடிக்கப்பட்டிருக்கும் தவக்கால நிதி சேகரிப்பு தபால் உறை அனுப்பப்பட்டுள்ளது. கீழ்கண்ட நோக்கங்களை மனதில் கொண்டு இத்தவக்காலத்தில் ஒறுத்தல் செய்ய எமது கவனத்தை செலுத்தியுள்ளோம்

நோக்கங்கள்

1. இல்லங்கள் புதுப்பித்தல்
2. விசேட நோயாளர்களுக்கான நிதியுதவி
3. பங்கில் உள்ள திறமையான ஏழ்மையில் நிலையில் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்
4. சிறைப்பட்டோரை விடுதலை செய்ய

உங்களது நன்கொடைகளை உயர் மறைமாவட்டத்தின் பொருளாளர் அருட்தந்தைக்கோ அல்லது செத்சரண நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தைக்கு கொமர்சல் வங்கியின், பொரளை கிளையில், கணக்கிலக்கம் 1190030954என்னும் வங்கிக்கணக்கிற்கு பணமாகவோ, காசோலையாகவோ அனுப்பிவைக்கலாம்.

நன்றி

இறையாசீர்

**றொஹான் டி அல்விஸ் அடிகள்**
**செத்சரண - கரிட்டாஸ்**
**கொழும்பு**




# கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது





இந்திய மற்றும் இலங்கை பக்தர்களால் மிகவும் பக்திக்குப் பாத்திரமான இந்து இலங்கை கடற்பரப்பில் அமைந்திருக்கும் இலங்கைக்கு உரிய கச்சத்தீவு தீவில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இவ்வருடமும் வெகு விமரிசையாகக் (12.03.2017) கொண்டாடப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் அமைக்கப்பட்ட புதிய ஆலயத்தில் முதல் முறையாக வழிபாடு நிகழ்த்தப்பட்டது. இத்திருவிழா திருப்பலியை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. பத்திநாதர் ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரினால் ஒப்புக்-கொடுக்கப்பட்டது. யாழ் அதிபர் N. வேதநாயகம், கடற்படை உயர் அதிகாரி வயிஸ் அத்மிரால் ரவிந்திர விஜயரத்ன, யாழ் பாதுகாப்பு படை அதிகாரி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, கடற்படை ஆணையாளர் ரியர் அத்மிரால் பியல் சில்வா, யாழ் பிரதேச பொறுப்பு உப பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள் பலரும் இதில் பங்கேற்றனர். இவ்வருடத் திருவிழாவிற்காக 6700க்கும் மேற்பட்ட இலங்கை கத்தோலிக்க பக்தர்களும், குருக்கள் துறவிகள், கன்னியர்கள் பெரும் எண்ணிக்கையானோர் இத் திருப்பலியில் பங்கேற்றனர். நீண்ட காலமாக இருநாட்டு பக்தர்களின் வணக்கத்திற்கு பாத்திரமான இந்த யாத்திரைத்தலம் சிறிய அளவிலும், வசதிகள் குறைந்து காணப்பட்டது. இதனால் 2016ஆம் ஆண்டு மாசி மாதம் 21ஆம் திகதி கச்சைத்தீவு திருநாள் நிறைவுற்ற பின் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் இவ்வருட திருவிழாவுக்கு முன்பு புதிய ஆலயம் கட்டப்பட வேண்டும் என்ற தேவையை முன்வைத்தார். அதற்கேற்ப கடற்படை உயர் அதிகாரிகளால் இப்புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா கடந்த வருடம் வைகாசி மாதம் 05ஆம் திகதி நடைபெற்றதோடு, புதிய ஆலயம் 2016, மார்கழி மாதம் 23ஆம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயருக்கு கையளிக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரால், டெல்ப் தீவு மற்றும் கச்சத்தீவு போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. நீர் வழங்கல் திட்டமும் திருவிழாவையொட்டி செய்துகொடுக்கப்பட்டது.

கச்சத்தீவு திருநாளுக்கு பக்தர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர் அடிப்படை வசதிகள், மின்சார வசதிகள் போன்றவை கடற்படையினரால் செய்துகொடுக்கப்பட்டது. பக்தர்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு குழுவினர், வைத்திய சேவைகளும், வைத்தி -யர்களும் வரவழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**படங்கள் மற்றும் தகவல் : T. சுனில்**

# இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ மனமாற்றமே தேவை



கடலில் மீன்கள் வாழ்ந்தாலும் அதனுள் உப்பு சேராததற்கு காரணம் அதன் உடம்பில் இருக்கும் செதில்களேயாகும. கிறிஸ்தவ பக்தர்கள் ஆகிய நாங்கள் தவக்காலத்தில் எத்தனை திருப்பயணங்கள் மேற்கொண்டாலும், பக்தி வழிபாடுகளில் ஈடுபட்டாலும், அது இறைவனுக்கு உகந்ததாக அமையாததற்கான காரணம் எமது வாழ்வில் பாவம் எம்மை சூழ்ந்திருப்பதாலேயே ஆகும்.

சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை கடந்த ஞாயிற்றுக்கிழமை புனித அன்னம்மாள் ஆலய மாசி மாத வருடாந்த திருவிழா திருப்பலியில் போது இக்கருத்தை தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் தவக்காலத்தில் கிறிஸ்து எமது ஆன்மீக வாழ்வை மாற்ற அழைப்பு விடுக்கின்றார். எமது பாவத்திற்கு 15

# கழிவுப் பொருட்களை அகற்ற ஓர் நிரந்தரமான தீர்வு காணுதல்

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கொழும்பு நகரில் கழிவுப் பொருட்களை அகற்றும் பிரச்சினைகளுக்கு ஓர் நிரந்தர தீர்வு காணும்படி எமது நாட்டின் ஜனாதிபதி அவர்களிடம் கோரிக்கை விடுத்தார். கடந்த வாரம் பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் ஒன்றிப்பில் அவர் தெரிவிக்கையில் அரசாங்கம் ஒரு நாட்டின் கட்டமைப்பு சேவைகள், கழிவுப்பொருட்களை அகற்றுதல் போன்ற பராமரிப்பில் தமது உயர் முக்கியத்துவத்தை அளிக்க வேண்டுமென தெரிவித்துக் கொண்டார். இவ்வேண்டுகோளுக்கு இணங்க மேன்மைமிகு ஜனாதிபதி அளித்த பதிலுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக கர்தினால் ஆண்டகை அவர்களும், வணக்கத்துக்குரிய கொடுகொட தர்மவாச மகா தேரர் அவர்களும் விடுத்துள்ள செய்தி.

கொழும்பு ஜா.எல பகுதியில் கழிவுப் பொருட்களை குவிக்க வேண்டாமெனவும், இதனால் இப்பகுதியில் உள்ள சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு அத்திட்டத்தை அங்கு அமுலாக்கப்படவில்லை என்பதை எமது நாட்டின் மேன்மைமிகு ஜனாதிபதி அவர்கள் தொலைபேசி ஊடாக எமக்குத் தெரிவித்தார். எமது முதன்மையான உயர்ந்த இதயம் கனிந்த நன்றிகளை எமது உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களும், வணக்கத்துக்குரிய கொடுகொட தர்மவாச மகா தேரர் கடந்த 7ஆம் திகதி தெரிவித்துக் கொண்டனர்.

இப்பகுதியில் வாழுகின்ற மக்களின் கருத்துப்படி இப்பகுதி ஊடாக செல்லும் அத்தனகலு ஓயா மூலம் இவர்கள் தங்கள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதோடு ஏறக்குறைய ஆயிரம் குடும்பங்களுக்கு மேலான மக்கள் சீதுவ - கந்தானை பகுதியில் கிணற்று நீரை பருகும் இப்பகுதியில் தான் குப்பை கூலங்களை குவிக்க திட்டமிட்டிருந்தனர்.

இதன் மூலம் இப்பகுதியின் சுற்றுப் புறச் சூழல் மாசடைவதோடு இங்குள்ள மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க இருந்திருக்கலாம். இங்கு வாழுகின்ற பெரும்பாலான மக்கள் கிணற்று நீரை குடிநீராக கொள்வதோடு, வயல்களுக்கும் அதனை பாவணையாக்கிக் கொள்கின்றனர். இதன் மூலம் இப்பகுதியில் நல்ல சூழலை நிறைவாக கொண்டுள்ளது. எமது நாட்டின் ஜனாதிபதி அவர்களின் தூரநோக்கு இப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தையும், இச்சுற்றுப்புறச் சூழலையும் எந்தவகையிலும் பாதிக்க-வில்லை இதனால் நாங்கள் நன்றியுணர்வோடு இவரது திட்டத்தை மதிக்கின்றோம். போற்றுகின்றோம்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வாக மேற்கொண்டு அரசாங்கம் மீள்சுழற்சி முறையை நடைமுறைப்ப -டுத்தப்படுத்துவதன் மூலம் ஒரு தீர்க்கமான முடிவைப் பெறலாம். எமது கௌரவ பிரதமர் அவர்களும் இம்மக்களுக்கு சார்பாக இருப்பார் என நம்புகின்றோம். நம்பிக்கை உணர்வும் தன்னம்பிக்கையும் கொள்ளச் செய்யும் முறையில் ஒரு சூழல் குறித்துப் பெரும்பாலும் நல்ல ஆக்க பூர்வமான செயற்பாட்டை திட்டமிட அரசாங்கத்தை எதிர்பார்க்கின்றோம்.

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**பேராயர் – கொழும்பு உயர் மறைமாவட்டம்**

**வண. அக்கமாஹாபண்டித்த மஹோபாத்யய**
**கொடுகொட தம்மவாச மாகாதேரர்**
**ஸ்ரீ தர்மபால ராமய விகாரை**
**கல்கிஸ்ச**

## 01 சிலுவையை உற்று...

கொழும்பு யோசேவ்வாஸ் மன்றத்தினால் தவக்காலத்தில் நடாத்தப்படும் பெரிய திறந்த வெளி சிலுவைப் பாதை இவ்வருடமும் தவக்கால முதல் ஞாயிறு (05.03.2017 அன்று நடைபெற்றது. அன்றைய நிகழ்வில் இறுதியில் கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அன்றைய திருப்பலியில் தமிழில் மறையுரையாற்றி ஆண்டகை அவர்கள், இயேசு கிறிஸ்து நமக்காக பாரமான சிலுவையை சுமந்து துன்பங்களை கொடூர வேதனைகளையும் தாங்கி தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற தன்னை முழுவதுமாக பலியாக்கினார். எமக்கு வாழ்க்கையில் துன்ப துயரங்கள், வருகின்றன. அவற்றை நாம் எப்படி எடுத்துக் கொள்கின்றோம். எமக்கு வரும் சிலுவைகளை நாம் ஏற்றுக்கொள்வதற்கு எமக்கு மன ஆற்றல் தேவை. இந்த ஆற்றல் நமக்காக சிலுவையில் தொங்குகின்ற இயேசுவிடம் இருந்தே பெறுகின்றோம். ஆகவே எமக்கு துன்பங்கள் வரும் போது இயேசுவை உற்று நோக்குவோம். அவர் பாடுகளோடு எமது பாடுகளையும் இணைத்துக்கொள்வோம். என்று தனது மறையுரையில் கூறினார். அன்றைய சிலுவை பாதையில் ஆயிரக்கணக்கான விசுவாசிகள் அருட்தந்தையர்கள் அருட்சகோதர சகோதரிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**தகவல் :**
**அருட்பணி ஆனந்தன்**
**பர்னாந்துபுள்ளே அடிகள்**

## 01 பேராயரின் அதிகாரப்

8) பங்கு மேய்ப்புப் பேரவையின் அங்கத்துவ கால எல்லையானது ஏறக்குறைய 5 வருடங்கள் ஆகும். மேலும் ஒரு முறை 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்படலாம். ஒரு 5 ஆண்டுகள் இடைவெளியின் பின் மீண்டும் ஒருவரை, ஒருவர் தெரிவுசெய்யப்படலாம்.

8) ஏறக்குறைய இரண்டு தவணைக்கு மேலாக அங்கத்தவர்களாக இருப்பவர்கள், இதுபோன்று ஏனைய பங்கு உறுப்பினர்களும் சேவை புரிய அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

9) பங்கு மேய்ப்புப்பணி குழுவினர் தாங்கள் தீர்மானித்த திட்டங்கள் செயல்பாடுகளைப் பற்றி பங்கு மக்களுக்கு அறிவிப்பதன் மூலம் அவர்களுடைய கருத்தையும் பங்கத்தந்தையோடு இணைந்து செயலாற்றும் தகுதியையும் உறுதிப்படுத்தல்.

10) இவற்றில் ஏதாவது மாற்றங்கள், நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் ஆணைக்குழுவினர் கட்டாயமாக பேராயரின் அனுமதியை பெற வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் உடனடியாக பங்கு மேய்ப்புப்பணி சபையினரால் அமுழுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்.

கடந்த காலத்தில் பங்கு மேய்ப்புப்பணி சபையில் இணைந்து பங்கு வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று சேவையாற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

தூய ஆவியின் துணையோடு எமது சகோதர சகோதரிகளுக்கு நாங்கள் பணியாற்றி எமது சேவைகளையும், எமக்குத் தரப்பட்ட கொடைகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவிற்கொள்வோம்.

## 12 பங்கு அருள்பணியாளர்களுக்கு

பாவங்களையும் நேருக்கு நேர் சந்தித்து, அவ்வேளைகளில், இயேசு நமக்காக மன்றாடுகிறார் என்ற உறுதியுடன், பாவங்களை வெல்வதோடு, மற்றவர்களையும் வாழ்வில் பற்றுறுதியுடன் வாழ்வதற்கு தூண்டவேண்டும் என்று, திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

பங்குனி 02, வியாழன் காலை 11 மணியளவில் புனித ஜோன் இலாத்தரன் பசிலிக்காவை அடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அங்கு, ஏறத்தாழ 12 அருள்பணியாளர்களுக்கு ஒப்புரவு அருள் சாதனம் வழங்கியபின், 11.50 மணிக்கு தன் தியான உரையை வழங்கினார். திருத்தந்தையின் தியான உரை, வத்திக்கான் தொலைக்காட்சி வழியே நேரடியாக ஒளிபரப்பானது.

## 14 இறைவனுக்கு உகந்த..

மனமாற்றத்தின் ஊடாக மன்னிப்பு பெற்று இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ நாம் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை இத்திருவிழா திருப்பலியில் கலந்து கொண்டதோடு இத்திருவிழா திருப்பலியை திருத்தல பரிபாலகர் அருட்பணி நெல்சன் சமந்த அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார்.

## 13 இயேசுவின் உருமாற்றம்

மூடு திரையில்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சிமையை கண்ணாடிபோல் காட்டுகின்றோம். அதனால், மென்மேலும் மாட்சிமை ஒளி பெற்று அதன் சாயலாகவே உருமாற்றம் (Metamorphoun) அடைகிறோம். இவை எல்லாம் ஆவியாகிய ஆண்டவரின் செயலே" ( 2 கொரி 3:18)

கிறிஸ்தவ வாழ்வென்பது இயேசுவின் சாயலைப் பெறுவதாகும். (உரோ 8:29). உள்ளம் புதுப்பிக்கப்பட்டு முற்றிலும் உருமாற்றம் அடைவதாகும் (உரோ 12:2)

திருமுழுக்கில் இயேசுவோடு இறந்து இயேசுவோடு உயிர்த்த நாம் நற்கருணை வழியாய் மகிமை பெற்ற இயேசுவில் உருமாறும் நாம், இயேசு படவேண்டிய வேதனையில் குறைவாயிருப்பதை (கொலோ 1:24) நாள்தோறும் நம் உடலில் ஏற்று உயிர்ப்பின் மகிமைக்குத் தயார் செய்ய வேண்டும்.

இயேசுவின் இரண்டாம் வருகை முதல் புத்துடலோடு புதிய மனிதராக நாம் எந்நாளும் நிலை நிற்போம். இவ்வாறு தலையாகிய ஆண்டவரிடம் வியத்தகு வகையில் நிகழ்ந்ததெல்லாம் உடலாகிய திருச்சபையிலும் நிறைவேறும் (திருப்பலி தொடக்கவுரை). கிறிஸ்து வெளிப்படும்போது அவரைப்போல நாமும் இருப்போம் (1 யோவா 3:2) என்கிறார் புனித யோவான். உருமாற்றம் மனிதர் மகிமை பெறுவதோடு அமையாது உலக படைப்புகள் அனைத்துமே உருமாற்றமடையும் - புதிய வானமும் புதிய பூமியும் தோன்றும் - என்பது நமது எதிர்நோக்கு (வாசிக்க உரோ. 8:22-25)

## 02 திருநீற்றுப் புதன்...

இல்லை.... இல்லை அதற்கு முதல் நாளே என்று சொல்லலாம். நமக்கு நாமே ஒரு பட்டியலைப் போட ஆரம்பித்து விட்டோம் அந்தப்பட்டியலிலே....

✶ ஒரு சந்தியும், சுத்தபோசனமும் அனுசரிக்க வேண்டும்.
✶ சிலுவைப் பாதை தியானிக்க வேண்டும்.
✶ நோயாளிகளை சந்தித்து ஆறுதல் கூறவேண்டும்.
✶ தியானங்கள் செய்ய வேண்டும்.
✶ திருயாத்திரைகள் செல்ல வேண்டும்.

இப்படி இன்னும் பல.... எல்லாம் நல்லவைகள் தான். இவைகள் அனைத்தும் நமது ஆன்மீக விருத்திக்காக செய்யும் பாரம்பரிய பட்டியலாகும்.

✶ பசித்தோர்க்கு உணவு கொடுப்பதும்...
✶ தங்க இடமில்லாதோர்க்கு இல்லிடம் கொடுப்பதும்...
✶ வறியோர்களின் தேவைகளை நிறைவு செய்வதும்...
✶ அடுத்தவனைப் பற்றி பொல்லாப்பு பேசுவதை குறைத்துக் கொள்வதும்
✶ வஸ்திரங்கள் இல்லாதோருக்கு வஸ்திரங்கள் கொடுப்பதும்...

இறைவன் விரும்புகிறார். இவை அனைத்தும் இறைவனை மகிழ வைக்கும் நல்ல காரியங்களாகும். அன்பை வெளிக்காட்டும் செயல்களாகும். ஆனால், தவக்காலம் என்பது ஒரு பொற்காலமாகும். தவக்காலம் என்பது எம் ஒவ்வொருவரினதும் மனமாற்றத்தைக் கொண்டு வரும் காலமாக மாறவேண்டும்.


காலம் நிறைவேறி விட்டது இறையாட்சி நெருங்கிவிட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள். (மாற் 1:14-15)

ஆண்டவர் வீதி வழியே நடந்து செல்லும் போது இறைமக்களிடம் வேண்டினார். "மனம் மாறுங்கள்" என்பதே. மனமாற்றம் என்றால் என்ன? இதுவரை நாம் எமது விருப்பத்துக்கு நடந்து வந்த பாதையை விட்டு விட்டு இறைவன் காட்டிய வழியில்... காட்டும் வழியில் நடந்து செல்ல அவரது அடிச்சுவட்டைப் பின் பற்றிச் செல்வதாகும்.

"பாவத்தை விட்டு விலகி நற்செய்தியை விசுவசியுங்கள்" என்றார் நம் ஆண்டவர். பாவத்தை விட்டு விலகி நற்செய்தியை நம்பும் மக்களாக மாறுவோமா? எம்மை அண்டியுள்ள - சாத்தானின் பிடியில் எம்மை ஆக்கிரமிக்கும் ஏதோ ஒரு சிறு குறையை நாம் இந்த தவக்காலத்தில் கைவிடுவோமா? இது தான மனமாற்றம். எம்மிடம் இருக்கும் அநேக குறைகளில் ஒரு சின்னஞ்சிறிய நம் ஆண்டவர் இயேசுவுக்காக கை விடுவோமா? அதன் மூலம் இயேசுவுக்கு ஆறுதல் சொல்லுவோமா? ஆணிகளில் அறையாதிருப்போமா? மனம் மாறுவோமா? தவக்காலம் ஓர் அருளின் காலம் மனமாற்றத்தின் காலம் மன்றாடுவோம்.

"நீங்கள் உங்கள் உடைகளை கிழித்துக் கொள்ள வேண்டாம். உங்கள் இதயத்தைக் கிழித்துக் கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 2:13)

**தகவல் : மேரி இருதயநாதன்**
**இரத்தினப்புரி**



## மணமகள் தேவை

கொழும்பு றோ.க மதத்தைச் சேர்ந்த உயரம் 5அடி 5 அங்குலம் வயது 42, மொழி தமிழ், சொந்த வீடு உண்டு. அத்துடன் பஸ் ஒன்றின் பாதி உரிமையாளரும் ஆவார். O/L சாதாரண தரம் சிங்கள மொழியில் பயின்றவர். குடும்பத்தில் ஒரே மகன். சாதி பார்க்கப்பட மாட்டாது. மதப்பற்றுள்ள பெண் ஒருவரை தாயார் தேடுகிறார். தொடர்புக்கு : 0711235400 (A1284)

## 02 மறையாசிரியர்...

ஆய்வு கட்டுரை எழுதுவதற்காக அளிக்கப்படும். பரீட்சார்த்திகளினால் எழுதப்பட்ட ஆய்வு கட்டுரைகள் ஆவணி - புரட்டாதி மாதங்களில் திருத்தப்படும். இவ்வாய்வுக் கட்டுரைத் தேர்வில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் மட்டுமே அதனைத் தொடர்ந்து செயல்முறைத் தேர்வில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர். செயல்முறைத் தேர்வு அதே வருடத்தில் ஐப்பசி முதல் கார்த்திகை வரையிலான காலப் பகுதியில் மறைமாவட்ட இயக்குனரின் மேற்பார்வையில் நடாத்தப்படும். செயல்முறைத் தேர்வில் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளியை மறைமாவட்ட இயக்குனர், எமது தேசிய மறைக்கல்வி நடுநிலையத்திற்கு அளித்த பின்னர் பரீட்சார்த்திக்கு தனிப்பட்ட ரீதியில் அவரது பரீட்சை முடிவு அறிவிக்கப்படும். பரீட்சார்த்திகள் நற்சான்றிதழுக்காக 2"X2" அளவிலான தமது கறுப்பு வெள்ளை புகைப்படங்கள்இரண்டை எமக்கு அனுப்பிவைத்த பின்னர் அவர்களுக்கான இறுதித் தேர்வு சான்றிதழ்கள் வழங்கப்படும். மறையாசிரியர் இறுதித் தேர்வை நிறைவு செய்வதற்கு இரண்டு வருட கால அவகாசம் தேவை என்பதையும் நினைவூட்டுகின்றோம். இத்தேர்வு விதிகள் 1983ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## 02 சிறுவர் மரியாயின்

கன்னியர் பாடசாலை என்பவற்றில் இவை ஆரம்பித்து வைக்கப்பட்டு கியூறியாவின்கீழ் பதிவு செய்யப்பட்டு சிறப்பாக இயங்கிவருகின்றன. பங்கு மட்டத்தில், தெமட்டக்கொடை புனித அந்தோனியார் ஆலயம், புதுக்கடை புனித செபஸ்தியார் ஆலயம், கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பங்கு (ஆண்கள் பெண்கள் தனித்தனியாக) மாளிகாவத்தை சமாதானத்தின் அரசி ஆலயம், ஆகியவற்றில் புதிதாக இவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. நீர்கொழும்பில் மணற்சேனை புனித மரியாள் இல்லம், லூட்சியா பெரொட்டி சிறுவர் இல்லம் வலிகேன, கொச்சிக்கடை தோப்பு, ஏத்துக்கால் பராமரிப்பு இல்லம், , இன்னும் கழுத்துறை மாவட்டத்தில் கொரண புளத்சிங்கள துணைப் பங்கு, அல்லகந்த துணைப்பங்கு, மற்றும் அவிசாவளை புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றில் புதிய பாலர் பிரசீடியங்கள் அவ்வப் பங்குத்தந்தையர் அனுமதியுடன் கியூறியா உறுப்பினர்களின் நேரடி சமுகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் பல பிரசீடியங்கள் கியூறியாவுடன் இணைந்து பதிவுசெய்யப்படாமல் பரீட்சாத்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை தொடர்ந்து இயங்கச்செய்யவும் கண்காணிக்கவும் கியூறியா இணைப்பு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தொண்டு முயற்சிகள் இன்றய சிறுவர்களின் கிறிஸ்தவ மதிப்பீடுகள் பற்றி கவலையுறும் பெற்றோர்கள் மத்தியிலும் பங்குகள், பாடசாலைகள் என சகல மட்டத்திலும் பெரும் வரவேற்பை பெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இ.தங்கராஜா தலைவர் திருச்சபையின் மாதா சிறுவர் கியூறியா

## ஈகை எது?

**சோறு போட்டுவிட்டு**
**சொல்லிக் காட்டுவது,**
**தண்ணீர் கொடுத்துவிட்டு**
**தமுக்கடித்து சொல்பவரே**
**வேட்டி-சட்டை தந்துவிட்டு**
**விளம்பரங்கள் ஒட்டுவது**
**இவை எப்படி ஈகை ஆகும்?**
**முகம் பாராது**
**இயன்றதைக் கொடுப்பதும்,**
**இருப்பதில் இயன்றதைக் கொடுத்து**
**ஏழையின் முகத்தில்**
**இறைவனைக் காண்பதுமல்லவோ**
**ஈகை!**

# இயேசுவின் உருமாற்றம் எம்மையும் உருமாற அழைக்கிறது!

**தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு**



### மாற்றம் ஒன்றே மாறாதது

உலகில் எல்லாமே மாறிக்கொண்டிருக்கிறது. மாற்றம் என்பது இந்த உலகின் நிலையான நியதியாக இருக்கின்றது. இந்த உலகில் வாழும் எல்லா மனிதரும் கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கின்றார்கள். ஏன் இந்த உலகில் உள்ள எல்லா உயிரும், எல்லாப் பொருட்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. நேற்றைய "நான்" இன்று இல்லை. நாளைய "நான்" நாளை மறுநாள் இல்லை. எனது உடலிலும், உள்ளத்திலும், சிந்தனையிலும் நான் மாறிக்கொண்டே இருக்கிறேன். இவ்வாறு நானும் இந்த உலகத்திலே இருக்கக்கூடிய உயிருள்ள, உயிரற்ற அனைத்துமே மாறிக்கொண்டிருக்கின்றன. எல்லாமே மாறுகின்றன. "மாற்றம் ஒன்றே மாறாதது" என்பார்கள்.

### புதுமையை நோக்கிய வெளிப்படையான மாற்றங்கள்

இன்றைய உலகம் மாற்றத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கிறது. இது எத்தகைய மாற்றம்? ஆள் மாற்றம், ஆடை மாற்றம், உணவு மாற்றம், கலாசார மாற்றம், மதமாற்றம் என இந்த மாற்றத்தின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இவை எல்லாம் மாற்றம் (Change) என்ற நிலையில் புதுமையை (Novelty) அடிப்படையாகக்கொண்டவை.

ஆண் பெண்ணாக மாறுவதும், பெண் ஆணாக மாறுவதும் இன்றைய கணனி யுகத்தில் யதார்த்தமாகிக் கொண்டிருக்கிறது. வித்தியாசமான ஆடை அலங்காரம், வித்தியாசமான நகை அலங்காரம், வித்தியாசமான முடி அலங்காரம், வித்தியாசமான உணவு, வித்தியாசமான உறையுள், வித்தியாசமான கலாசாரம் என புதுமையை நோக்கிய இந்த மாற்றங்கள் நாளும் பொழுதும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இவையெல்லாம் உண்மையான மாற்றங்கள் அல்ல. நீடித்த நிலையான மாற்றங்கள் அல்ல. நொடிப்பொழுதில் மறைந்து போகும் நீர்க்குமிழி மாற்றங்கள்!

### புதியதை நோக்கிய உள்ளார்ந்த மாற்றமே தேவை!

உண்மையான மாற்றம் என்பது அடிப்படையில் நிகழவேண்டிய மாற்றம் (Fundamental Change). இதை உள்மாற்றம் அல்லது உள்ளார்ந்த மாற்றம் (Internal Change) எனவும் அழைக்கலாம். இது புதுமையை (Novelty) நோக்கிய மாற்றம் அல்ல; மாறாக புதியதை (Newness) நோக்கிய மாற்றம். புதிய இயல்பை, புதிய சிந்தனையை, புதிய பார்வையை, புதிய கண்ணோட்டத்தை, புதிய திசையை நோக்கிய மாற்றம். இதைத்தான் உருமாற்றம் (Transfiguration) என்று சொல்லி இயேசுவின் உருமாற்ற நிகழ்வை இன்றைய நற்செய்தி நமக்குத் தருகின்றது.

### இயேசுவின் உருமாற்றம் எம்மையும் உருமாற அழைக்கிறது

தவக்காலத்தின் இரண்டாவது வாரத்தில் காலடி வைக்கின்றோம். இன்று நமக்கு விடுக்கப்படும் செய்தி உருமாற்றம் ஆகும். இயேசு மாற்றம் பெற்றார்; உருமாற்றம் பெற்றார். இயேசுவின் உருமாற்றம் எம்மையும் உருமாற்றம் பெற அழைக்கிறது.

மனித இயல்பிலிருந்து புனித இயல்புக்கு நாம் உருமாற வேண்டும். இருளின் தன்மையில் இருந்து ஒளியின் தன்மைக்கு நாம் உருமாற வேண்டும். பொய்மையில் இருந்து மெய்மைக்கு உருமாற வேண்டும். சாவலிருந்து வாழ்வுக்கு உருமாற வேண்டும். நிழலில் இருந்து நிஜத்துக்கு உருமாற வேண்டும். பாவக்கட்டுக்களில் இருந்து விடுதலை வாழ்வுக்கு உருமாறவேண்டும். சுயநலப் பிடியில் இருந்து பொதுநல வாழ்வுக்கு உருமாறவேண்டும். வைராக்கியம் மற்றும் பகை உணர்விலிருந்து மன்னிக்கும் பரந்த மனப்பான்மைக்கு உருமாறவேண்டும். இவ்வாறு எமது வாழ்வை சுய ஆய்வுக்கு உட்படுத்தி நாம் உருமாற்றம் பெறவேண்டிய வாழ்க்கை நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

### சீடர்களை உறுதிப்படுத்த இயேசு தன் மாட்சியைக் வெளிப்படுத்துகின்றார்

இயேசுவுக்கு தன் சீடர்களைப்பற்றி நன்கு தெரியும். அவர்கள் பலவீனமானவர்கள்; துன்பங்களைக் கண்டு அஞ்சுபவர்கள்; வேதனைகள் சோதனைகள் வரும்போது விரக்தி அடையக்கூடியவர்கள். இப்படிப்பட்ட சீடர்கள் தன்னுடைய கொடூரமான பாடுகள், பயங்கரமான மரணம் இவற்றின்போது தன்னோடு நின்று தாக்குப்பிடிக்க மாட்டார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். தன்னுடைய பாடுகள், மரணம் இவற்றைக்கண்டு இவர்கள் அச்சம்கொள்[illegible]; நம்பிக்கை இழந்துவிடுவார்கள்; ஓடி ஒழிந்துவிடுவார்கள் என்பதை இயேசு தெரிந்திருந்தார். எனவே இப்போது இயேசு தன்னுடைய சீடர்களுக்கு ஒரு ஆழமான, அழுத்தமான செய்தியை வார்த்தையால் மட்டுமல்ல செயலாலும் கூறவேண்டி இருக்கின்றது. அதாவது தன்னுடைய பாடுகள் மரணம் இவற்றோடு எல்லாம் முடிந்துவிடப்போவதில்லை. இந்தப் பாடுகள் மரணத்திற்குப் பின்னர் உயிர்ப்பு உண்டு; விண்ணேற்றம் உண்டு; மகிமை உண்டு, மாட்சிமை உண்டு என்ற செய்தியை அவர் கூறுகின்றார். எப்படி? தன் பாடுகள் மரணத்திற்கு முன்னர் தன் மாட்சியின் ஒரு பகுதியை இப்போது தன் சீடர்களுக்கு காண்பிக்கின்றார். அதுதான் உருமாற்ற நிகழ்வு!

தன்னுடைய உருமாற்ற நிகழ்வை காணும் தன் சீடர்கள் தன் மாட்சியை அறிந்துகொள்ளவேண்டும். தன்னுடைய பாடுகள் மரணத்தின்போது அவர்கள் இடறல்படக்கூடாது; நம்பிக்கை இழக்கக்கூடாது என்பதற்காகத்தான் இயேசு தபோர் மலையில் உருமாறுகின்றார். சீடர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்துவதற்காகத்தான் இயேசு அவர்களுக்கு தன் மாட்சியை வெளிப்படுத்துகின்றார்.

### நாமும் நம்பிக்கை இழக்கக்கூடாது

இயேசுவின் இந்த உருமாற்ற நிகழ்வு நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு முக்கியமான ஒரு செய்தியைத் தருகின்றது. நமது வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் பாடுகள், துன்பங்கள், பிரச்சினைகள், போராட்டங்கள், மனமடிவுகள் இவற்றின்போது நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது; சோர்ந்துபோகக்கூடாது; விரக்தி அடையக்கூடாது. மாறாக இந்தத் துன்பங்களுக்குப் பின்னால் நமக்கும் உயிர்ப்பு உண்டு, நமக்கும் வெற்றி உண்டு, நமக்கும் வாழ்வு உண்டு, நமக்கும் மகிமை உண்டு என்ற ஆழமான செய்தியை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இயேசுவின் மகிமையைக் கண்டு வியந்த, மகிழ்ந்த பேதுரு, "இங்கு இருப்பது எவ்வளவு நல்லது! நாம் இங்கு மூன்று கூடாரம் அமைப்போம். இங்கேயே தங்கி இருப்போம்" என இயேசுவுக்கு அறிவுரை கூறுகின்றார். ஆனால் இயேசு மலையில் இருந்து இறங்கி மக்கள் அனுபவத்திற்காக தன்னுடைய சீடர்களை கீழே அழைத்துச்செல்கிறார்.

### மகிழ்ச்சியிலேயே திழைத்திருக்காமல் யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டும்

மனித மனம் மகிழ்ச்சியின்போது மயங்கிவிடுகின்றது. இந்த உலகத்தின் இயக்கமே இந்த மகிழ்ச்சியை - சந்தோசத்தை மையமாகக்கொண்டே அமைந்துள்ளது. நாம் செய்யும் எல்லா செயல்களுக்கும் பின்னால் இருக்கும் ஓர் அடிப்படையான காரணம் எமது மகிழ்ச்சியே. ஏன் மனிதர் ஓடி ஓடி உழைக்கின்றனர்? ஏன் பேர் புகழைப் பெற்றுக்கொள்ள எத்தனையோ முயற்சிகளை மேற்கொள்கின்றனர்? அனைத்து முயற்சிகளுக்கும் அடிப்படை தான் மகிழ்ச்சியை, நிறைவைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே! பேதுருவும் கிடைத்த வாய்ப்பை விட்டுவிட விரும்பவில்லை. எனவேதான் அவர் கூடாரம் அமைக்கும் ஆலோசனையை முன்வைக்கின்றார். மலையிலேயே தங்கிவிட, அந்த மகிழ்ச்சியில் திழைத்திருக்க முனைகின்றார். ஆனால் இயேசுவோ "வாருங்கள் கீழே போவோம்" என அவர்களை அழைத்து வருகின்றார். மலையில் தொடர்ந்து இருப்பதல்ல நமது பணி. கனவுலகில் களித்திருப்பதல்ல நமது வேலை. நாம் மலையிலிருந்து இறங்கி மீண்டும் மக்களிடம் செல்லவேண்டும். வாழ்க்கையின் யதார்த்தத்தை காணவேண்டும். துன்பங்களை அனுபவிக்க வேண்டும், சிலுவைகளைச் சுமக்க வேண்டும் என அவர்களுக்குக் கூறுகின்றார்.

### சிலுவையை நிராகரிக்கும் இன்றைய வாழ்க்கைப் போக்குகள்

சிலுவையின் மறைபொருளை, அதன் முக்கியத்துவத்தை உணராத ஒரு நிலையிலேயே இந்த உலகம் உருண்டுகொண்டிருக்கிறது. சிலுவைகள், துன்பங்களைக் கண்டு நாம் ஓடி ஒளிந்துவிடுகின்றோம். துன்பங்களற்ற, கவலைகள் அற்ற கனவுலகில் சஞ்சரிக்கவே நாம் விரும்புகின்றோம். இன்று எத்தனை தொலைக்காட்சிச் சனல்கள்! விதம் விதமான அலைபேசிகள்! எத்தனை வகையான சுவையான தீன்பண்டங்கள்! அறிவையும் நேரத்தையும் வீணடிக்கும் கிரிக்கற் போட்டிகள்! இவையெல்லாம் மனிதனின் கனவுலக ஆர்வத்தின் வெளிப்பாடுகள்!

மூன்று சீடர்களோடு இயேசு மலைக்குச் சென்றது பாதுகாப்புக்காகவா? மகிமையில், மாட்சிமையில், மகிழ்ச்சியில் திழைத்திருக்கவா? இல்லை! கைது, துன்பம், மரணம் இவற்றின் வழியாகத்தான் மீட்பு உண்டு எனக் காட்டத்தானே? சிலுவையை நிராகரிக்கும் இன்றைய உலகின் தன்மையை பவுலடியார் சுட்டிக்காட்டுகின்றார். "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர்.... அழிவே அவர்கள் முடிவு; வயிறே அவர்கள் தெய்வம்; மானக்கேடே அவர்கள் பெருமை. அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்தவை பற்றியே" (பிலி. 3:17 - 4:1)

### புனித வெள்ளியின்றி உயிர்ப்பு ஞாயிறு இல்லை

இயேசு தபோர் மலையை கெத்சமனியின் முன் எச்சரிக்கையாகவும், முன்அனுபவமாகவும் பார்க்கின்றார். அதாவது மனித நிலையில் இருந்து இறை நிலையில் தன்னை அறிகிறார். தபோர் மலை வரப்போகும் மகிமைக்கு அடையாளம்! கெத்சமனி வரவிருக்கும் துன்பத்தின் அடையாளம்! இங்கு தபோர் மலையா? கெத்சமனியா? என்ற கேள்வி நம்முன் வைக்கப்படுகின்றது. கெத்சமனி அனுபவத்திற்குள்ளால் சென்றுதான் தபோர் மலை அனுபவத்தை நாம் பெறவேண்டும். எனவே தவக்காலத்தில் பயணிக்கும் நாம் சிலுவையின் மறைபொருளை விளங்கிக்கொள்வோம். துன்பமின்றி இன்பமில்லை! இரவின்றி பகல் இல்லை! புனித வெள்ளியின்றி உயிர்ப்பு ஞாயிறு இல்லை! இறப்பின்றி உயிர்ப்பு இல்லை என்ற வாழ்க்கைப் பாடத்தை இயேசுவின் உருமாற்றம் மூலம் பெற்றுக்கொள்வோம்.

**– அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்**

---




நீண்ட மணல் மேடு, பசுமைகள் அற்ற பாழ்வெளி, மனித சஞ்சாரமற்ற ஏகாந்தம், சுட்டெரிக்கும் வெய்யிலின் கோடுத் தாண்டவம். இவை பாலைவனத்தின் பண்புகள். எனினும் இவைபாலைவனம் பற்றிய எதிர் மறையான எண்ணங்கள். ஆனால் பாலைவன அனுபவம் ஆன்மீக - விசுவாச வாழ்வை புடமிட வல்லது என்ற ஒரு பக்கமும் அதற்கு உண்டு. செப தப தான தர்மங்கள், தனிமை, அமைதி, ஒப்புரவு போன்றவை மனித மனங்களுள் பாலைவனத்தை ஏற்படுத்த, அந்த வெளியில் இறை தேடலும், அருளும் அணைகடந்து பெருக்கெடுக்க வாய்ப்பு ஏற்படுகிறது. அந்த ஒளியில் ஊனியல்புகளாக உலக மதிப்பீடுகள் காணாமல் போய்விடுகின்றன. எனவே, நாம் பாலைவனத்திற்கு போவோம் வாருங்கள். தவக்காலத்தின் மாபெரும் முரண்பாட்டையும், அதன் மாபெரும் வாக்குறுதியையும் எடுத்துக் காட்டும் சிறந்த உருவகம் பாலைவனமாகும். இயேசுவும் பாலைவனத்திற்குச் சென்றார். 40 நாள் உபவாசம் இருந்து அலகையின் சோதனையையும் தாங்கி வென்றார். இஸ்ராயேல் மக்கள் தமது பாலைவன பயணத்தின்போது மீண்டும் மீண்டும் தவறியதையும், இயேசு வெற்றி கொண்டதையும் நாம் காணலாம்.

இஸ்ராயேலர் இறைவனது பராமரிப்பில் நம்பிக்கை இழந்தனர். ஆனால் இயேசுவோ நமது தந்தையின் திட்டத்திற்கு தம்மை முற்றிலும் கையளித்தார். இஸ்ராயேலர் முணுமுணுத்து முறையிட்டனர். தமது வல்லமையில் செயல்பட முயன்றனர். இயேசுவோ நம்பினார், காத்திருந்தார், பொறுத்திருந்தார்.

நவீன காலத்தின் தியான யோகியாகிய கார்லோ கரற்றோ என்பவர் "பாலைவனத்திற்கு போக முடியாமல் விட்டால் பாலைவனம் உங்களிடம் வரும் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்" என்று கூறுகின்றார். இங்கு பாலைவனம் என்பது ஒரு இடம் அல்ல அது ஒரு ஆன்மீக அனுபவமாகும். எனவே நாமும் பாலைவனத்திற்கு போவோம் அனுபவம் பெறுவோம் வாருங்கள்.

**அருட்பணி. ரெஜிஸ் இராஜநாயகம்**




## திருஇசையின் மரபை புதுப்பிக்க திருத்தந்தை அழைப்பு

திருவழிபாடுகளில் இசைக்கப்படும் பாடல்களைப் புதுப்பிக்குமாறு, திருவழிபாட்டு இசைத்துறையிலுள்ள அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். திரு இசையின் தரத்தைப் பொருத்தமட்டில், திரு இசையையும், திருவழிபாடுகளில் இசைக்கப்படும் பாடல்களையும் புதுப்பிப்பதற்கு, பாடல் ஆசிரியர்கள், இசை அமைப்பாளர்கள், பாடகர்கள், திருவழிபாடுகளை வழிநடத்துபவர்கள் உட்பட, இத்துறையிலுள்ள எல்லாரும், தங்களின் சிறப்பான பங்கை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருவழிபாடு பற்றிய இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்க கொள்கை விளக்கம் வெளியிடப்பட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகியுள்ளதை முன்னிட்டு, உரோம் அகுஸ்தீனியானம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்ட நானூறுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை, சனிக்கிழமையன்று, திருப்பீடத்தின் கிளமெந்தினா அறையில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

திருவழிபாட்டில், நவீனத்தையும், அந்தந்தப் பகுதி மொழிகளையும் புகுத்தும்போது, இசை மொழிகளிலும், அதன் அமைப்புகளிலும், பல்வேறு பிரச்சனைகள் எழும்புகின்றன. இதை எளிதாக்குவதற்கு, தகுந்த இசைக் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று கூறினார். அருள்பணியாளர்களுக்குப் பயிற்சி பெற்றுவரும் குருத்துவ மாணவர்களுக்கு, இக்காலத்தின் இசைப் போக்கு, பல்வேறு கலாச்சாரங்கள், கிறிஸ்தவ ஒன்றிப்பு எண்ணம் போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை.

“இசையும், திருஅவையும் : Musicam sacram என்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க கொள்கைத் திரட்டு வெளியிடப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்குப் பின், வழிபாடும், கலாச்சாரமும்” என்ற தலைப்பில், பங்குனி 2,3,4 ஆகிய திகதிகளில் நடந்த இக்கருத்தரங்கை, திருப்பீட கத்தோலிக்க கல்வி பேராயம், திருப்பீட கலாச்சார அவை, திருப்பீட திருஇசை நிறுவனம், புனித ஆன்செல்ம் பாப்பிறை திருவழிபாடு நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தின.

## ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் கையேடு

ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சிக்கு உதவும் மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை வெளியிட்டுள்ளது. இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நிறைவாக, 2016ம் ஆண்டு கார்த்திகையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட திருத்தூது கடிதத்தில், ஒப்புரவு அருளடையாளம், கிறிஸ்தவ வாழ்வின் மையமாக அமைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இதற்கு உதவியாக, தவக்காலத்தில், ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சி பற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் திருத்தந்தை. இந்தப் பக்தி முயற்சிக்கு உதவியாக, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை, 63 பக்க மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. “நான் இரக்கத்தை விரும்புகிறேன்” (மத்.9,13). என்ற தலைப்பில், இம்மாதம் 24, 25 திகதிகளில், ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சி கடைப்பிடிக்கப்படுகின்றது.



## பசியால் துன்புறும் குழந்தைகளுக்கு உணவளிக்கவேண்டும்



தவக்காலத்தில், செபம், உண்ணாநோன்பு ஆகியவற்றில் மட்டும் கத்தோலிக்கர்கள் கவனம் செலுத்தாமல், பசியால் துன்புறும் குழந்தைகளுக்கு உணவளிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆசிய கர்தினால் ஒருவர் அழைப்பு விடுத்துள்ளார். மணிலா பேராயரும், உலக காரித்தாஸ் அமைப்பின் தலைவருமான, கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள், தவக்காலத்தையொட்டி விடுத்துள்ள மேய்ப்புப்பணி மடலில், வறியோர் மீது கவனம் செலுத்துமாறு விண்ணப்பித்துள்ளார்.

பசியில் வாடும் குழந்தைகளை பார்த்தும் பாராமல் செல்வது, கத்தோலிக்கருக்கு அழகல்ல என்பதைக் கூறிய கர்தினால் தாக்லே அவர்கள், இரக்கம் நமது இயல்பாக மாறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். Fast2Feed அதாவது, “நோன்பிருப்பது உணவூட்டவே” என்ற கருத்தில் இத்தவக்காலத்தில் மணிலா உயர் மறைமாவட்டம் தொடங்கியுள்ள ஒரு முயற்சியின் வழியே, பிலிப்பீன்ஸ் நாடெங்கும் 16 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் உணவு பெறுகின்றனர் என்று UCAN செய்தி கூறியுள்ளது.

## இயேசுவின் கல்லறைப் பேராலய புதுப்பித்தல் முடிவுற்றது

புனித பூமியில் அமைந்துள்ள இயேசுவின் கல்லறைப் பேராலயம், ஒன்பது மாத கால சீரமைப்புப் பணிகளுக்குப்பின், பங்குனி மாதம் 22ம் திகதி திறக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எருசலேமில், இயேசுவின் கல்லறையை உள்ளடக்கிய இப்பேராலயத்தை, மீண்டும் திறக்கும் வழிபாட்டை, கத்தோலிக்க, ஆர்த்தடாக்ஸ் மற்றும் கிரேக்க அர்மேனிய கிறிஸ்தவ சபைகள் இணைந்து நடத்தும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த 9 மாத புதுப்பித்தல் பணியின்போது, கடந்த ஐப்பசியில், இயேசுவின் கல்லறையைத் திறக்கும் பெரும்பேற்றை அடைந்த, புதுப்பித்தல் பணிக்குழுவின் அறிவியல் ஒருங்கிணைப்பாளர், Antonia Mario Poulou அவர்கள் பேசுகையில், எருசலேமிலுள்ள கத்தோலிக்க, ஆர்த்தடாக்ஸ் மற்றும் கிரேக்க அர்மேனிய கிறிஸ்தவ சபைகளின் பொறுப்பாளர்களின் அனுமதியுடன் இக்கல்லறையைத் திறந்தபோது, ஒருவித நல்ல உணர்வு கடந்துபோனதை அனைவரும் உணர்ந்ததாகத் தெரிவித்தார். இருநூறு ஆண்டுகளுக்குப்பின், கடந்த அக்டோபரில், இயேசுவின் கல்லறை திறக்கப்பட்டது, வரலாற்றிலேயே இது மூன்றாவது முறையாகும்.





## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

**“தவக்காலம், நம் உடனடி மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. நம் முழு இதயத்தோடு இறைவனிடம் திரும்பி வருவதற்கு நாம் அழைக்கப்படுகின்றோம்”**

**“நம்மை எச்சூழலிலும் கைவிடாத நம்பிக்கைக்குரிய நண்பர் இயேசு. நாம் பாவம் செய்தாலும், நாம் மனந்திருந்தி திரும்பிவரும்வரை நமக்காக பொறுமையுடன் காத்திருப்பவர் அவர்”**

**“உண்ணா நோன்பு என்பது, உணவைத் தவிர்ப்பது மட்டுமல்ல, பசியாய் இருப்போருடன் உணவைப் பகிர்ந்துகொள்வதும் ஆகும்”**

**“இறைவன் எப்போதும் நம்பிக்கைக்குரியவர், அவர் ஒருபோதும் நம்மை அன்பு செய்வதை நிறுத்துவதில்லை. நாம் அவரைவிட்டு விலகிச் சென்றாலும், நம்மைத் தொடர்ந்து துரத்தி வருபவர் அவர்”**




“வாழ்வின் இறுதி நிலையில் இருக்கும் நான், இனி, இவ்வுலகில் ஒரு சாதாரண திருப்பயணி. திருஅவைக்காக செபிப்பது என் முக்கியப்பணி” என்று, முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், நான்கு ஆண்டுகளுக்கு முன், மாசி 28ம் திகதி கூறினார். 2013ம் ஆண்டு மாசி 11ம் திகதி திருஅவையின் தலைமைப் பொறுப்பை துறப்பதாகக் கூறியத் திருத்தந்தை, வத்திக்கான் பாப்பிறை இல்லத்திலிருந்து மாசி 28 மாலை கிளம்பி, திருத்தந்தையரின் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல்போவின் மேல்மாடத்தில் தோன்றி, அங்கு கூடியிருந்த மக்களை, திருத்தந்தை என்ற முறையில், இறுதி முறையாகச் சந்தித்த வேளையில், இவ்வாறு கூறினார்.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், தன் தலைமைப்பொறுப்பைத் துறந்த 4ம் ஆண்டு நிறைவன்று, அவருக்காக, உலகின் பல நாடுகளிலும், சிறப்பான செபங்களை எழுப்பி வரும் பல்வேறு குழுக்கள், இச்செவ்வாயன்று தங்கள் செபங்களை வலைத்தளங்கள் வழியே பகிர்ந்துகொண்டனர் என்று, Zenit கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது. மேலும், இவ்வாண்டு சித்திரை 16ம் திகதி, முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தன் 90வது வயதை நிறைவு செய்யவிருக்கும் வேளையில், அவருக்காக சிறப்பான செபங்களையும், நன்றியையும் கத்தோலிக்க வலைத்தளங்கள் வெளியிட்டு வருகின்றன


*'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்*



# உள்ளத்தை தொடும் போதனைகள்

**வாழ்விற்கு புதிய வழிமுறைகள்**

அதிகாரம் 01



## 09. ஒப்புரவின் முக்கியத்துவம்

"பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்"

**மத் 5:21** "கொலை செய்யாதே கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்" என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்.

**மத் 5:22** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் "தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ "முட்டாளே" என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் "அறிவிலியே" என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார்.

**மத் 5:23** ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால்,

**மத் 5:24** அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.

**மத் 5:25** உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள்.

விளக்கம் : பழைய கட்டளைகளைப் பற்றிய மரபு விளக்கங்கள் முழுமையற்றது என்று இயேசு கூறுகின்றார். கொலை பண்ணும் செயலில் மையத்திலிருந்து அதன் தூண்டுதல் பற்றி கோடிட்டுக் காட்டுகின்றார். கோபம், ஒழுக்க நெறிகளின் சீர்கேடுகள் உள்ளார்ந்த மனப்பாங்கில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். ஆனால் நமது உணர்ச்சிகளை அமுக்கி விட வேண்டும் என்று கூறவில்லை. ஆனால் அவைகளுக்கு நாம் அடிமைகளாகி விடக் கூடாது என்கிறார். மேலும் நமது இறைவழிபாடு நீதியாலும் ஒப்புரவாலும் உண்மையானதா என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்

## 10. எதிரிகளின் மட்டில் மனப்பாங்கு

உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்

**மத் 5:38** "கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்" என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

**மத் 5:39** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.

**மத் 5:40** ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டு விடுங்கள்.

விளக்கம் : கண்ணுக்கு கண்" என்ற பழைய விதிமுறை கொடுக்கப்பட்டபோது (விடுதலைப் பயணம் 21:24) அதன் மூலம் கருத்து மனித நலத்தை முன்னிட்டே. அதாவது ஒரு கண் பாதிக்கப்பட்டால் ஒரு கண்ணையே தீண்டலாம். அதற்ககுமேல் அல்ல என்று தடைச் செய்தது. ஆனால் இயேசு வன்மையற்ற வாழ்வு நெறியையேப் போதிக்கின்றார். இதுவே தீமைக்கு எதிராகப் போராட வேண்டிய நல்வழி எனக் காட்டுகிறார். இதை எண்பித்தவர்கள் மகாத்மா காந்தி. மார்ட்டின் லூத்தர், ஏனெனில் இவர்கள் அஹிம்சை சத்தியாகிரகம் ஆகிய வழிகளைப் பின்பற்றினர்

**மத் 5:41** எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்.

**மத் 5:42** உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள் கடன் வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்.

**மத் 5:43** உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள்.

**மத் 5:44** ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறை -வனிடம் வேண்டுங்கள்.

**மத் 5:45** இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்.

**மத் 5:46** உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?

**மத் 5:437** நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும்மேலாகச்செய்துவிடுவதென்ன?பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா?

**மத் 5:48** ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்

விளக்கம் : இயேசு இங்கு உலக மனித வெகுமதிகளை கடவுள் தரும் ஆசீர்வாதங்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்றார். உன்னை அன்பு செய்பவர்களை நீ அன்பு செய்தால் அதன் பயனாக உன் மீது உள்ள அன்பு அதிகரிக்கலாம். ஆனால் உன்னை அன்பு செய்யாதவர்களை அன்பு செய்தால் கடவுள் உன்மேல் கொண்டுள்ள அன்பு அதிகரிக்கும்.

---




## "எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோரை நாங்கள் மன்னித்தது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்" (மத் 6:12)

நிபந்தனை இல்லாமல் நம் ஒவ்வொருவரையும் அன்பு செய்து அரவணைத்து. புரிந்துணர்வோடு வழி நடத்தும் ஆண்டவர் இயேசு. ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் ஒரு நிபந்தனையை விதிக்கின்றார். மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால், உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.

இன்றைய சூழலில் நம் ஒவ்வொருவருக்கும் தேவையானது இதய பூர்வமான மன்னிப்பு, எனவே மன்னிப்பு பற்றிய சில முக்கிய குறிப்புக்களை நாம் மனத்திற்கொள்வோம்.

1. மன்னிப்பு என்பதன் அர்த்தம் வன்மத்தை மறப்பது, அல்லது தண்டிக்க வேண்டும் என்பதை விட்டு விடுவது.
2. உங்கள் இதயத்தில் வன்மம் வளர்ந்து புரையோடாதிருக்க ஆதாரமற்ற உறுத்தல்கள், எதிர்மறையான சிந்தனைகளை அகற்றி விடுங்கள்.
3. பெரிய தீங்குகளை மன்னிப்பதற்கு முன் ஆயத்தமாக, சிறிய தீங்குகளை மன்னித்துப் பழகுங்கள்.
4. வன்மம் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். காழ்ப்புணர்வு மனத்தையும், உள்ளத்தையும் பாதிப்பதுடன், உடலின் சக்தியையும் உறிஞ்சி விடும். உடல் ரீதியான நோய்களையும் உண்டாக்கக் கூடும்.
5. வன்மத்தின் அதிர்வலைப்பாதிப்புக்களை அறிந்து கொள்ளுங்கள். அது ஒரு முழுக் குடும்பத்தையே நஞ்சூட்டி எல்லோரினதும் வாழ்வை பாழாக்கி விடும்.
6. வன்மத்தை குழி தோண்டிப் புதையுங்கள்.
7. உடனடியாக மன்னிப்புக் கொடுப்பதற்கு முயற்சியுங்கள்.
8. மன்னிப்பு என்பது உங்களுக்கு நீங்களே அளிக்கும் கொடை என்பதை மறந்து விட வேண்டாம். சமாதானத்துடனும், அமைதியுடனும் வாழ்வதற்கு கடவுள் எமக்கு சுதந்திரம் அளிக்கின்றார்.
9. மன்னிப்பு என்பது கடவுள் மன்னிப்பளிப்பது போன்று உங்களை நீங்களே மன்னிப்பது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**தொகுப்பு**

**அருட்பணி. ரெஜிஸ் ராஜநாயகம் அடிகள்**

# செம்மறியின் சிலுவைப் பயணம்




**முன்னுரை :** இதோ ஓர் ஊர்வலம் தொடங்க இருக்கிறது. வரம் தர வந்தவரின் கரங்களை ஆணிகளால் அறையும் கொடுமை ஒன்று நிகழவிருக்கிறது. வாருங்கள், பக்தர்களாய் பயணம் செய்தால் பராக்கு மட்டுமே பார்க்க முடியும். செம்மறியின் சீடர்களாய் வாருங்கள். அப்போதுதான் அவரோடு சேர்ந்து சிலுவையை சுமக்க முடியும். இந்த பயணமாவது நம் மனங்களின் மாசுகளை நீக்கட்டும்

### முதல் நிலை :

இயேசு சாவுக்கு கையளிக்கப்படுகிறார்.

*சிந்தனை* : ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டிய கயவர்கள் முன் தீர்ப்பிற்காய் நிற்கிறது செம்மறி. கசாப்புக் கடையில் வாழ்வு தரும் வார்த்தைகள் எடுபடுமா? நீதிதேவனுக்கே தலைவிரித்தாடும் அநீதிக்கு நம் கைகளும் தானே ஒரு தாங்குச் சட்டம்?

*செபம்* : அநீதி கண்டு, அஞ்சி ஒடி, ஒலியாமல், நீதிக்காய் உரத்தக் குரல் கொடுக்க மனதைரியம் தருவாய் இறைவா! ஆமென்.

### இரண்டாம் நிலை

இயேசு சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்

*சிந்தனை* : வேர்களுக்கு நீர் வார்க்க வந்தவர்க்கு கிளைகள் கூடி சிலுவையைச் சுமத்துகின்றன. கூடி நின்ற கூட்டத்தில் இந்த அநாகரீக செயலைக் கண்டிக்க எவருக்கும் தெம்பில்லையே! நாமும் எத்தனை அநீதிகளை வேடிக்கை பார்த்தே பழகிவிட்டோம்.

*செபம்* : உம்மேல் உள்ள விசுவாசத்தை வார்த்தையில் மட்டுமல்ல, சமூக நீதிச் செயல்பாடுகளிலும் காட்டிட சக்தி தருவாய் இறைவா! ஆமென்.

### மூன்றாம் நிலை

இயேசு முதல் முறை விழுகிறார்

*சிந்தனை* : தளர்வு, தேவ குமாரனுக்குமா? பாவத்தில் விழ்ந்தவரைத் தூக்கிட வந்தவருக்கு வீழ்ச்சியா? உடலில்தான் தளர்ச்சி, உள்ளத்தில் உரமிருக்கிறது. எழுந்து தொடர்கிறார் பயணத்தை. படிக்கல்லாய் இல்லாவிட்டாலும் பிறரை தட்டிவிடும் தடைக்கல்லாய் இராது இருப்போம்.

*செபம் :* அநீதி என்னும் சுமையால் அடுத்தவரை வீழ்த்திடாமல், நீதி என்ற ஏணியால் உயர்த்திவிடும் நல்மனத்தை தருவாய் இறைவா! ஆமென்

### நான்காம் நிலை

இயேசு தம் தாயை சந்திக்கின்றார்

*சிந்தனை* : தாயின் விழிகளில் கண்ணீர் திரை
மைந்தனின் விழிகளில் செந்நீர் திரை
ஒருவரையொருவர் தேற்றிக்கொள்ள..
பிறரின் துன்பத்தில், ஏளனச் சிரிப்பா?
ஆறுதல் வார்த்தைகளா?
எது உன்னிடமிருந்தது!

*செபம் :* கலங்கி நிற்கும் உள்ளங்களுக்கு கருணை காட்டும் மனத்தை தருவாய் இறைவா! ஆமென்

### ஐந்தாம் நிலை

இயேசுவுக்குச் சீமோன் உதவி செய்கிறார்

*சிந்தனை* : அண்டத்தை ஆள்பவருக்கு ஓர் அணு உதவுகிறது. நீதியின் தாகம் தீர்க்க ஒரு சிற்றோடை ஓடி வருகிறது. ஏழைகள் மிகுந்த இவ்வுலகில் அன்னை தெரேசா மட்டும்தான் சேவைக்கென்று பிறந்தாரா? நம் கரங்கள் என்ன கட்டப்பட்டா கிடக்கின்றன?

*செபம் :* என்னால் முடிந்தவரை அல்ல, என் மூச்சு உள்ளவரை பிறருக்கு உதவிட உள்ளம் தருவாய் இறைவா! ஆமென்

### ஆறாம் நிலை

இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்

*சிந்தனை* : அநியாயமாய் கருகும் உண்மை கண்ட, ஒரு உள்ளம் உருகுகிறது. புலிகளெல்லாம் ஒதுங்கி நிற்கையில் புள்ளிமானொன்று புறப்பட்டு விட்டது. கருகும் உயிருக்கு கருணை காட்டாமல் எத்தனை இடங்களில் அநியாயம் கண்டும், நம் துணிச்சலைத் தூங்க வைத்துவிட்டு ஓடி மறைந்திருக்கிறோம்?

*செபம் :* துன்புறுவோரின் துயர் துடைத்து, துன்புறுத்து -வோரின் துகில் உரிக்க தைரியம் தருவாய் இறைவா! ஆமென்

### ஏழாம் நிலை

இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

*சிந்தனை* : ஒரு கம்பீர மலை நிலை குலைகிறது. இவர்கள் இன்னும் திருந்தவில்லையே எனும் எண்ணமும் சிலுவையின் பாரமும், இயேசுவை இரண்டாம் முறையும் வீழ்த்துகின்றது. உடல் ஒத்துழைக்க மறுத்தாலும் இலட்சியம் உந்தித் தள்ளுகிறது. வாழ்க்கையின் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கும் பலரைத் தூக்கி விடுகையில், இயேசுவையே தூக்கி விடுகிறோம் செய்வோமா?

*செபம் :* பிறரை வீழ்த்தும் சுயநலம் அழிந்து, வீழ்ந்து கிடப்போரைக் கைத்தூக்கிவிடும் நல்மனத்தை தருவாய் இறைவா! ஆமென்

### எட்டாம் நிலை

இயேசு எருசலேம் மகளிருக்கு ஆறுதல் கூறுகிறார்

*சிந்தனை* : ஒரு மலர் கசங்குவதையே பொறுக்காத பெண்மை. ஆசையாய் வளர்த்த நந்தவனத்தில் அக்கினித் தாண்டவம் ஆடுவதை அமைதியாய் பார்த்துக் கொண்டிருக்குமா? அழுது நிற்கும் பெண்களுக்கு ஆறுதல் மொழியளிக்கிறது சிலுவை சுமக்கும் செம்மறி. பனிப்போன்ற துன்பத்தை மலையாகக் காட்டி, அனுதாபம் பெறுவதில்தான் நாம் வல்லவர்கள்...?

*செபம் :* பிறரிடம் ஆறுதலைத் தேடுவதில் அல்ல, பிறர் துன்பத்தில் ஆறுதல் அளிப்பதில் இன்பம் கொள்ள அருள் தருவாய் இறைவா! ஆமென்

### ஒன்பதாம் நிலை

இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்

*சிந்தனை* : வெறி நாய்களின் கூட்டத்தில், வெள்ளை முயல் ஒன்று ஓடி ஓடி களைந்து சோர்ந்துவிட்டது. என்றாலும் மடிந்து விழும் கடல் மீண்டும் மூச்சு வாங்கிக் கொண்டு எழுவதுபோல் மூன்றாம் முறையும் எழுகிறார் இயேசு. தோல்வியாய், ஏமாற்றத்தால் விழுவது வீழ்ச்சியல்ல விழுந்தே கிடப்பதுதான் வீழ்ச்சி.

*செபம் :* வாழ்வின் சறுக்கல்கள் கண்டு வீழ்ந்து விடாமல் எதிர்வரும் தடைகளை எதிர்கொண்டு வெற்றிக்கொள்ள புதுத்தெம்பு தருவாய் இறைவா! ஆமென்

### பத்தாம் நிலை

இயேசுவின் ஆடை களையப்படுகிறது

*சிந்தனை* : பூமியைப் பசுமையால் போர்த்தியவர், ஆகாயத்தை மேகங்களால் மூடியவர், ஆடைகளை இழந்து நிற்கிறார். மீட்பால் மானிடத்தைப் போர்த்த வந்தவர், நிர்வாணப்படுகின்றார். ஆடைகள் களையாவிடினும் நாம் ஆணவப் பேச்சால் எத்தனை முறை மனித மாண்பை உரித்தெடுத் -திருக்கின்றோம்?

*செபம்:* பிறர் கொண்டுள்ள மாண்பை அதிகரிக்காவிடினும், அவமானப்படுத்தி அபகரிக்காமல் இருக்கும் மனத்தை தருவாய் இறைவா! ஆமென்

### பதினோராம் நிலை

இயேசு சிலுவையில் அறையப்படுகின்றார்

*சிந்தனை* : அணைக்க வந்த கரங்களில் ஆணி அறையப்படுகின்றது. ஒத்தடம் கொடுக்க வந்த கரங்கள் ஒடித்து போடப்படுகின்றன. பொங்கிய இரத்தத்தைப் பொருட்படுத்தாது செய்யப்படும் சடங்கை பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறார் இயேசு. பழிக்கு பழி வாங்க துடிக்கும் போதெல்லாம் நாமும் இதே சடங்கைத்தான் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் இயேசுவுக்கு.

*செபம் :* கண்ணுக்கு கண் அல்ல, எதிரிக்கும் அன்பு என்னும் நல்மனம் கொண்டு வாழ துணைபுரிவாய் இறைவா! ஆமென்

### பன்னிரண்டாம் நிலை

இயேசு சிலுவையில் உயிர்விடுதல்

*சிந்தனை* : அதர்மம் வெற்றி கொண்டதாய்க் கொக்கரிக்கின்றது. தர்மம் அமைதியாய் தொங்கிக் கொண்டிருக்கிறது சிலுவையில், ஓட்டைக் குடத்து நீரைப்போல, அந்த அப்பாவி ஜீவனின் மீதமிருந்த கடைசி சொட்டு உயிரும் செலவாகப் போகிறது. தருமத்தை தலைகவிழ்ந்து விட்டு, எத்தனை முறை நாம் மார்த்தட்டி மகிழ்ந்திருக்கின்றோம். சிந்தித்துப் பார்ப்போம்!

*செபம் :* தர்மத்திற்குத் தலைவணங்கி, அதர்மத்தை வேரறுக்கும் செயல் வீரர்களாய் வாழ்ந்திட அருள் தருவாய் இறைவா! ஆமென்

### பதின் மூன்றாம் நிலை

இயேசுவின் திருவுடல் அன்னை மரியின் மடியில்

*சிந்தனை* : சிதைக்கப்பட்ட சிற்பமொன்று சிற்பியின் மடியில் கிடத்தப்படுகிறது. வித்திட்டு.. விருட்சமாய் மரம் வீழ்ந்து கிடப்பதை ஏக்கத்தோடு பார்க்கிறாள் அன்னை மரி. என்றாலும், இறைத்திட்டம் நிறைவேறிய மனநிறைவு எத்தனை பெற்றோர்கள் நம் பிள்ளைகள் இத்தகைய சமுதாய விடியலுக்காய் விதைக்க தயாராய் இருக்கிறோம்?

*செபம் :* அடுத்தவரின் செயல்பாடு கண்டு ஆச்சரிய -ப்படுவதில் அல்ல, களமிறங்கி சமூக சீர்கேடுகளைக் களைந்தெரிவதில் ஆர்வம் தருவாய் இறைவா! ஆமென்

### பதினான்காம் நிலை

இறந்த இயேசுவின் உடலைக் கல்லறையில் வைக்கிறார்கள்


*சிந்தனை* : மேகங்கள் கூடி சூரியனைச் சுருக்குப் பையில் போட்டு கட்டிவிட முயலுகின்றன. இயற்கையையே வசப்படுத்த முடியாத மானுடமா இறைவனைப் புதைக்க இடந்தேடுவது... நடந்தும் விட்டது. தீமைக்குத் துணைபோக, தெய்வ பயத்தை வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டுச் சென்ற நாட்கள் எத்தனை? நம் வாழ்வில்

*செபம் :* பகுதிநேர கிறிஸ்தவர்களாக அல்ல, உண்மை என்றும் தாங்கிய முழு கிறிஸ்தவர்களாக வாழ அருள் தருவாய் இறைவா! ஆமென்

"மாறிடவே ஆசைப்படுகின்றேன்
என்னை மாற்றிவிடும் அன்பு தெய்வமே
உம் பாடுகளின் பாதைதனில்
நான் நடந்து வர அருள் தாருமே"

"வாருங்கள் யாத்திரையாக கர்த்தர் ஆலயம் செல்வோம், கர்த்தரின் ஆசீரைப் பெறுவோம்"

# பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத் திருவிழா



ஆயத்த வழிபாடுகள்

28.03.2017 – மாலை 4.30 மணிக்கு
திருச்சிலுவைப்பாதை, கொடியேற்றம்,

04.04.2017 – 06.04.2017 வரை
மாலை 4.45 மணிக்கு
திருச்சிலுவைப்பாதை, நவநாள்

போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- மடுத்திருத்தலத்தில் இருந்து – 15 கி.மீ
- உயிலங்குளத்தில் இருந்து – 9.5 கி.மீ

திருவிழா திருப்பலி 07.04.2017
காலை 7.00 மணிக்கு
ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி

காலை 10.00 மணி – திருப்பலி
நண்பகல் 12.00 மணி – திருப்பலி [அன்னதானம் வழங்கப்படும்]
மதியம் 1.00 மணி – பாரம்பரிய திருச்சுரூப ஆசந்திச் சடங்கு
மாலை 4.00 மணி – திருப்பலி

"கர்த்தர் நகரைக்காக்கா விட்டால் காப்பவன் கண் விழிப்பது வீண்" தி.பா 127:1


ஆலய மக்கள், பங்குமக்கள்,
அருட்சகோதரி, பங்குத்தந்தை

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

உங்களது அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்), நவீன பிரதியாக்கம் (டுப்ளோ), வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும், பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல், அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்





தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.co



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்